பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

மே 2025



## தேசமான்ய பாரா தாஹீர் நேர்காணல்

பக்கம் 34



வடிவமைப்பு சேவைகள்
கல்வி
பாடத்திட்டம்
கையேடுகள்
மீள் பதிப்பு
மொழிபெயர்ப்பு
சஞ்சிகைகள்
மலர்கள்
நூல்
மற்றும் தங்கள் விருப்பத்திற்கேற்ப தட்டச்சு மற்றும் வடிவமைப்பு வேலைகளை தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகளில் செய்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு..
+94 70 377 0731
designglitz123@gmail.com
DESIGN GLITZ

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – மே 2025

641


நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!


ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு :

அமின் மொஹமெட்

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி


எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...


**இராம வேல்முருகன்**

எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com


புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

நேச நெஞ்சங்களுக்கு இனிய வணக்கம்!

உழைக்கும் கரங்களுக்கு பெருமையும் வலிமையும் சேர்க்கும் ஒரு நாளான உழைப்பாளர் தினத்திலே, உங்களிடம் வந்திருக்கிறோம்.

கடின உழைப்பொன்றே உயர்வு தரும் என்றும். இதை வேதவாக்காக நினைத்து உழைத்து உறுதி பெறுவோம். உயர்வை எய்துவோம்.

அடுத்து, உலகில் எப்பக்கம் திரும்பினாலும், வலியோர் வன்மம் கொண்டு எளியோரை வீழ்த்துவதும், உயிர்களின் விலை மலிவாகிப் போய், கொத்தாக உயிரெடுப்பதும் நிகழ்ந்து கொண்டேதான் உள்ளது.

நிரந்தரமில்லா இவ்வுலகில் அன்பும் கருணையும் தான் மானுடத்தை இயங்க வைத்துக் கொண்டிருக்கின்றன. ஆயினும் பழிவாங்கும் உணர்வு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன், மனிதநேயமும் அருகி வருவது கண்கூடு. இனரீதியாக, மத ரீதியாக, நிற ரீதியாக, மாநில ரீதியாக மட்டுமல்லாமல், தேச ரீதியாகவும் பிளவுகள் விரிவடைந்து, மனிதனின் தலைக்கு விலையொன்றையும் நிர்ணயித்து இயற்கைக்கு முரணானதொரு வாழ்வியலோடு மனிதன் தன்னைப் பழக்கப் படுத்திக் கொண்டு விட்டான். நவீனம், நாகரீகம் என உலகம் வளர்ச்சியடைந்தாலும், வன்ம எண்ணங்களால் மனிதன் கற்காலத்துக்குத் திரும்பி விட்டதொரு துர்ப்பாக்கிய நிலையைத் தான் எங்கும் காண முடிகிறது. மனிதனை மனிதன் வேட்டையாடும் யுகம் இத்தோடு தீர்ந்து, வன்மங்கள் மறந்து மனிதநேயம் தழைக்க, தன்னாலான வழிமுறைகளை ஒவ்வொரு தனிமனிதனும் முயற்சித்தால், யுத்தபூமியாகி இரத்தம் சிந்தும் இப்பூவுலகின் நிலை மாறும். மனிதாபிமானம் பாரெங்கும் மையம் கொள்ளும். எல்லோரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளே எனும் எண்ணம் மேலோங்கினால், அமைதிப்பூக்கள் உலகை அலங்கரிக்கும். அனைத்து வதனங்களிலும் நிம்மதியெனும் புன்னகை பூக்க எம் எழுத்தாணி மூலம் குரல் கொடுப்போம். வன்முறைகள் தடுப்போம்.

நன்றி!

என்றென்றும் அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

# மனம் மாறிய திருநாள்

**மைதிலி சம்பத்** - ஹைதராபாத்

“அம்மா சுரத்தாவே இல்லை. பார்த்தியா, கல்யாணி?'' என்றான் தன் மனைவியைப் பார்த்து சிவா.

‘‘அதுக்கென்ன பண்றது? உங்கப்பா அதுக்குமேலே மூஞ்சியைத் தொங்கப் போட்டுண்டு ரூமை விட்டு வெளியவே வரல்ல. பகவத்கீதை புஸ்தகத்தை வெச்சுண்டு ஏதோ துறவி மாதிரி உட்கார்ந்திருக்கார்.. இருக்கட்டும். அவளுக்காகவே தெரிய வேண்டாமா? ஏதோ கல்யாணமாகி முதல் வருஷ ஆடிக்கு அம்மாவீட்டுக்குப் போற மாதிரி மூஞ்சியைத் தொங்கப்போட்டுண்டிருந்தா என்ன அர்த்தம்.? தான் பெத்த பசங்களுக்கு ஒத்தாசைக்குத்தானே கூப்பிடறா, சரி, போவோம் என்ற அந்த எண்ணமே வரல்லியே? பரலோகத்துக்கு இவ ரெண்டு பேரும் சேர்ந்தா போப் போறா?''

‘‘இதோ பாரு கல்யாணி! நாம ஒரு முடிவெடுத்தாச்சு. இப்படித்தான் பண்ணப் போறோம்னு. இதுக்குமேலே ஏதாவது பேசி பாவத்தைக் கொட்டிக்காதே! நாளைக்கு நமக்கு என்ன காத்திண்டிருக்குன்னு நமக்கு என்ன தெரியும்? இப்போ வாயை மூடிண்டு பேசாமே இரு.” என்றான் சிவா.

இரண்டு பேருக்கும் இரண்டு நாள் முன்னாடி நிகழ்ந்ததெல்லாம் நினைவுக்கு வந்தது. அன்னிக்கு தம்பி ஹரி வந்திருந் தான். அவன் “நான் அம்மாவை கொஞ்ச நாள் கூட்டிட்டு போகலாம்னு நினைச்சிகிட்டிருக்கேன்” என்றான்.

“ஏண்டாப்பா, என்ன விஷயம்?”என்று கேட்டாள் அம்மா.

‘‘பசங்களுக்கு ஸ்கூல் திறந்தாச்சு. கலாவுக்கு மெட்டர்னிடி லீவு முடிஞ்சி அவ ஆபீஸுக்குப் போற வேளை



வந்தாச்சு குழந்தை ரொம்ப சின்னதா இருக்கு. எனக்கு ஆயா, கிரட்ச்ன்னு விடறதுலெல்லாம் கொஞ்சம் கூட இஷ்டமில்லை. அதனாலதான் நீ வந்து இருந்தியானா கொஞ்சம் ஒத்தாசையா இருக்குமே, உன்னைக் கூட்டிண்டு போகலாம்னு நினைக்கிறேன்." என்றான்.

''அப்பாவையும் தானே?'' என்று கேட்டாள் அம்மா.

''இல்லைம்மா! இரண்டுபேரும் வந்தேள்னா இடம் கொஞ்சம் கஷ்டப் படும்னு தோணறது அப்பப்போ கலா வோட அப்பா அம்மா வந்துண்டு போயிண் டிருக்கா. அதனால, இடம் பிராப்ளமாக இருக்குமோன்னு தோணறது. அதனால, நீ மட்டும் வா" என்றான் ஹரி,

அதற்குள் கல்யாணி சிலிர்த்துக் கொண்டு வந்தாள். "சரி, நீங்க இரண்டு பேரையும் கூட்டிண்டு போயிட்டா சாயந்திரம் என் பசங்க ஸ்கூல்லேருந்து வந்தா என்ன பண்ணுவா? இவா இருக்கறதுனால குழந்தைகள் வந்தா சாப்பாடு போட்டு கவனிச்சுக்கறா. அந்த நிம்மதிலதான் நான் ஆபீஸ் போயிட்டு வரேன். இப்ப அதிலேயும் மண்ணைப் போடப்பாக்கிறியா.?" என்றாள் அவள்.

"அதுக்குத்தான், அப்பாவை நீங்க வெச்சுக்கோங்க, நான் அம்மாவை மட்டும் கூட்டிண்டு போறேன்" என்றான் ஹரி.

இத்தனை நேரம் பேசாமல் இருந்த ராகவன் வாயைத் திறந்தார். ''இதோ பாருடா, ஒரு கதை சொல்லுவா. குருடன் முடவனைத் தூக்கிண்டு போன் னான்னு. அந்த மாதிரி அவளுக்கு கண்ணே சரியாத் தெரியல்லே. எனக்கானா நடக்க முடியல்லே. இப்படி நொண்டி யும் முடமுமா ஒருத்தருக் கொருத்தர் ஒத்தாசையா காலத்தைத் தள்ளிட்டி ருக்கோம். எங்களை ஏண்டாப்பா ஆளுக்கு ஒரு பக்கம் இழுக்கறேள்?'' என்றார் வருத்தத்தோடு.

"அதனால் என்னப்பா, உள்ளூர்தானே? அப்பப்ப வந்து பார்த்துண்டாப்போச்சு" என்றான் சிவா.

"அப்பாவும் நேரத்துக்கு சாப்பிடணும்" என்று அம்மா இழுக்க, "ஏன், நீங்க இல்லாட்டா அப்பாவுக்கு நான் நேரத் துக்கு பார்த்து போடமாட்டேனா? என் மேல் நம்பிக்கை இல்லையா?" என்று பொரிந்தாள் கல்யாணி. சரி, இதற்குமேல் பேசி பிரயோஜனமில்லை என்று வாயை மூடிக் கொண்டுவிட்டாள் ராஜம்மா.

ஹரி நிம்மதியாக இன்னும் இரண்டு நாட்களில் வந்து கூட்டிப்போகிறேன் என்று சொல்லிவிட்டு புறப்பட்டுப் போய் விட்டான்.

ராஜம்மாவிற்கு மூஞ்சி தொங்கிப்போய் விட்டது. அதேபோலத்தான் ராகவனும் இருந்தார் அவர்கள் இரண்டுபேரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காமல் யாருடனும் பேசாமல் இரண்டு நாட்கள் தள்ளினார்கள், அழுதுகொண்டிருந்திருப்பார்கள் போலிருக்கிறது. அதுதான் யாருக்கும் தெரிய வேண்டாம் என்று ஒதுங்கியே இருந்தார்கள். முன்றாம் நாள் காலை சீக்கிரமாக எழுந்து சமையல் எல்லாம் முடித்து காத்திருந்தாள் கல்யாணி. தாமத மாகத்தான் வந்தான் ஹரி.

அதுக்குள்ளே இவர்களுடைய அத்தை, அதாவது ராகவனுடைய தங்கை வசந்தா வந்துவிட்டாள். "என்ன மன்னி, நீ என்னமோ சின்ன பிள்ளையோட போய் இருக்கப்போறியாமே?" என்று கேட்டாள்.

"ஆமாம். அப்படித்தான் சொல்லிண்

டிருக்கா” என்றாள் ராஜம்மா.

“சரி, இரு! ஹரியும் வரட்டும் பேசிக்கலாம்'' என்றாள் வசந்தா. அப்போது தான் ஹரியும் வந்து உட்கார்ந்தான். “ஏண்டாப்பா, எப்படி யிருக்கே? என்று கேட்ட வசந்தா தொடர்ந்தாள். “அம்மாவை கூட்டிண்டு போகப்போறியாமே? இப்போ அவா இரண்டு பேரையும் பிரிக்கறது அவசிய மாடா” என்று நேரிடையாகவே அவனி டம் கேட்டாள்.

‘‘எங்களுடைய கட்டாயம் அது. என்ன பண்றது? எனக்குக் குழந்தையைப் பார்த்துக்கறதுக்கு அம்மா வேணும். இங்க குழந்தைகளைப் பார்த்துக்க அப்பா இருப்பார். என் குழந்தை சின்னது தானே?. அதைப் பார்த்துக்கத்தான் அம்மாவை அழைச்சிண்டு போறேன். இதுல என்ன தப்பு?”என்று கேட்டான் ஹரி.

“ஏண்டா, இந்த வயசான காலத்தில அவங்களைப் பிரிக்கறமேங்கற குற்ற உணர்ச்சியே உங்களுக்கு இல்லையா? சரி, நீ வந்தப்பறம் உங்கிட்டே பேசிட்டு போகணும்னு உட்கார்ந்திருக்கேன். அங்கே உங்க அத்திம்பேர் எதுவும் சாப்பிடாமே உட்கார்ந்திருப்பார். நான் 11 மணிக்கெல்லாம் வந்துடறேன்னு சொல்லிட்டு வந்திருக்கேன். ஆமாம், உனக்கேன் இத்தனை லேட்டாச்சு?”

“அதுவா, எங்க பக்கத்தாத்துக்காரா நாலு வருஷமா எங்களோட நன்னா பழகிட்டா. இப்ப அவாளுக்கு ராஜ மந்திரிக்கு மாற்றாலாயிடுத்து அவா கிளம்பறச்சே ரொம்ப வருத்தமா இருந்தது. மூடு அவுட்டாயிடுத்து. சரி, அவங்களை அனுப்பிச்சுட்டு உடனே கிளம்பிவறோம். அதான் லேட்”

“ஓஹோ! நாலு வருஷம் பழகினவராளை விட்டுப் பிரியறது உங்களுக்கு அவ்வளவு கஷ்டமாயிருக்கு, இல்லையா? சரி, போகட்டும் ஏண்டா அப்பாவும் வந்தா இடம் போறாதுன்னு சொன்னியாமே? இருக்கிற இடத்திலே எல்லாரும் அட்ஜெஸ்ட் பண்ணிண்டு இருக்கறது தான் குடும்பம். நாங்க சின்னவாளா இருக்கச்சே இன்னும் இரண்டு அக்கா, அப்பா, அம்மா எல்லாரும் ஒண்ணாத்தான் இருந்தோம் அதுதான் உறவு, சமூக அட்ஜெஸ்ட்மென்ட். நாளைக்கு நமக்கு ஒண்ணுன்னா யார் ஒத்தாசைக்கு வருவா?”

‘அது சரி, அத்தை! அது அந்தக்காலத்



துக்கு சரி. இந்தக் காலம் எல்லாம் நியூக்ளியர் ஃபேமலி அத்தை.”

“அது சரி, நியூக்ளியர் ஃபேமலின்னாக் கூட உங்களுக்கு திடீர்ன்னு அம்மா வேண்டியிருக்கே? நியூக்கிளியர் ஃபேமலியாகவே மெயின்டெயின் பண்ண வேண்டியதுதானே?’ அம்மாவும் அப்பாவும் குழந்தைகளைப் பார்த்துக்க வேண்டியிருக்கே. இது கொஞ்சம்கூட நன்னா யில்லை. நான் சொல்றதைக் கேளு” என்று ஒரு பெரிய யானைப் படம் ஒன்றைக் காண்பித்தாள். “இந்த யானைக்கு 58 வயசாறது. போபால் ஜூல இருக்கு. அதுக்கு துணையா ஒரு பெண்யானை இத்தனை வருஷமா அதுகூடவே இருந்தது. ஆனா கேன்ஸர் வந்து அந்த பெண் யானை சமீபத்தில செத்துப்போச்சு.

அதோட பிரிவைத் தாங்கிக்கமுடியாத அந்த ஆண் யானை தறிகெட்டு நடக்க ஆரம்பிச்சு, கிட்டத்தட்ட மதம் பிடிக்கிற அளவுக்கு வந்துடுத்து. ஜூ அதிகாரிங்க என்னென்னவோ பண்ணிப்பார்த்தாங்க. சரியாகல்லே. அதுக்கு நிறைய பெரிய பெரிய பொம்மை எல்லாம் குடுத்துப் பார்த்தாங்க. ஒரு குளம் வெட்டி வெளை யாடவிட்டாங்க. அது சரியாகவே ஆகல்லே. அதனால, மல்லிகாங்கற இன்னொரு பெண்யானையை இதோடு சேர்த்துவிட்டாங்க. ஆனா, இந்தயானைக்கு மல்லிகாவைக் பிடிக்கல்லே. அதோட சண்டைபோட்டு அதைக் சாகடிச்சிடுத்து. இப்ப ம்யூசிக் தெரபின்னு ஆரம்பிச்சு முயற்சி பண்ணிகிட்டுருக்காங்கன்னு பேப்பர்ல போட்டுருக்கு.

ஆக, தன்னோட துணையைப் பிரிஞ்சது ஒரு ஐந்தறிவு படைச்ச மிருகத்தாலேயே தாங்கிக்க முடியல்லே அதை அப்படியே விட்டுடலாம்னு ஆறறிவு படைச்ச மனுஷனும் நினைக்கல்லே. எப்படியாவது முயற்சி பண்ணி அதைக் காப்பாத்தணும்னு தான் நினைக்கிறான் இப்படி இருக்கு உலகம். நீங்க என்னடான்னா பெத்த அப்பா, அம்மாவை ஆளுக்கொரு பக்கம் இழுக்கறீங்களே? ஐந்து வருஷம் பழகின உங்க பக்கத்துவீட்டு மனுஷாளை பிரியறது உங்களுக்குப் பிடிக்கல்லே.

இடம் போறாதுன்னு சொன்னியாமே நீ? ஏண்டா, உங்கம்மா ரொம்ப குட்டி ஃபிரேம் ஹைட்டும் குறைச்சல், வெயிட்டும் குறைச்சல். ஆனா, உங்கப்பா எப்படியிருக்கார்? ஆறடிக்கு, ஆகிருதியா பெரிய ஃபிரேமோட இருக்கார். குழந்தை எத்தனை பெரிசு இருக்குமோன்னு கவலை தான் பட்டுட்டிருந்தா எங்கம்மாவே. குழந்தை பெரிசாத்தான் இருக்குன்னு டாக்டர் சொல்லிட்டார். இத்தனை சின்ன ஃபிரேமுக்குள்லே பெரிய குழந்தை இருக்கே, இடம் பத்தல்லேன்னு இரண்டு மூணு மாசத்துக்கு முன்னாடியே இறக்கி வெச்சுட்டாளா உங்க அம்மா? பத்துமாசமும் சுமந்துதானே உங்க இரண்டு பேரையும் பெத்தெடுத்தா. நீங்க இரண்டு பேருமே நல்ல வெயிட். ஆனா, உங்கம்மா பிரசவத்துக்கு அப்பறம் ரொம்பவே தளர்ந்து போயிட்டா. டேய்! உங்க அம்மா உங்க அப்பாவைக் கல்யாணம் பண்ணிக்கறதுக்கு முன்னாடியே அவ எனக்கு ஃபிரண்டுடா. குடும்பத்துக்கு எவ்வளவோ செஞ்சிருக்கா. இப்படி வயசான காலத்திலே ஒருதருக்கொருத்தர் துணையா இருக்க வேண்டிய சமயத்தில இவங்களை பிரிக்கிறீங்களே? நீங்க இரண்டு பேரும் ஒரு இரண்டு நாள் ஒருத்தரை விட்டு ஒருத்தர் பிரிஞ்சி ருப்பீங்களா? ஏண்டிம்மா! நான் கேக்கறேன், உங்கம்மாவைக் கொண்டு வெச்சுக் கறதுதானே?”

“அது அத்தை, அப்பாவுக்கு பிபி, ஷுகர் எல்லாம் இருக்கு. அவருக்கு பார்த்துபார்த்து டயத்ல மருந்து குடுக்கணும், அப்பாவுக்கு இங்கேல்லாம் வந்து இருக்க சரிப்படாது அதனால்தான் அது நடக்கல்லே” என்றாள் ஹரியின் மனைவி.

‘’நியாயம்தான். ஆனா, உங்கப்பா, அம்மா பிரியக்கூடாதுன்னு நினைக்கிற நீ இப்படி இவங்களைப் பிரிக்க நினைக்க லாமா? அது தப்பில்லையா? இதுக்கு நான் ஒரு தீர்வு சொல்லட்டுமா? இதோ பார், இது ஒரு பெரிய காம்ப்லெகஸ். ரொம்ப நிறைய வீடுகள் இருக்கு. நிச்சயமா காலி வீடு எதாவது இருக்கும். நீங்க இப்ப இருக்கறது வாடகை வீடுதானேத அதைக் காலிபண்ணிட்டு இங்க சிவா வீட்டுப் பக்கத்துலேயே குடி வந்துடுங்கோ. பசங்களை பெரியவா பார்த்துப்பா. பெரியவா ஒருத்தரை ஒருத்தர் பிரியாமே சந்தோஷமா இருக்கலாம். அதனால, இரண்டு பேரையும் பிரிக்கறதுங்கறதை

மனசால கூட நினைக்காதே. அது முடியா துன்னா, சொல்லு, நான் என் அண்ணா மன்னியை எங்கூட கொண்டு வெச்சுக்கறேன். என் வீடு மட்டும் என்ன பெரிய மாளிகையா.? ஆனா, வயசான தம்பதிகளைப் பிரிக்கக்கூடா துங்கற மனசு எனக்கிருக்கு. நாங்க அட்ஜஸ்ட் பண்ணிக்குவோம். நாளைக்கு இயற்கையின் முடிவு எப்படியோ அப்ப பார்த்துக்கலாம். என் மேல உங்களுக்கு ரொம்ப பிரியம், மரியாதை. எனக்கு உங்களுக்கு சொல்ல கடமையும், உரிமையும் இருக்குங்கற நம்பிக்கையினால்தான் இதெல்லாம் சொல்றேன். இன்னிக்கே யோசிச்சு ஒரு முடிவு சொல்லுங்க'' என்றாள் வசந்தா.

'நீங்க சொல்றது எல்லாமே நிஜம்தான் அத்தை. நாத்தனாராக இருந்து உங்களுக்கு இருக்கிற இந்த நல்ல மனசு பிள்ளைகளான எங்களுக்கு இல்லாமே போயிடுத்து. மன்னிச்சுக்கோங்கோ, அத்தை'' என்றான் ஹரி.

“குடும்பம்ன்னா நாலும்தான் இருக்கும். விடுடா. அதான் இப்ப மனசு மாறிட்டேளே, சந்தோஷம்'' என்று வசந்தா சொல்ல, “இப்பவே நாங்க வீடு தேட கிளம்பறோம், அத்தை. ரொம்ப நன்றி'' என்றான் ஹரி.

அவர்களைத் தட்டிக் மொடுத்த வசந்தா நிறைந்த மனசுடன் உள்ளே திரும்பினாள். அங்கே இருந்த அவள் மன்னி ராஜம்மா கண்களாலேயே அவளுக்கு நன்றி சொன்னாள்.



# கையூட்டு

அமுது

**முனைவர் நா.அமுதாதேவி**

**இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி**

**கோவை**



நேரம் வேற இப்படி போய்க்கிட்டே இருக்கு...

எவ்வளவு சீக்கிரமா எந்திரிச்சாலும் எப்படியோ வேலை எல்லாம் முடியிற மாதிரி தெரியல... வீட்டுல ஒரு பொருளும் உருப்படியா இல்ல..

அந்த மிக்ஸி என்னடான்னா அரைக் கவே மாட்டேங்குது... கிரைண்டர் என்னவோ சரி பண்ணினாலும் ஓட ஓட உருகி போயிடுச்சு... ரேடியோ ஒன்னு தான் உருப்படியா பாடிட்டு இருந்துச்சு... இப்ப பத்து நாளா அதுவும் ஏதோ சார்ஜர் பின் போடும் இடம் உடைந்து போய் கிடக்கு. எந்த செலவு தான் கம்மி பண்ணி நான் இதை எல்லாம் சரி செய்ய போறேன்னு தெரியல... எப்ப பார்த்தாலும் செலவு மேல செலவுதான் வந்துகிட்டே இருக்கு .

மாத வருமானம் என்று தனக்கு வரும் 25 ஆயிரம் பணத்துல பாப்பாவுக்கு டியூஷன் பீஸ், சாப்பாட்டுச் செலவு, மளிகை, சீட்டு பெட்ரோல் என ஒரு பைசாவும் நிக்கிறது இல்லை. காசு வர்றதும் தெரியல.. போறதும் தெரியவில்லை. என்ன வாழ்க்கை இது.. இச்சே..என் வாழ்க்கை இப்படியே புலம்பல்லேயே போயிருமா தெரியலையே.. இந்த ஹவுஸ் ஓனர் வேற இன்னும் மூணு மாசத்துல வீட்டு வாடகை அதிகமாக கேட்பார். என்ன செய்ய இப்ப என்று ஆழமாக பெருமூச்சு விட்டு யோசித்தாள்.

இப்போ எல்லாம் இந்த பைக் வேர அடிக்கடி ரிப்பேர் ஆகிட்டே இருக்கு. அதுக்கு பேட்டரி வேற மாத்தணும். என்ன செய்யறதுன்னு ஒன்னும் புரியல என்று மனதிற்குள் புலம்பியபடி ..மணி ஏழாகியும் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கும் தன் மகளை எழுப்ப எத்தனித்தாள் .இதோ எந்திரிக்கிற அம்மா என்று சொல்லி எழுந்து பிரியா குளிக்கச் சென்றாள். ஒற்றைப் பெற்றோராக தன் மகள் பிரியாவை தன்னுடைய சம்பளப் பணத்தை மட்டும் துணையாகக்கொண்டு வளர்த்து வரும் அமுதா புலம்பியபடியே அலுவலகம் செல்லத் தயாராக இருந்தாள்.

அவசர அவசரமாகத் தன் மகளைப் பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டு தன் அலு வலகம் நோக்கிப் பறந்தாள், வழக்கமாக ஏதேனும் மின்னஞ்சல்கள் வந்துள்ளதா என்று கணிப்பொறியில் சரிபார்த்துக் கொண்டு தன்னை ஆசுவாசப்படுத்திய பின்

தன் இருப்பிடம் அமர்ந்து வழக்கமான தன்னுடைய பணிகளைச்செய்து கொண்டு இருந்தாள். பள்ளிக்கூடத்தில் இருந்து பிரியாவின் ஆசிரியர் குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பியிருந்தார் ஒற்றைப் பெண் குழந்தை மட்டும் உள்ளது என்ற சிறப்புப் பிரிவில் மத்திய அரசு பள்ளியில் தன் மகளுக்கு அட்மிஷன் வாங்கி இருந்தாள்அமுதா. அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் பிரியா மட்டுமே தனக்கு ஒரே ஒரு பெண் குழந்தை என்று தாசில்தார் அலுவலகத்தில் சான்றிதழ் வாங்கித் தர வேண்டும். கடைசி ஆண்டு அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் கடுமையாகத் திட்டு வாங்கிக் கொண்டு கடைசி நேரத்தில் அந்த விண்ணப்பத்தைக் கொடுத்தது இன்றும் நினைவில் விட்டு நீங்காமல் இருக்கிறது அவளுக்கு,

இந்த ஆண்டு மீண்டும் சான்றிதழை ஒப்படைக்க வேண்டும் அதுவும் மூன்று நாட்களுக்குள் என்ற தகவல் வந்ததும் பரிதவித்துப் போனாள். எங்கு எங்கெல்லாம் சென்று அலைய வேண்டி வருமோ என்று நினைத்துக் கொண்டு பள்ளியின் எதிரில் சான்றிதழ் பெற்று தரும் அலுவலகம் ஒன்று இருந்தது. அங்கு சென்று மாலையில் விசாரித்துப் பார்க்கலாம் என்று முடிவு செய்து அலுவலகம் முடிந்ததும் நேராக அங்கு போய் விசாரித்துப் பார்த்தாள். அந்த சான்றிதழை அங்க வாங்க முடியாது எனவும் தாசில்தார் அலுவலகத்திற்குத்தான் செல்ல வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள், எனவே அவள் மிகவும் குழப்பத்துடன் வீடு வந்து சேர்ந்தாள். அவள் நண்பனுக்குத் தகவல் கொடுத்துவிட்டு இருவரும் தாலுகா அலுவலகம் அருகில் உள்ள வக்கீல் ஆபீஸ் சென்று இது குறித்து விசாரித்து வரலாம் என்று இருவரும் கிளம்பி கொண்டு இருந்தார்கள்.

ஒருவழியாக கோர்ட்டு வளாகம் அருகில் இருந்த ஒரு நோட்டரி வக்கீல் அலுவலகத்தை அமுதாவும் அவன் நண்பன் சுந்தரம் சென்று அடைந்தார்கள், வாங்க.. என்ன வேணும்.. என்று ஒருவர் வந்து கேட்க. அபிடவிட் ஃபார்ம் வேண்டும் சார் என்று நாங்கள் சொல்ல .. அவர் சென்ற ஆண்டு பள்ளிக்கூடத்தில் கொடுத்த அஃபிடபிட் பார்ஃம் கொடுங்க என்று கேட்டு அதன் நகலை வாங்கிக் கொண்டு முத்திரைத்தாளில் அதனைத் தட்டச்சு செய்து கொடுத்தார்.

நூறு ரூபாய் முத்திரைத்தாளுக்கு 150 முதலிலேயே பேரம் பேசி தட்டச்சு செய்து விட்டோம். தாசில்தாரிடம் நாங்களே கையொப்பம் வாங்கித் தருகிறோம். பாப்பா வின் பிறப்புச் சான்றிதழ், ஆதார் அட்டை, ரேஷன் கார்டு இவற்றையெல்லாம் கொடுங்க என்று சொல்லி வாங்கிக்கொண்டார். அப்படியே ஆயிரம் ரூபாயும் கொடுங்க என்று வாங்கினார். கொண்டு போனதே 500 ரூபாய் தான் சுந்தர் 500 ரூபாய் அவருடைய ஜிபே எண்ணுக்கு அனுப்பினான். மூன்று நாள் கழிச்சு போன் செய்கிறோம் என்று சொல்லி எங்களை அனுப்பிட்டார். என்னடா ஜான் ஏறினாதான சறுக்கும் ஆனா எனக்கு என்னடானா ஜான் ஏறனும்னு நினைச்சாலே சறுக்கும் என்ன வாழ்க்கையோ எப்பப் பார்த்தாலும் எனக்குன்னு தான் எங்கிருந்து தான் பிரச்சனைகள் வந்து எப்படியோ விக்ரமாதித்தன் முதுகில் உள்ள வேதாளம் போல என்னை வந்து ஒட்டிக்கொள்கிறது எப்பதான் எனக்குன்னு நான் வாழ போறேன்னு தெரியல.. என்று தன் நண்பனிடம் புலம்பியப்படியே இருவரும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

மூன்று நாள் கழித்து வக்கீல் போன் செய்தார். ஒருவேளை அவர் அபிடவிட் தாசில்தாரிடம் இருந்து வாங்கி விட்டாரோ என்று ஆர்வமாக தொலைப்பேசியை எடுத்துப் பேசினாள் அமுதா. ஆனால் வக்கீல் சொன்ன தகவலைக் கேட்ட பொழுது தலையே சுற்றிக்கொண்டு வந்தது

அமுதாவிற்கு. அபிடவிட் வாங்க 7000 ரூபாய் வேண்டும் என வக்கீல் கேட்கிறார். 7000 ரூபாயா "என்னய்யா சொல்றீங்க" என்று அவரிடம் அதிர்ச்சியில் வினாவை எழுப்ப.. என்னம்மா செய்யறது விஏ அலுவலகம், ஆர்.ஐ அலுவலகம், தாலுக்கா அலுவலகம் என எல்லா இடத்திலும் பணம் தரணும் எங்க ஸ்டாபுக்கு பணம் தந்து பெட்ரோலுக்கு காசு கொடுத்து அனுப்பனும் நாம போற நேரத்துக்கு அவங்க இருக்கிறாங்களான்னு தெரியல அதனால கொஞ்சம் காசு தரணுமா என்று சொன்னார். காச பார்த்தா உனக்கு வேலை ஆகாதும்மா,, இப்போ எல்லாம் காசு இல்லாம ஒன்னும் நடக்காது தெரிஞ்சுக்கோ என்றார். இதைக் கேட்டதும் தலை சுற்றியது அமுதாவிற்கு,

எந்தச் செலவினைக் குறைத்துக் கொண்டு இவ்வளவு பெரிய தொகையைக் கொடுக்க.. ஆத்திர அவசரத்திற்கு என்று கையிலே ஒரு பத்தாயிரம் தான் இருக்கு என்ன செய்ய.. நண்பனிடம் இது குறித்து பேசியதும் சரி நேரில் போய் பேசிப் பார்ப்போம் என்று சொன்னான் கையில் உள்ள 2000 ரூபாய் பணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு சென்றோம். அலுவலகத்தில் அவர் இல்லை. அங்கு போனதும் வக்கீல் அங்கே அலுவலகத்தில் இல்லை. அவரின் உதவியாளர் மட்டுமே இருந்தார். நீங்க வருவீங்க 2000 ரூபாய் தருவீங்க அதை வாங்கி வைக்கச் சொன்னாருங்க வக்கீல், எனக்கு வேற ஒன்னும் தெரியாதுங்க என்றார்.

சரி சார்.. ஏதோ நாங்க ஏழைங்க.. ஒன்னும் இல்லாத காரணத்தினால் தான் என் பொண்ண அரசாங்க சலுகை பெற்றுப் படிக்க வச்சுக்கிட்டு இருக்கேன். எப்படி சார் நான் ஏழாயிரம் ரூபாய் தருவேன். ஏதோ கொஞ்சம் பார்த்து உதவி செய்யுங்க என்று சொல்லிவிட்டு வீடு வந்து சேர்ந்தார்கள் இருவரும். மேலும் நான்கு நாட்கள் சென்ற பின்பு வக்கீல் போன் செய்தார். அம்மா உங்க அபிடவிட் ரெடியாயிடுச்சு அத ஆபீஸ்ல வந்து வாங்கிக்கோங்க.. என்று சொன்னார். அப்பாடா என்று இதைக் கேட்டதும் அவளுக்கு மகிழ்சியாக இருந்தது அவளுக்கு. காலையில் தான் அவள் வகுப்பு ஆசிரியர் பெண் குழந்தைசான்றிதழ் இன்னும் வரவில்லை நாளை பள்ளிக்கூடம் வரும் பொழுது சான்றிதழ் ஒப்படைக்கவில்லை என்றால் அடுத்த மாதம் முதல் முழுமையான கல்விக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்று சொன்னார். ஒருவழியாக சான்றிதழ் வாங்கி விட்டதாக வக்கீல் சொல்ல நண்பனை அழைத்துக்கொண்டு வக்கில் அலுவலகம் செல்ல காத்திருந்தார்கள். வாங்க அம்மா.. உட்காருங்க என்று சொல்லியபடியே சான்றிதழை எடுத்து வர அலுவலகப் பணியாளர் ஒருவரை அனுப்பினார் இன்னும் 1800 ரூபாய் தரணுமா நீங்க என்று சொன்னார். அலுவலகம் செல்லும் முன்பாக இறுதியாக தான் வைத்திருந்த 1500 ரூபாயிலிருந்து ஆயிரம் மட்டும் தனது பர்சில் வைத்துக்கொண்டு 500 ரூபாயை நண்பனிடம் எதற்கும் நீ வைத்துக் கொள். கேட்டா கொடுப்போம் என்று சொல்லி அவன் கையில் திணித்திருந்தாள். எப்படித்தான் வக்கீலுக்கு இது தெரிந்ததோ.. கழுகுக்கு மூக்கில் வேர்ப்பதைப் போல தன்னிடம் காசு உள்ளதை சரியாகப்புரிந்து கொண்டாரே என்று புலம்பியபடி அவர் கேட்ட தொகையைக் கொடுத்து சான்றிதழை பெற்றுக்கொண்டோம்,

இவ்வளவு தொகையை லஞ்சமாகப் பெற்றுக் கொண்ட பொழுதும் அலுவலகப் பணியாளர் அந்த வக்கீலை எங்களின் முன்பாகவே கல்வி சேவையில் மகத்தான பணியாற்றும் நபர் என்றும் கல்விப் பணிக்காக எதுவும் செய்வார் என்றும் புகழாரம் சூட்டினார். என்னமோ சும்மா வாங்கிக் கொடுத்ததைப் போல மனதிற்குள் புன்னகைத்தபடியே இருவரும் நன்றி சொல்லி வீடு வந்து சேர்ந்தோம்.

வீட்டிற்கு வந்து கடந்த ஆண்டு வாங்கிய சான்றுகளுடன் ஒப்பிட்டு பார்த்தோம். அதில் முதல் பக்கத்தில் அலுவலக முத்திரை இல்லாமல் இருந்தது. இறுதிப் பக்கம் மட்டும் தாசில்தார் அலுவலகத்தில் முத்திரையைப் பெற்று இருந்தனர். என்னடா இது இவ்வளவு செலவு செய்தும் இப்படி நமக்கு ஒரு நிலைமை என்று வருந்திக்கொண்டு. என்னவோ நடப்பது நடக்கட்டும். நாளை முதலில் இதைப் பள்ளியில் கொடுப்போம். பிரச்சனை வந்தால் பின்பு பார்த்துக் கொள்வோம் என்று சொல்லி இப்படி நீங்கள் முத்திரையை முதல் பக்கத்தில் வைக்கவில்லை நாளை இந்தச் சான்றிதழில் ஏதேனும் பிரச்சனை என்று பள்ளிக்கூடத்தில் சொன்னால் தருகிறேன் நீங்கள் முதல் பக்கத்தில் மட்டும் சான்றிதழை வாங்கிக்கொண்டு முத்திரையைப் பெற்று தர வேண்டும் என்று வக்கீல் இடமும் தகவல் சொல்லிவிட்டு. அடுத்த நாள் தேர்வு முடிவுகளை அறிந்து கொள்வதற்காகப் பள்ளி சென்றோம்

ஏகப்பட்ட கூட்டம் மணி வேறு ஒன்பதை நெருங்கிக் கொண்டு இருந்தது. 9.20 மணித்துளிக்கு அலுவலகம் வேறு சென்றாக வேண்டும். ஒரு வழியாக சான்றிதழ் கொடுத்து தேர்வு முடிவு பெற்றுக் கொண்டு அவளை நன்கு படிக்கச் சொல்லியும் படிக்காவிடில் கண்டிக்கும் படியும் வகுப்பு ஆசிரியரிடம் சொல்லி விட்டு அலுவலகம் வந்து சேர்ந்தாள்.

அன்றைய தினம் உறங்கும் பொழுது ஒரு வழியாக இந்தப் பிரச்சனை ஓய்ந்தது. இன்னும் எனக்கு அடுத்த பிரச்சனை எப்பொழுது வருமோ அதை எதிர்கொள்ளத் துணிவையும் நம்பிக்கையும் கொடு என்று வேண்டிக் கொண்டு கண் உறங்கிப் போனாள். எப்படி அவள் அறிவாள் காலம் அவளுக்குப் பல மனிதர்களின் மூலம் இன்னும் பல அனுபவங்களைக் கற்றுத்தரக் காத்துக்கொண்டு இருக்கிறது என...

# நிறம் மாறும் மனிதர்கள்

....

தேவைகள் கண்ட போது
தினமொரு முகங்கள் காட்டி
பாவைபோல் உள்ளம் கொண்டு
பழிகளை ஏற்றிச் செல்வர்
சாவினை இழுத்து வந்து
தவறுகள் செய்ய வைப்பர்
மேவிடும் எண்ணம் இல்லை
மேன்மைகள் சிறிதும் இல்லை

வஞ்சக வலையை நெய்து
வழிகளை அடைத்து வைப்பர்
நெஞ்சகம் முழுதும் தீய
நெறியிலா செய்கை யாகும்
கொஞ்சமும் ஈர மின்றி
கொடுத்திடும் தொல்லை கண்டால்
நெஞ்சுரம் வற்றிப் போகும்
நிறைந்திடும் துன்பம் எங்கும்

பற்களைக் காட்டி நிற்பர்
பாழ்மனம் இருளும் அன்றோ?
சொற்களும் இனிமை யாகும்
சூழ்ச்சிகள் உள்ளம் கொள்ளும்
விற்கணை தொடுக்கும் பாயும்
வெளிச்சமும் இருளாய்ப் போகும்
பற்றிடும் முட்கள் போல
படர்ந்திடும் வஞ்சம் தைக்கும்

தேவைக்குச் சிரித்துக் கொல்வர்
திரும்பிடும் பக்கம் எல்லாம்
பாவிகள் மனமும் தீதாம்
பழக்கமும் பக்கம் பார்க்கும்
நாவினில் விடமும் கொண்டு
நகைத்திடும் புறத்தே யாவும்
பூவினில் நாக மாக
புகுந்திடும் தீயர் உள்ளம்

நன்மைகள் கிடைக்க நாளும்
நகராது காத்து நிற்பர்
இன்மைகள் இவரின் சொத்தாம்
இதழ்களும் இனிக்கும் தேனாய்
வன்செயல் ஈசல் போல
வந்திடும் கணக்கி லாது
நன்றிலா இவரை நீங்கி
நகர்ந்திடல் நாளும் நன்றே...

தென்றல் கவி - தமிழ்ச்சிட்டு

# உளி பேசும் மொழி

**நெல்லை க. சோமசுந்தரி**

கவிஞர். எழுத்தாளர் தொல்லியல் ஆர்வலர்

சென்னை, தமிழ்நாடு



**26**

இப்புவியில் வாழும் அனைத்து ஜீவராசிகளும், அதனதன் வாழ்க்கைப் பயணத்தில் தன் வாழ்வின் நோக்கத்தினை அறிந்தோ, அறியாமலோ, தனக்குரிய காரியங்களை அதாவது செயல்களை நித்தமும் செய்து கொண்டு இருக்கின்றன. ஒவ்வொரு உயிரினங்களின் செயல்பாடுகளும், தன்னிலை மறந்து ஈடுபாட்டுடன் செய்யும்போது, அதன் தனித்துவமானது வெளிப்படுகிறது. அவ்வகையில் வேடர்க் குலத்தில் பிறந்து, தன்னுடைய அளப்பரிய அன்பின் மூலம் ஆறே நாட்களில் இறைவன் மீது கொண்ட பக்தியினால் முக்தியடைந்த 'திண்ணன்' என்ற இயற்பெயர்க் கொண்ட, 63 நாயன்மார்களுள் முதன்மையானவருமான கண்ணப்ப நாயனார்ப் பற்றிய புராண விடயத்தைத் தற்போது உளியானது தங்களுடன் பேச இருக்கிறது.

அதன் வழியே, திண்ணன் என்ற வேடன் திருக்காளத்தி மலை மீது எழுந்தருளியுள்ள 'குடுமி தேவரை' வணங்குதல் நன்மைப் பயக்குமென்று தன்னுடன் உள்ள நண்பனான 'நாணன்' என்பவனின் மூலம் அறிந்து, இறைவனைக் காண 'பொன்முகலியாற்றின்' கரையில் பன்றி இறைச்சியை நெருப்பில் வேக வைத்து, அதன் சுவையைத் தன் நாவினால் சரியாக இருக்கிறதா எனச் சுவைத்ததோடு மட்டுமல்லாமல் பொன்முகலியாற்றின் நீரை வாயில் தேக்கி, பூமாலையைத் தன் தலைமுடியில் சூடிக்கொண்டு, இறைவனைப் பூஜிப்பதற்காக அடர்வான காட்டிற்கு வந்தடைந்தார். அங்கு வீற்றிருக்கும் 'குடுமித் தேவர்' என அழைக்கப்படும் லிங்கத்தின் மீது தன் வாயில் கொண்டு வந்த நீரினை உமிழ்ந்து, திருமஞ்சனம் செய்து, தன் தலையில் உள்ள பூமாலையை இறைவனுக்குச் சூட்டி, பன்றி இறைச்சியை, இறைவன்



முன் வைத்து பூஜைச் செய்து இரவு முழுவதும் உறங்காது, இறைவனைத் திண்ணன் காத்து நின்றார்.

மறுநாள் காலையில் மீண்டும் இறைவனுக்கு இறைச்சியினைக் கொண்டு வரக் கீழே காட்டிற்குச் சென்றார் அப்பொழுது, வழக்கமாக விதிப்படி பூஜைச் செய்யும் கோச்சாரியர் இறைவன் முன் இறைச்சி மற்ற இதர பொருட்கள் சிதறி இருப்பதைப் பார்த்து அதிர்ச்சியுற்று 'பொன்முகலி யாறு' சென்று நீரைக் கொண்டு வந்து, சுத்தப்படுத்தி திருமஞ்சனம் செய்து, பூக்களால் இறைவனை வழிபட்டுச் சென்று விடுகிறார். மீண்டும், திண்ணனார்த் தேன் கலந்த பன்றி இறைச்சியுடன் வந்து, சிவகோச்சாரியாரின்

அருமை . ..மிக மிக சிறப்பு . திருக் காளத்தியப்பரின் அருள் பெற்று முக்தியடைந்த ஜீவராசிகள் பற்றிய ஆன்மிக செய்தியும் கோயில் சிற்பக் கலை குறித்த கட்டுரை அருமை .

கவிச்சுடர். க.நா. கல்யாணசுந்தரம்

படைத்த பொருட்களை அகற்றி, தான் கொண்டு வந்ததைப் படையலிட்டு வழிபட்டார். இந்நிகழ்வுகள் தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெற்றது. ஆறாம் நாள் சிவகோச்சாரியார் இறைவனுக்கு இறைச்சியை வைத்து செல்லுவது 'யார்'? என்பதை அறிய ஒரு மரத்தின் பின்னால் மறைந்து நின்றார்.

திண்ணனாரும் வழக்கம்போல், இறைச்சி மற்றும் இதர பொருட்களைக் கொண்டு வரும் போது வழியே 'தீ நிமித்தம்' கண்டார். மனம் பதைப்புடன் காளத்தியப்பரை அடைந்தபோது, அவரது வலது கண்ணிலிருந்து செந்நீர் (குருதி) வடிவதைக் கண்டு துடிதுடித்து, அக்காட்டில் உள்ள பலவகை மூலிகை களைக் கொண்டு வந்து குருதி வடியும் கண்ணில் பிழிந்தார். ஆனால், குருதி வடிவது நிற்காததால், 'ஊனுக்கு ஊனிடல்' என்ற பழமொழிக்கு ஏற்ப, தன் அன்பினால் தனது வலது கண்ணைப் பெயர்த்து எடுத்து இறைவனின் வலது கண்ணில் பதித்தார். உடனே குருதி நின்றதைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைந்தார். அப்பொழுது இறைவனது அடுத்த இடது கண்ணிலிருந்தும் குருதி வழிவதைக் கண்டார். அப்போது, சிறிதும் தயக்கமின்றி, தமக்குத் தான் அக்குருதியினை நிறுத்தக்கூடிய உபாயம் தெரியுமென்று, கண்ணின் இடம் அறிவ தற்காக தம் வலது காலை எடுத்து இறைவனது இடது கண்ணில் வைத்தார். பின் தமது இடது கண்ணில் அம்பை ஊன்றினார். அப்போது இறைவன், திண்ணனாரைத் தடுத்து, 'நில் கண்ணப்ப! என மூன்று முறைக் கூறி, பேரன்பனே! என் வலப்பக்கத்தில் நிற்க! எனக் கூறி தன்னுள் அவரை ஆட்கொண்டார். இறைவன் மீது கொண்ட, தம் பேரன்பின் மிகுதியால் தன் கண்ணினைப் பெயர்த்து இறைவனுக்கு அளித்ததால் அவர் 'கண்ணப்பனார்' என்று அழைக்கப்படுகிறார்.



'சீ- காளம் -அத்தியை' போன்று கண்ணப்ப நாயனாரும், திருக்காளத்தி யப்பரின் அருகில் இருந்து காட்சியளிக்கி றார். இந்த நிகழ்வானது சிற்பங்கள் மூலம், உண்மை நிகழ்வினைக் கண்முன்னே காண்பது போன்று தத்ரூபமாக வடிக்கப் பட்டுள்ளது. அச்சிற்பத்தில் மிக நுட்பமாக ஒரு வேடனைக் குறிக்கக்கூடிய அனைத்து வகையான குறியீடுகளும் சரியான அளவில் மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளது. வேடர்களின் தலையில் அணியப்பட் டிருக்கும் வேடர்களின் பறவையின் இறக்குகளாலான கிரீடம், அவர்களின் தோள் பட்டையில் தொங்கிக் கொண்டி ருக்கும் வில் மற்றும் முழங்கையின் மேற்பகுதி, கைகளில் மணிக்கட்டு மற்றும் கணுக்கால்களில் அணிந்திருக்கும்



தண்டைப் போன்ற அணிகலன்கள், கழுத்தில் அணிந்திருக்கும் காட்டு பூக்களின் மாலைகளும், ஒரு வேடனை அச்சு அசலாகக் கண் முன்னே செதுக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், கண்ணப்ப நாயனார்த் தனது இடது கையில் அம்பினைத் தனது இடது கண்ணின் மீது, வைத்திருப்பதையும் அதனை இறைவன் கைக் கொண்டு தடுப்பதையும், மிக நேர்த்தியாக அச்சிற்பத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இறைவனின் இடது கண் மீது கண்ணப்பனார்த் தனது வலது காலை வைத்திருப்பதும், இறைவனுக்குச் சூட்ட பெற்ற பூமாலையும் அச்சிற்பத்தின் நுட்பத்தினை அழகாக வெளிப்படுத்துவது மட்டுமின்றி, உண்மை நிகழ்வினை நம் புறக் கண்ணால், பார்த்துக் கொண்டிருக்கிற அனுபவத்தைப் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக ஏற்படுத்தும். மேலும் இச்சிற்பத்தினை உற்று நோக்கினால் கண்ணப்ப நாயனாரின் வலது மற்றும் இடது அவயங்களைத் தெள்ளத் தெளிவாகப் பிரித்து உணரக்கூடிய வகையில் இச்சிலையானது மிக நுட்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

இத்திருக்கோவிலில் அமையப் பெற்றுள்ளமற்றும்ஒருஇடத்தில்கருங்கற்களால் எழுப்பப்பட்டுள்ள மண்டபங்களைத் தாங்கி நிற்கும் கற்தூண்களானது, சிங்க முகச் சிற்பங்களுடன், பல அழகிய வேலைப் பாடுகளுடன் வடிவமைக்கப் பட்டுள்ளது. அத்தூண்களைக் காணும் போது, சிங்கத்தின் வலிமையையும், அதன் திண்மையையும் நம் கண் முன்னேக் காட்சியாகத் தெரிகிறது. அது மட்டுமின்றி, இவ்வேலைப்பாடானது, அங்கு நிறுவப்பட்டுள்ள, அனைத்துத் தூண்களிலும், அச்சில் வார்த்து எடுத்தது போல் அதன் அளவீடுகளும், கலைநயமும், மிகச் சிறிய அளவில் கூட, வேறுபாடின்றி அச்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் மூலவரின் கருவறைக்குச் செல்லும் மண்டப வாயிலுக்கு முன்பு நிறுவப்பட்டுள்ள குதிரை மீது அமர்ந்து, போர்க்களத்தில் வீரத்தினை வெளிப் படுத்தக்கூடிய வகையில் வடிக்கப் பட்டுள்ள போர் வீரனின் சிற்பமானது, அதனைச் செதுக்கிய கலைஞனின் கை வண்ணத்தை மட்டுமல்லாமல் சிற்ப கலைநுட்பத்தையும்வெளிப்படுத்துகிறது. மேலும், குதிரையின் சிற்பமானது,



முன் கால்கள் இரண்டும் பாதியாக மடங்கி, மேலே தூக்கி நிற்பது போன்று அமைக்கப்பட்டிருப்பது, அக்குதிரைப் போர்க்களத்தில் நிற்பதனை நம் மனத் திரையில் கொண்டு சேர்க்கிறது. அக் குதிரையில் முன்னங்கால்களில், கீழ்ப் பகுதியில் மானிடர்கள் நிற்பது போன்ற சிற்பமானது மண்டபத்தின் தூணோடு ஒன்றிணைந்து எழுப்பப்பட்டுள்ளது.

இதுபோன்று, கலைநயமிக்க அழகி யலை வெளிப்படுத்தக்கூடிய, பல வகை யான மிகச் சிறிய சிற்பங்களானது, ஒவ்வொரு தூண்களிலும், ஒரே மாதிரி யான அளவீட்டுடன் அச்சிற்பத்தின் தன்மை மாறாமல் வடிக்கப் பட்டுள் ளது. அத்தூண்களின் அழகினை மேலும் மெருகேற்றுகிறது. இவ்வகை யில், நூற்றுக் கணக்கில் அமைக்கப்பட்ட, தூண்களால் எழுப்பப்பட்டுள்ள நூற்றுக்கால் மண்டப மானது, கோயிலின் உட்புற கட்டமைப்பின் தொழில்நுட்பமானது பல நூற்றாண்டுகள் கடந்தும், இன்றும் அதன் நேர்த்தி, சிறிதும் குன்றாமல் இத்திருத்தளத்திற்கு மாட்சிமையினை வழங்கிக்கொண்டு இருக் கிறது. அதனைப் போற்றும் வகையில், திருக்கோயிலின் முதன்மை வாயிலான தட்சிணக் கோபுரம் என்றழைக்கப்படும் தெற்குக் கோபுரமானது, கோயிலின் கம்பீ ரத்தை மிகஅற்புதமாக வெளிப்படுத்துகிறது.

இப்பூவுலகில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும், மிகவும் இன்றிமை யாதது காற்று. அக்காற்றே இன்றைய நவீன அறிவியலில் ‘ஆக்சிஜன்‘ என்று அழைக்கப்படும் வாயுவாக, அனைத்து உயிர்களும் அதன் உயிர்ப்பு தன்மையின் உறுதி செய்வதற்கு ஆதாரமாக விளங் குகிறது. இந்த வாயுவானது, பகல் நேரங்களில் தாவரங்களின் மூலம், அதன் ஒளிச்சேர்க்கை எனும் செயல்பாட்டிற்கு உணவு தயாரிக்கப்படும் போது வெளிப்படுகிறது. மற்ற உயிரினங்கள் சுவாசிப்பதற்கு, அது உயிர் மூச்சாக உள்ளது. மானிடர்களால் உட்சுவாசிக்கும் காற்றானது, உட்சென்று, உடலுக்கான சக்தியினை வழங்குவதோடு மட்டு மின்றி, அக்காற்றானது சக்தியாக மாறும் போது எஞ்சியுள்ள கழிவு, கார்பன்டை ஆக்சைடாக வாயுவாக, மாறி வெளிப்படுகிறது. அதனையே, தாவரங்கள் ஆதாரமாகக் கொண்டு ஒளிச் சேர்க்கையின் மூலம் தயாரிக்கப் படும் உணவிற்கு உதவுகிறது.

இதன் வழியே, தாவரங்களுக்கும், மற்ற ஜீவராசிகளுக்கும் இடையே உள்ள ஆதாரப் பந்தத்தினைப் புரிந்து கொள்ள முடியும். இதனையே, அறிவியலில் ‘உணவு சங்கிலி‘ எனும் தொடர்பினை விளக்குகின்றன. இவ்வகையில், சிறப்புப் பெற்ற, வாயுவினை ஆதார மாகக் கொண்டு எழுப்பப்பட்ட திரு காளத்தியப்பர் என்ற திருக்கோயிலின் சிறப்பினைப் பற்றி நாம் ‘உளியின் மொழி மூலம்‘ அறிந்து கொண்டதைப் போல், மற்றொரு ஆலயத்தினைப் பற்றி அறிந்து கொள்ள அடுத்து வருகிற பயணத்தில் காண்போம். தொடர்ந்து உளியின் மொழியுடன் பயணியுங்கள்.

உளியின் மொழித் தொடரும்

கண்மணி செல்வா

# தெளிவு



பகலுக்கு விடை கொடுத்தும் இரவை வரவேற்று நிற்கும் அந்திப் பொழுதில் மேகமூட்டத்தால் முற்றுகையிடப்பட்ட தெளிவற்ற வானம் போல் என் மனம் இருள் அடைந்து இருந்தது. வாழ்க்கையில் நடக்கும் சில நிகழ்வுகள் எதார்த்தங்கள் தான் ஆனால் அவற்றை உள்வாங்கி மனம் இயல்பாய் இருக்க முடிவதில்லை. கலங்கி போய் விடுகின்றது.

எப்பொழுதும் பிரச்சனைக்கு தீர்வை நினைக்கும் எண்ணம் தான், ஏனோ அன்று எதிர்மறை எண்ணம் மட்டும் எகத்தாளம் மிட்டு அமர்ந்து கொண்டது மனதில்.

உழைப்பை உறிந்து கொண்டு சுய நலத்தால் தூக்கி எறியும் முதலாளி, அன்னையின் அன்பை அலட்சியப்படுத்தும் பிள்ளை, கொட்டி குவிக்கும் அன்பை கொச்சைப்படுத்தும் காதல் மனம், நம்பிக்கைக்கு துரோகம் இழைக்கும் நட்பு,

பகுத்தறிவை பாழாக்கி அறத்தை அழித்து பண்பாடு கலாச்சாரம் என்று மக்களை திசை திருப்பும் திருட்டு சமய வாதிகள், இன்னும் எத்தனை எத்தனை முரண்பாடுகள் சமுதாயத்தில் மலிந்து கிடக்கின்றன.

இயற்கை எல்லாம் இயல்பில் அப் படியே இருக்க, மனித மனங்கள் மட்டும் ஏனோ சூழ்நிலைக்கு ஏற்றார் போல் மாறுபடுகின்றது.

இப்படி ஏதேதோ சிந்தித்து படுக்கையில் படுத்தால் என் இமை இரண்டும் ஊடல் கொண்டு கூட மறுத்ததால் உறக்கம் இழந்து தவித்தது மனம்.

ஏதேதோ நினைத்து என் மனம் முக் காலத்திலும் உழன்று கொண்டிருந்தது.

எப்பொழுது இமை இரண்டும் கூடல் கொண்டது தெரியாது. அலாரம் சத்தம் 5 மணியை நினைவூட்டியதும் எழுந்து என் காலை பணிகளை முடித்துவிட்டு, விறு விறுவென்று நடந்து ரோட்டிற்கு வந்தேன். வழக்கமாக இரண்டு சுமை தான் இருக்கும். ஆனால் இன்று ஏனோ மூன்று சுமை, தோளில் கையில் மனதில் சுமை.

ஆட்டோவிற்கான காத்திருப்பில் சில நிமிடங்கள் கழிந்து என் அருகில் ஒரு ஆட்டோ வந்தது.

“எங்கம்மா போகணும்”

நான் இடத்தை சொன்னவுடன் ரூ.50 ஆகும் தருவீர்களா?

அன்றுஎனக்கு யாரைப் பார்த்தாலும் எரிச்சலாகவே இருந்து.

ஆமாம் இப்படி கூட சில நேரம் நமக்கு நடப்பதுண்டு நாம் சந்தோஷமாக இருக்கும் சமயத்தில் எல்லோரிடமும் சந்தோஷமாக பேசுவோம்.

நமக்கு ஏதாவது கஷ்டம் இருந்தால் எல்லோரிடமும் எரிந்து விழுவோம். அப்படித்தான் நானும் அன்று நடந்து

கொண்டேன் என்று நினைக்கிறேன்.

தருகிறேன் சார் போங்க ... ஐயோடா ஆட்டோவில் உட்கார்ந்த சில நொடிகளில் என் மனம் தலைகீழாக மாறியது.

ஆட்டோவில் மிக சத்தமான பாடல் ஒன்று

போடும் பொய்த்திரையை
கிழித்து விடும் காலம்
புரியும் அப்பொழுது
மெய்யான கோலம்

கண்ணை நம்பாதே
உன்னை ஏமாற்றும்
நீ காணும் தோற்றம்
உண்மை இல்லாதது

ஆட்டோ ஓட்டும் அண்ணாவும் சேர்ந்து பாடிக் கொண்டே வந்தார்.

அது முடிந்ததும்

அடுத்த பாடல்

ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து
ஓடம் போலே ஆடலாம் பாடலாம்

என்ற எம்ஜிஆர் ஒரு காதல் பாடல்

பாடல் வரிகளை விட அதை சேர்ந்து அவர் அவ்வளவு சந்தோஷமாக சந்தோஷமாக பாடும் அவருடைய அந்த முகத்தில் உள்ள புன்னகை என்னை என் மனதை மாற்றியது.

நான் என் மனதை கட்டுப்படுத்த முடியாமல் அவரிடம் கேட்டேன் எப்படி இவ்வளவு காலையில் இத்தனை சந்தோஷ மாக இருக்கிறீர்கள் என்று...

என்னம்மா, இந்த வாழ்க்கை ஒன்றும் அவ்வளவு நிலையானது அல்ல.

முடிஞ்ச வரைக்கும் உண்மையாவும் நேர்மையாக வாழ்ந்தால் போதும்.

கிடைக்கின்ற இந்த கொஞ்ச வரு மானத்தில் என் குடும்பத்தை நான் சந்தோஷமாக நடத்துகிறேன்.

நான் எப்பொழுதும் சந்தோஷமாகும் புத்துணர்ச்சியுடன் இருப்பதால் எனக்கு எந்த நோயும் இல்லை.

இப்படியே சந்தோஷமாக என் காலத்தை கழித்து விடுவேன் வேறு என்னமா வேண்டும் எனக்கு...

அவருக்கு இருந்த தைரியம் எனக்கு இல்லை அவரிடமிருந்து சந்தோஷம் என்னிடம் இல்லை, அவரிடமிருந்து தெளிவு என்னிடம் இல்லை.

என்னை நானே சில கேள்விகள் கேட்டுக் கொண்டேன்.

அவ்வளவுதான் எல்லாம் பறந்தது எனக்கும் சிறகு முளைத்தது.

வாழ்க்கை தத்துவத்தை நமக்கு எடுத்து சொல்ல தத்துவ ஞானிகள் தேவையில்லை

நாம் அன்றாடம் சந்திக்கும். சில சாதா ரண மனிதர்கள் கூட நமக்கு புரிய வைத்து வாழ்க்கையை அழகாக்கி விடுகிறார்கள்

முற்றுகையிட்ட மேக கூட்டங்கள் நீர் துளிகளாக பூமியை நனைத்து குளிர்வித்தது. மழைக்குப் பின் தெளிவான வானம் போல் என் மனமும்.

வாழ்க்கை அழகானது.



# பாரின் ஆளி பாட்டாளி

இயந்திர உலகைச்
சுந்தரம் செய்பவன்
அவன்
புயங்களை உயர்த்தி
புவனத்தை வனைபவன்

நாழிகை மறந்து
நற்கடமை செய்வதில்
அவன் ஆழி
அவன் பணியால்
பக்குவப்பட்டு
நிற்குந் தடங்களை
அழிக்குமோ ஊழி?

பருவங்கள் மாறலாம்
துருவங்கள் இரண்டும் ஆகலாம்
அவனின்
புருவங்களில் எப்போதும்
கடமையின்
ஒற்றைக் காட்சிதான்

காய்க்கும் வெய்யில்
அவனுக்கு ஊட்டச்சத்து
உருக்கும் பனி
அவனுக்குக் காலைத்தேநீர்

பிரமன் விட்ட பிழைகளை
கிரமப்பணியால்
கீர்த்தி செய்யும்
அவனும் ஒரு மூர்த்தி

கடமையாம் வேள்வியில்
தன்னை ஆகுதியாக்கி
பூகோளத்தை
பூக்கோலம் செய்பவன்
அவன்

எட்டுக்குள் தன்னை வளைக்காமல்
கட்டத்தை நாளும் பார்க்காமல்
அவன்
கரத்தை நம்பி
கவினார் உலகிற்கு
உரமாகிப் போனவன்

பாட்டாளி...

பாரின் ஆளி
அவனின்றி
பாருக்கு ஏது ஒளி?

**தமிழ்க்கீரன்** ஈழநாடு.



# வீடு / குடும்பம்

## செம்பு பாத்திரத்தில் நீர் சேமித்து அதை பருகி வந்தால் ஏற்படும் நன்மைகள் என்னென்ன தெரிந்து கொள்வோம்...

ஆரோக்கியத்தையும் அழகையும் அள்ளித் தரும் செம்புப் பாத்திரக் குடிநீர்!

நம் உடலுக்குத் தேவையான தண்ணீர் பருகுவதால் நிறைய நன்மைகள் ஏற்படும். அதிலும் தாமிரம் எனப்படும் செம்புப் பாத்திரத்தில் நீர் சேமித்துப் பருகுவதால் உடலுக்கு ஆரோக்கியம் மட்டுமல்ல, அழகையும்அள்ளித்தரும்.இயற்கையாகவே தாமிரம் ஆண்டி மைக்ரோபியல், அழற்சி எதிர்ப்பு, புற்றுநோய் எதிர்ப்பு மற்றும் ஆக்ஸிஜனேற்ற பண்புகளைக் கொண்டுள்ளது. இது ஹீமோகுளோபின் உருவாவதற்கும் உயிரணு மீளுருவாக்கம் செய்வதற்கும் உதவுகிறது.

செம்புப் பாத்திர நீரைப் பருகுவதால் ஏற்படும் நன்மைகள்:

உயர் இரத்த அழுத்தத்தை சமநிலைப் படுத்துகிறது: அமெரிக்கன் கேன்சர் சொசைட்டியின் கூற்றுப்படி, தாமிரம் கொலஸ்ட்ரால் மற்றும் ட்ரைகிளிசரைடு அளவைக் குறைக்கும். ஒரு நபரின் இரத்த அழுத்தத்தை ஒழுங்குபடுத்துவதற்கு செம்புப் பாத்திர நீர் உதவுகிறது.

தொண்டைக் கட்டில் இருந்து நிவாரணம் அளிக்கிறது: பழங்காலத்தில் மக்கள் தினமும் காலையில் செம்பு பாட்டில்அல்லதுபாத்திரத்தில் சேமித்து வைத்த தண்ணீரைக் கொண்டு வாய் கொப்பளிப்பார்கள். ஏனென்றால், தாமிரத்தில் உள்ள நுண்ணுயிர் எதிர்ப்பு பண்புகள் தொண்டை அடைப்பைத் தீர்க்க உதவுகிறது.

இரத்த சோகையை எதிர்க்கிறது: மனித உடலில் தாமிர குறைபாடு அரிதான இரத்தக்கசிவு கோளாறுகளுக்கு வழிவகுக்கும். இதன் விளைவாக வெள்ளை இரத்த அணுக்கள் குறையும். நம் உடலில் இரத்த சிவப்பணுக்களின் உற்பத்தியின் அதிகரிக்க தாமிரம் உதவுகிறது. இரத்த சோகையை எதிர்க்க இரும்பு மிக முக்கியமான கனிமமாகும். இதற்கு தாமிரமும் சிறிய அளவில் தேவைப்படும்.

வயிறு தொடர்பான பிரச்னைகளை தீர்க்கும்: செம்பு பாத்திரத்தில் இருக்கும் தண்ணீரை குடிப்பதால் வயிற்று பிரச்னை கள், வாய்வுனால் உண்டாகும் வலி, மலச்சிக்கல் பிரச்னைகளை தீரும்.

தைராய்டுசுரப்பியின்செயல்பாட்டிற்கு உதவுகிறது: தாமிரம் தைராய்டு சுரப்பியின் முரண்பாடுகளை சமன் செய்கிறது. அதாவது தைராய்டு சுரப்பி நன்கு செயல்பட ஆற்றல் அளிக்கிறது.

மூட்டுவலி மற்றும் வீக்கமடைந்த மூட்டுகளை குணப்படுத்துகிறது: இது கீல்வாதம் மற்றும் முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு பெரும் நிவாரணம் அளிக்கிறது.

தொற்று நோயை நிராகரிக்கிறது: தாமிரம் ஒரு இயற்கை நுண்ணுயிர் எதிர்ப்பி. எட்டு மணி நேரத்திற்கும் மேலாக செம்பு பாட்டில்களில் சேமிக்கப்படும் நீர் இ.கோலி, மற்றும் காலரா பேசிலஸ் ஆகியவற்றுக்கு எதிராக செயல்படுகிறது. நோய்த் தொற்றில் இருந்து காக்கிறது.

செரிமானத்திற்கு உதவுகிறது: ஆயுர்வேதம், 'தாம்ரா ஜல்' குடிப்பதால் வயிற்றை நச்சு நீக்கி சுத்தப்படுத்துகிறது என்று கூறுகிறது. தாமிரம் வயிறு வீக்கத்தைக் குறைத்து, சிறந்த செரிமானத்திற்கு உதவுகிறது. வயிற்றுப் புண், அஜீரணம் மற்றும் வயிற்றுத் தொற்றுகளுக்கு தாமிரம் ஒரு சிறந்த மருந்தாகும்.

இருதய அமைப்புக்கு உதவுகிறது: இதயத்திற்கு இரத்த ஓட்டத்தை அதிகரிக்க இரத்த நாளங்களை விரிவுபடுத்த உதவு கிறது.

இளமைத் தோற்றம் தருகிறது: சருமம் இளமையாகவும், பொலிவாகவும் இருக்க செம்பு நீர் உதவுகிறது. செம்பு நீரில் ஆன்டி ஆக்சிடென்ட்கள் அதிகம் உள்ளன. முகத்தில் உள்ள சுருக்கம், கரும்புள்ளிகளை விரட்டவும் முகத்தை பளபளப்பாக்கவும் உதவுகிறது.

இதையும் படியுங்கள்:

தசை வளர்ச்சி மற்றும் ஆரோக்கியத்திற்கு உதவும் பத்து வகை உணவுகள்!

Copper ware drinking water that gives health and beauty

மூளையின் செயல்திறனை அதிகரிக்கிறது: மூளை மிகவும் திறமையாக வேலை செய்ய உதவுகிறது. ஞாபக சக்தியை அதிகரிப்பதில் இந்த செம்பு நீர் பெரும் பங்கு வகிக்கிறது.

எடை இழப்பு மற்றும் காயங்களை வேகமாக குணப்படுத்த உதவுகிறது: தாமிரம் மனித உடலில் உள்ள அதிகப் படியான கொழுப்பு படிவுகளை கரைத்து எடை குறைக்க உதவுகிறது. மேலும் சரும மீளுருவாக்கம் மற்றும் நோயெதிர்ப்பு மண்டலத்தை பலப்படுத்துகிறது, காயங் களை விரைவாக குணப்படுத்த உடலுக்கு உதவுகிறது.

உடலின் வெப்பநிலையை குளிர்ச்சி யாக வைக்கிறது: நாம் உண்ணும் உணவு வயிற்றுக்குள் செல்லும்போது, அது அமிலத் தன்மையை உண்டாக்கி, உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றி, அதன் மூலம் உடலை சூடாக்குகிறது. செம்பு அமிலங்களை சமநிலைப்படுத்தவும், நச்சு நீக்கவும் மற்றும் உடலின் வெப்பநிலையை குறைக்கவும் உதவுகிறது. வெப்பமான கோடை மாதங்களில், நிலவும் வானிலை காரணமாக உடல் வெப்பமடையும்போது இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

# தங்கி வாழ்பவர்கள்

அவர்களின் ஏதாவதொரு காரணம்
யார் மீதாவது தங்கி வாழச் செய்து விடுகிறது

அவர்கள் மீது அந்தக் காரணங்கள்
எந்தக் காருண்யங்களையும் காட்டுவதில்லை
வலுக்கட்டாயமாக யாரையாவது
எதிர்பார்க்கச் செய்து விட்டு வேடிக்கை பார்க்கிறது

அவர்கள் யாராலாவது புரிந்து கொள்ளப்பட வேண்டும்
ஆசை கொண்டாலும் பெரும்பாலாகப்
புரிந்து கொள்ளப்பட மாட்டார்கள்

அவர்கள் தன் மேல் படும் இழிவுகளை கண்டும்
காணாது விட்டு விட வேண்டும்
தங்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய
விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு
யாரினுடைய பணத்திற்காவது காத்திருக்க வேண்டும்

அவர்களின், அன்பானவர்களுக்கு
ஒரு அன்பளிப்பு வழங்க
பத்தாயிரம் முறை யோசித்தாக வேண்டும்
அவர்கள் நண்பர்களோடு சேர்ந்து
சுற்றுலா செல்ல 'இயலாது' என்பதை
விருப்பமின்றிச் சொல்ல வேண்டும்

பெரிய ஹோட்டல்களைக் கைகாட்டுவோரிடம்
அங்குள்ள உணவுகள் தனக்குப் பிடிக்காது
என்று பொய் சொல்ல வேண்டும்

தன்னிச்சையாக வாழ வேண்டும்
என்பதற்காக வாழ்வு முழுக்க
போராட வேண்டும்
தன்னிச்சையாக வாழ்ந்தோமா ?
என்ற கேள்வியுடனே
மரணிக்கவும் வேண்டும்

உண்மையில் அவர்கள்
தங்கி வாழ்பவர்கள் மட்டுமல்ல
தாங்கி வாழ்பவர்களும் கூட

**பாத்திமா மிஸ்னா**
சவளக்கடை

# நான் இறந்தால்...

நான் இறந்தால் என்னை
யாரும் புதைக்க வேண்டாம்
என் மீதுள்ள இரணங்களின்
காயங்கள் மண்ணிலானது
என்றும் மக்கிப் போவதன்று...
நாவுகள் நீண்டு எரியும்
தீயின் பசிக்கு
விறகுகளோடு என் வெற்றுடம்பையும்
சேர்த்து அடுக்கி
தீயினை மூட்டுங்கள்...
மெல்ல மெல்லக்
கொழுந்து விட்டெரியும் தீயில்
என் இரணங்களின் இராகங்கள்
காற்றில் கரைந்துப் போகட்டும்...

**கவிஞர்.விசித்திரக்கவி**

# கருக்கல் கூடுகிறது



கடைக்கு போய் வர
அம்மா கூறுகிறாள்
போகப் புறப்படுகிறேன்
தெரு முனையில் வெளிச்சம் இல்லை

அம்மாவைப் பார்க்கிறேன்
அவள் உள்ளே திரும்பி விட்டாள்
மறுப்பதற்கு இடமில்லை
வேகம் பிடித்து ஓடி மறைந்தேன்
இருட்டு என்னை மூடிக்கொண்டது

கடையை அடைந்ததும்
மூச்செறிப்பதில் நான் உயிரோடு
இருப்பதாக அறிந்தேன்

மீண்டும், மீண்டு போகனும்
பயத்திலிருந்து
எண்ணெய் சட்டி காய்கிறது..

**ம.சேரன்,** வாலாந்தூர்

# சிறகுகள் சிறைபடுவதில்லை

எழுத்தாக்கம்:

**குயில்.மு.இரசியா பேகம்**, தஞ்சை



(காவேரி டெல்டா பகுதி என்று குறிப்பிட்டால் கரந்தை பகுதியுடன் முடிந்து விடும் ...கொல்லிட ஆற்றின் தெற்குக்கரையிலிருந்து களிமண் பூமி ஆரம்பம்.அந்த களிமண் பூமியில் தான் நம் கதை நடந்த ராஜேந்திரம் கிராமம்)

அன்று இரவு கெண்டியூரிலிருந்து வந்த பாட்டி எனக்கு உணவு ஊட்டிதன்னோடு படுக்க வைத்துக் கொண்டார்கள்..

நான் அவரின் முத்தானையின் ஒரு முனையை கட்டைவிரல் நகத்தில் சுற்றிக்கொண்டேன். அவர்கள் என்னை விட்டு போய்விடுவார்களோ என்ற பயம்தான்...

அம்மா எங்கே பாட்டி? என்றேன்..

அந்த பாட்டி சொன்னது, அப்போது இப்போது என் முன் விரியும் காட்சிகள் உங்களுக்காக எனது வார்த்தைகளில்....

## 6.நினைவுகள்

ஞாபகங்கள் பின்னோக்கி நகர

அது மிகுந்த வலியைத் தந்தது.அப்போது கயலுக்கு ஒன்பது வயது.

சந்திரனுக்கு பதிமூன்று வயது.

(பானு மாமி கயலின் தந்தை மதனின் அக்கா, தனது சொந்த அத்தைப் பையன் பாஸ்கரனை மணந்து எதிர்த்த வீட்டில் வசிக்கிறார்)

பானுமாமி, பாஸ்கரன் மாமாவுக்கு

நான்கு ஆண்பிள்ளைகள். ஒரு மகள். மூத்தவர் சனா, இரண்டாவது பெண் ஹம்ச வர்தினி, மூன்றாவது ஆனந்தன், நான்காவது சந்திரன் (நமது கதாநாயகன்) ஐந்தாவது ராஜேந்திரன்.

சந்திரன் கயலின் நான்காம் வயதிலேயே அவளுக்கு கணவராகிறார்.

பானுமதி சொன்னார்‘ தம்பி சந்திர னுக்கு வைசூரி போட்டு இருக்கு துறுதுறுண்ணு இருக்கும் என் பிள்ளை அன்ன ஆகாரம் இல்லாமல் கண்முழிக்கா மல் படுத்துக் கிடக்கிறான்

அண்ணனை பார்த்து விட்டு போக வந்தேன்‘ என்றார்.

‘வாமா‘ என்று வாய் நிறைய அழைத்த வண்ணம் வந்த எங்க அப்பா

‘என்னடா ஆச்சு ‘என்று கேட்டார்.



மாமி சந்திரன் பற்றி சொன்னார்.

அப்பா ‘கவலைப்படாதே! சரியாகி விடும்‘

இளனி கொடுத்து தயிர் சாதம் பிசைந்து கொடு நிறைய மோர் கொடு. உணவுக்கு பின் இந்த சுரணத்தை தேனில் குழைத்துக் கொடு‘ என்று ஓர் சூரணம் கொடுத்தார்

‘தனியாக படுக்க வை.வேப்பிலையால் வருடிவிடு‘....

மஞ்சள் நீர் கரைத்து சந்திரன் அறையில் முழுவதும் தெளிக்கச் சொன்னார்.

கயலப்பா ஒரு ஆயுர்வேத மருத்துவர். மிகுந்தக் கைராசிக்காரர். அன்று திருமணத் தன்று விழுந்த கயலைத் தூக்கிகிட்டு போய் மருந்திட்டு கட்டுப்போட்டு அவர்த்தான் பார்த்துக் கொண்டார்.

ஆனால் சந்திரனின் நிலைமை சீராக வில்லை

இரண்டு நாளில் ஏதோ அசம்பாவிதம் நடக்கபோகிற மாதிரி யார் யாரோ எதிர்த்த வீட்டுக்கு வந்து போனார்கள்.

ஏதோ சரியில்லை.தெருவில் இருவர் பேசிக்கொள்வது என்காதில் விழுகிறது.

வாழையிலையில் பிறந்த மேனியாக

படுக்க வைத்திருக்கிறார்கள்.இன்று இரவு போகுமா என்றும் தெரியவில்லை...

கேட்டதும்

ஏதோ அவளுக்குள் ஓர் பூகம்பம்.

பூஜை அறையில் நுழைந்தாள் கயல். கடவுளிடம் மானசீகமாய் பிரார்த்தனை. ‘சந்திரனை காப்பாற்று அவன் நோயை எனக்கு தாவென்று‘...

கடவுள் பார்த்தார்....

# 7.மனமெனும் மாயக்கண்ணாடி

பனிவிழும் அன்புவனமிது
பாதையோ ஒருவழி!
உன்னுள் கரைகிறேன்
என்னுள் ஒளிர்கிறேன்!
உன்னுள் கரைந்த
போதும் குறையவில்லை
என்னுள் உயிர்ப்பது
என்னவென்று தெரியவில்லை!!!



தலை குளித்து கண்ணாடியில் முகம் பார்த்த கயல் திடுக்கிட்டாள்...

அம்மை வார்த்த முகம். மிகுந்த வருத்தமாக இருந்தது.

மூக்குத்தி ஒளிர்ந்த முகம் அம்மை தளும்பிருந்தாலும் புனிதம் கொஞ்சியது....

இந்தக்கடவுள் மிகுந்த கருணையாளன். கேட்டவுடனே தருகிறான்...சந்திரனுக்கு உயிரை கயலுக்கு அம்மைத் தழும்பு.

பின்னர் பாட்டியும் தூங்கிப் போனார். நானும்தான்.

அன்று நான் படுக்கை நனைக்கவில்லை

## 8.கோள் மூட்டிக் கயல்

ஒருநாள் தெருவில் விளையாடி கொண்டு இருக்கிறேன். எங்கள் மாட்டு வண்டி நின்றது. தங்கையன் தயாராக இருந்தான். 'தங்கையா'என்றேன்

'என்னப் பாப்பா' என்றான்.

'அம்மாவை ஏன் இன்னும் மருத்துவச்சி வீட்டிலிருந்து அழைத்து வரவில்லை'

'வா! போவோம்' 'அழைச்சிட்டு வரலாம்' என்றேன்.

என்னை தூக்கி வண்டியில் அமர வைத்து கண் துடைத்துவிட.

பாப்பா உங்க அம்மாவ குழந்தை யிலிருந்து தெரியும்.படு சுட்டி.வீட்டு வேலைகளிலும் மிகக் கெட்டி! மகராசி பாப்பா அந்த தாயி! பிறந்த வீட்டு பாசத்தை அதால அறுக்க முடியலை புகுந்த வீட்டிலியும் ஒன்ற முடியாம அந்த தாயி பட்ட கஷ்டத்தையெல்லாம்

கண்ணால பார்த்தவன் என்று ஒரு கதை சொன்னான் அது இதோ உங்களுக்காக....

அங்கு தூளியில் சின்னத் தம்பி சுரேஸ் அழ தூளி ஆட்டினாள் கயல்.

தங்கை அல்லி சத்தமாக படிக்க இரண்டாவது தங்கை தங்கைமல்லி சொப்புடன் விளையாடுகிறாள். பெரியத் தம்பி குமார் வேகமாக உள்ளே வருகிறான். நெடுநெடு வென அசாத்திய உயரம்.

கயலுக்கு கோபம் குமார் சத்தம் செய் யாதே! கடைக்குட்டித் தம்பி தூங்கணும்.

இல்லக்கா! மிகுந்த முக்கியமான விசயம்.



குயில்.மு.இரசியா பேகம்

'அல்லி இந்த தூளிய பிடி' என்று தம்பியுடன் . பின்கட்டுக்கு போனாள் கயல்.

குமார் சொன்ன சேதி மிகுந்த அதிர்ச்சியாக இருந்தது..

அவசர அவசரமாக பின்கட்டை தாண்டி எதிர்த்த வீட்டு சந்து வழியாக மாமி என்று அலறிய வண்ணம் எதிர்த்த வீட்டு பின்கட்டுப் படியில் கால்வைத்தவள்.அங்கு திரும்பிப் பார்க்க சந்திரன்!!!!

புறாக்கூட்டிலிருந்து எட்டிப்பார்க்க தேள் கொட்டியது போல் வந்த வழியே திரும்பிப் பறந்தாள் கயல்.

மேல்மூச்சு வாங்க கிணற்று மேடை மேல் அமர்ந்தாள் கயல். மயிரிழையில் தப்பித்தது போலிருந்தது...

அடிவயிற்றில் ஒரு துடிப்பு!

பானு மாமி வந்திருந்தார். வாங்க அண்ணி என்று அழைத்த அம்மா தம்பியைப் தூக்கி கொண்டு உள்ளேப் போக கயல் பாயை எடுத்து விரித்தாள்.

பாயில் அமர்ந்த மாமி கயலிடம் ஒரு பையைத் தந்தார். இதில் பட்டு பாவாடை தாவணி எல்லாம் இருக்கு என்று சொல்லி கயல் கழுத்தில் ஒரு செயினை போட்டுவிட்டார். இங்கே வா.. என்று அழைத்து பக்கத்தில் அமர வைத்து

சரி நேற்று எதற்கு வந்தாய்?.

கயல்:திருட்டு முழியுடன் அக்கம்பக்கம் பார்த்து விட்டு.'மாமி சந்திரன் சேக்காலி கூட சேர்ந்து ரொம்பக் கெட்டுப் போராப்பல புகைக் கூட பிடிக்கிறத குமார் பார்த்திருக்கிறான்' என்றாள்

முறுவலித்த மாமி நான் கண்டிக்கிறேன். 'நீ நாளை பட்டாமணியார் வீட்டுக் கல்யாணத்திற்கு இந்த துணிகளை போட்டுக் கொண்டு வா ' என்றார்.

அம்மா வர கயல் அகன்றாள்...

அன்று மாலை மயக்கும் நேரம் எல்லார் வீட்டிலும் விளக்கு வைத்தாயிற்று...

அமைதி அரசோச்சும் தெருக்கள்

அந்த அந்தகார அமைதியை கிழித்துக் கொண்டு,

கதவிடிக்கும் சப்தம் ...

தொடரும்....

## ஏகாந்தம்

அடர் வனத்தில் ஒற்றையடிப்பாதை
கண்களுக்கு எதுவும் தென்படவில்லை
என்னை இந்நேரம் அடையாளப்படுத்தி
பின்தொடரும் சில விலங்குகள் !
பறவைகள் தொடர்ந்து
ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.
சில பறவைகளும் உயிரினங்களும்
எனது காலடியோசை கேட்டதும்
நிறுத்திக்கொண்டன
தனது உரையாடல்களை !
விடியல் வெளிச்சம் ஊடுருவிய
சில இடங்களில் சருகுகள்
பொன்னிறமாய் மின்னுகின்றன
நேற்று இரவு பெய்த மழைநீரில்
காட்டின் மூங்கில்கள்
துளிர்த்தலில் மகிழ்ந்தன
மலையருவியில் மூலிகை வாசம்
இந்தக் கானகத்துக் காற்றோடு
உறவு கொண்டிருக்கிறது !
பாசிபடர்ந்த மரங்களின் மேனியெங்கும்
இயற்கையின் வாசம் பூரணமாய் !
ஒவ்வொரு இலைகளின் வாசிப்பிலும்
திசைகளற்ற அமைதியின் இசை !
நான் இப்போது ஒரு வனவாசி
எனக்கு திசைகளும் வேண்டாம்
மனித மொழிகளும் வேண்டாம்
இயற்கையின் ஸ்பரிசத்தில்
எனது ஏகாந்தம் பூமியின்
எல்லைகளைத் தொடுகிறது !



கா.ந.கல்யாணசுந்தரம்

# தன்முனைக் கவிதைகள்

பால்யத்தின் பசுமையான நினைவுகள்
மனதை விட்டு நீங்கவில்லை
எதுவும் தொடர்ந்து நிலைக்க
காலங்கள் காத்து நிற்பதில்லை

இளமையின் துடிப்புகள் சிறகடிக்க
இளவேனில் வசந்தம் தேடுகிறேன்
முதுமையின் கணங்களை கடக்க
இன்றினை சிறப்பாக வாழ்கிறேன்

தேடலின் தெவிட்டாத தாகம்
இரவுகளின் இருள்களை கண்டுகொள்ளவில்லை
கனவுகளில் தூங்க விடாமல்
துரத்திய படியே தொடர்கிறது

நினைக்காத நிமிடங்களின் பெறுமதிகள்
சில நேரம் நிறைவாகின்றன
திட்டமிட்ட பொழுதுளின் எதிப்பார்ப்புகள்
நீங்காத கவலைகளையே பிரசவிக்கின்றன

கண்ணாசை கண்டு களித்திட
உலகம் முழுவதுமே போதாது
மண்ணாசை மனதினில் உதித்திட
மரணம் வரையும் திருப்தியில்லை

காலத்தின் சுவடுகள் பலதையும்
அடிக்கடி மீட்டிச் செல்லும்
வாழ்வது நான் தானே
எனக்கானதை எடுத்து நடக்க

திருமண நாளின் அழகு
வாழ்தலின் இன்பத்தில் நிறையும்
பிள்ளைகள் பெறுவதன் சுகங்கள்
வளர்த்தலின் சிறப்பால் மகிழ்ச்சி

கனவுப் பூக்களை நுகர்ந்து
உன் வாசனை தேடுகிறேன்
விடியாமல் கண் விழித்ததும்
ஏமாற்றமே எஞ்சியதாய் இருந்தது

இளமையில் தூக்கம்
நேரத்தை வெல்லும்
நாளும் தொடர்ந்திட
உலகமே ஒதுக்கும்

மழலையின் மயக்கும் மொழி
மன்னிப்பை மனதாலே கொடுக்கும்
வயதாகிய வரண்ட பேச்சுக்கள்
மறுப்பையும் வெறுப்பையும் துளிர்க்கும்

நீதிமன்றத் திடலில் மக்கள்
எதை எதையோ பேசுகின்றனர்
கலைந்து சென்றது கூட்டம்
விலங்கிடப்பட்டது ஏழையின் கைகள்

நிலையற்ற உலகில்
எதுவும் நிரந்தரமில்லை
நினைவாகி விடுவது
கானல் நீராகவே

புலரும் பொழுதுகள் எல்லாம்
பொய்யாகி விடுகிறது
நிலையற்ற உலகின் நெருக்கடிகளில்
நிலை குலையும்போது

அளவில்லாத அன்பு
சிந்தனையை மிகைக்கும்
அளவோடு அனுபவமும்
இணைந்திட்டால் சிறப்பு

ஒற்றையடி பாதையிலே
நடந்தேன் நிம்மதியாய்
பாதுகாப்பான வாகனத்தில்
பதகளிப்பே பயணமாகிறது

**சேஹு மொஹம்மது பெனாஸிரா,**
முஸ்லிம் ஹல்மில்லாவ, மதவாச்சி.



# வரவு செலவு

பரணி சுப சேகர்
மதுரை 17

வரவு என்பது என்ன? செலவு என்பது என்ன? வரவால் செலவும், செலவால் வரவும் வாழ்க்கையில் என்றும் உண்டு. கற்பிக்கப்படும் நேரம் செலவாகும்போது கல்வி இங்கே வரவாகிறது. காணும் தேவையில்லாத பொருளொன்று வீட்டிற்கு வரவாகும்போது பணம் கணக்கில் செலவாகிறது. வரவு செலவுக் கணக்கு மிகவும் அவசியம். எது வரவு, எது செலவு என்பதில் தான் வாழ்க்கை தனது சூத்திரத்தை வைத்து இருக்கிறது.

தேவையான ஒன்றைத் தேடிக் கொள்ள வரவு வேண்டும். தேவையில்லாத ஒன்றை (ஆசையை) துணிந்து வெளியேற்ற வேண்டும். அடுத்தவனைப் பார்த்து உனது வசதியை முடிவாக்கக் கூடாது. கடன் என்பது உன் தலைக்கு மேல் தொங்கும் கத்தி. கடன் வாங்கி வாழ்வை நகர்த்துவது ஓடத்தில் விழுந்த ஓட்டை. எந்நேரமும் எதுவும் வரலாம். உன்னை நட்டாற்றில் விட்டு விடும். கடன் என்ற ஒன்றை கனவிலும் நினையாது வாழ்வைச் செப்பனிட வேண்டும். கடன்பட்ட பலர் நடுத்தெருவில் நிற்பதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம். எதற்கிந்த கடன்? சோற்றுக்கு வழியில்லாது கடன் வாங்கியவர்களை விட மற்றவர்கள் போல் இருக்க வேண்டும் என்று கடன் பட்டவர்களே அதிகம்.. வாங்கிய தொகை அதிகமில்லை என்றாலும் வட்டி வளரும் போது பெரிதாகி விடும்.. போலி கௌரவம் கண்ணை மறைக்க ஆடம்பரம் தலை தூக்கியதால் வாங்கிய கடன் என்றும் கரைவதுமில்லை.

அகலக்கால் வைத்தவர்கள் அனைவருமே வாழ்வைத் தொலைத்தவர்களே. சில்லறை சந்தோசங்களுக்காக தன்னிலை யோசிக்காது தடம் மாறி, கடன் என்ற ஆழ்கடலில் மூழ்கி மீளமுடியாது தவிக்கிறார்கள். ஆடம்பரம் என்பது கடனால் வரவானால் வாழ்க்கை என்பது எப்போதும் செலவுக்கணக்கில் மட்டுமே. வாங்கும் வரவுக்கணக்கு வட்டியெனும் செலவுக்குள் தொலையும்போது சுயமரியாதையும், கௌரவமும் காணாது போய்விடும். ஒரு வரம்புக்கு மேல் கடன் உனக்கு வரும் போது உன் உற்றார் உறவினர் கூட உன்னை விட்டுச் சென்று விடுவர்.

வட்டியென்பது செலவு மட்டுமல்ல. அது ஒரு புற்று மாதிரி. ஒரு கட்டத்தில் வட்டி வளர்ந்து மலையாக எழுந்து நிற்கும். வாழ்வை முடமாக்கும் வழி களில் வட்டியே முதன்மையானது. வங்கிக் கடனுக்கே வட்டி கட்ட முடியாதவர்கள் தனியாரிடம் வட்டிக்கு வாங்கினால் சொல்லவும் வேண்டுமா? தன்னையே அடமானம் வைத்தாலும் பட்ட கடன், பட்ட கடன் தான். தீரப் போவதில்லை.

சிலர் கடன் கொடுக்கும் போதே திட்டமிட்டு அளவுக்கு அதிகமாகவே ஆசை வார்த்தையோடு தலையில் சுமத்துவது உன்னால் திருப்பிக் கட்ட முடியாத நிலைக்கு ஆட்படுத்தவே. இதனால் செலவு என்பது மாறி இழப்பு என்ற

நிலைக்கு வாழ்க்கை ஆளாகிறது. கடன் பட்டவன் நாளெல்லாம் திரை மறைவு வாழ்க்கையைத் தொடரும் அவலம். எதுவெல்லாம் வசதியென கடனால் வரவானதோ அவையனைத்தும் அதே கடனால் கைவிட்டுப் போனாலும் கடன் மட்டும் தன்நிலை மாறாது நிலை கொண்டிருக்கும். எதையெல்லாம் இழக்கக் கூடாதோ அவையனைத்தையும் கடன் இழக்க வைக்கும்.

கடன் கொடுப்பதே சிலவற்றைக் கையகப்படுத்த வேண்டும் என்ற நோக்கில்தான். உனக்கிருக்கும் ஆசையை விட அவனுக்கிருக்கும் ஆசை இதை விட அதிகமாகத்தான். ஆரம்பம் தலை கால் புரியாது. போகப் போகத்தான் தெரியும். இது தெரியாமல் கடன் வாங்கி ஓரிரு ஆண்டுகள் ஒய்யாரமாய் வாழ்ந்து விட்டு வாழ்வின் பெரும்பகுதியை, ஏன் வாழ்வையே எழுதி வைத்து பிறருக்காக வாழ்வது தான் வாழ்க்கையா? தனக்கென இருந்த தன்மானம் கூட கடன்பட்டு விட்டால் காணாது போய்விடும். அடிமையாக வாழ்வதற்கு சாசனம் எழுதிக் கொடுத்து விட்டு வட்டி கட்டுவதற்கு வாழ வேண்டிய நிலை. காரணம் கடமைகளும் அங்கு ஒளிந்திருக்கிறது.. கடன் வளர்ந்து சுயம் இல்லா முண்டமாய்த் தரை நோக்கும் நிலைக்குத் தள்ளிவிடும் இதனை உணரவேண்டும்.

முதல் கால் பங்கு அசல் மீதி முக்கால் பங்கு வட்டி என்ற நிலையில் வாழ்வைத் தொலைத்தவர்கள் யாருக்காகவோ எந்த பிடிப்புமின்றி கடமைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வாழ்வில் என்ன சுகம் இருக்கிறது? வயதாகாத வட்டி மட்டும் வளமாக என்றும் தலை நிமிர்ந்து நிற்கும்போது உனது வாழ்வின் பொருள்தான் என்ன? உனக்கான எதை நீ அடைந்திருக்கிறாய்? அத்தனையும்

# தாக்குதல்

.

நாட்டினில் நடப்ப தென்ன
நலங்களை அழிப்ப தென்ன
கூட்டினைக் கலைப்ப தென்ன
குந்தகம் விளைப்ப தென்ன
ஆட்சியைப் பிடிப்ப தற்காய்
அவரவர் செய்து வைத்த
சூட்சுமம் என்றே எண்ணி
சூத்திரம் அறிந்து கொண்டேன்.

.

அழிவினை விளைத்து தானா
ஆட்சியை நடத்த வேண்டும்
பொழிகிற குண்டில் தானா
பூக்களை வளர்க்க வேண்டும்
குழிகளைத் தோண்டி இந்தக்
குறைகளை மூடி விட்டுச்
செழிப்பினை வளர்ப்ப திங்கே
சிந்தையில் கனவு தானோ

.

நன்மையைச் செய்தே ஆள
நாட்டினில் எவரும் உண்டோ
இன்மையைச் செய்யா திங்கே
இருப்பவர் எவரும் உண்டோ
பன்முகம் கொண்ட இந்த
பரந்தநல் உலகில் நாளை
வன்மமே இல்லா ஆட்சி
வளர்ந்திட வாய்ப்பும் உண்டோ?



**தமிழ்நெஞ்சம் அமின்**

உனக்குள் கரைந்து போவதை உணர்ந்தும் உன்னால் செய்ய முடிந்ததுதான் என்ன?

வாழ்வைத் தொலைத்தது வட்டியா? வரவான ஆசைகளா? மொத்தமும் தொலைந்த பின் எது வந்தால் என்ன? பின் எதற்கிந்த வரிகள்? உன்னைக் காப்பாற்ற முடியும் எனத் தோன்ற வில்லை. வழியில்லை என்று சொல்ல வர வில்லை. ஆனால் நீ படும் துயரம், வருத்தம் இவைகளால் உன் வாழ்வைப் பார்த்து மற்றவர்களாவது திருந்தட்டுமே? வரவுக்குள் வாழ்வமைக்க நீ செலவாகி யிருக்கிறாய் என்பதைத் தவிர இங்கு வேறொன்றும் இல்லை. கடன் தரும் அவமானம் கடைசியில் களத்தை விட்டு துரத்தியடிக்கும். நீ கடன் வாங்கினாய்; அனுபவிக்கிறாய். ஆனால் உன் சந்ததி



செய்த குற்றமென்ன? உன்னை நம்பியவர் களுக்கு உன்னால் தர முடிந்தது என்ன? எதற்கிந்த ஆடம்பரம்? ஏனிந்த அவமானம்?

காசில்லாதபோது, பணியில்லாத போது, கவலையில் இருந்தபோது ஒரு வேளை உண்டாலும் அதில் உனக்கு நிம்மதி யிருந்ததே? ஆனால் இன்று நீ சம்பாதித் தாலும் கை நிறைய ஊதியம் வாங்கினாலும் ஒரு காசு கூட உனக்கானது இல்லையே? ஒரு வேளை சோறு உனக்குள் இறங்கலையே?

நீ வாங்கும் பணத்தில் உன் முகத்தைத் தவிர எல்லோர் முகமும் பயமுறுத்து கிறதே. இந்த கடன் உன்னை இப்படி கொண்டு விடுமென்று நினைத்தாயா?

இந்த தலையெடுக்கும் கடனைத் துடைத்தெறிய வேண்டாமா? வாழ்வே இப்படி கடனில் மூழ்கலாமா? சிந்திக்க வேண்டாமா? கடனில் இருந்து விடுபட தகுந்த ஆலோசனை செய். தயங்காது அதற்கென சிறு தொகையாவது ஒதுக்கு.

தன்மானத்தை விட வசதியொன்றும் பெரியதல்ல. சில காலம் கட்டுண்டு இருந்து கடனை அடை. இல்லை கடன் உன்னை அடைத்து விடும். சிந்தையை விரிவாக்கு. செலவைக் குறை. சிறுகச் சேர்த்து கடனை முடி. வாழ்க்கையின் முகம் அப்போதுதான் தெரியும். மொத்தத்தில் எதை வாங்குவதற்கு முன்னரும் ஒன்றுக்கு பல முறை யோசி. யோசிக்க ஆகும் செலவான நேரம் வாழ்க்கையின் வரவாக இருக்கும்.

உனக்கானது இதுவென்று உணர். ஆடம்பரம் தவிர். ஆசையை அடக்கு. இருப்பதைக் கொண்டு வாழ். வாழ்வு சிறக்கும். தேடிய தேவைகள் தானாய் வரும்.

# நல்லதன் நலமும் தீயதன் தீமையும்

இலக்கியம் என்பது ஒரு இலக்கு. ஒரு இலக்கை மையமாக வைத்துப் பாடுவது, எழுதுவது இலக்கியம் ஆகும். இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி.

'நல்லதன் நலமும் தீயதன் தீமை யும் இவை என இனம் காட்டி எண்ணத்தை விரிவு படுத்துவது இலக்கியம்' இப்படிப் பட்ட சிறப்புமிக்க இலக்கியத்தில் குறிப்பாகத் தமிழ் இலக்கியத்தில் பெண்பாற் புலவர்களின் பங்கு அளப் பரியதாகும். எக்காலத்தை எடுத்துக் கொண்டாலும் பெண்கவியின் படைப்பு கள் சிறப்பு வாய்ந்ததாகவும், உணர்வுப் பூர்வமானதாவும், நிதர்சனத்தை அனுப வித்துக் கூறும் ஆற்றல் உடையதாகவும் விளங்குகின்றன.

## சங்க இலக்கியம்

சங்க இலக்கியத்தை நாம் காண்போம ாகில் சங்க இலக்கியம் ஒரு பண்பாட்டுப் பெட்டகமாய் விளங்குகிறது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கல்வி கற்று உள்ளத்து உணர்வுகளைக் கவிதைகளாகப் படைத்துள்ளனர் பெண்பாற்புலவர்கள். வடவேங்கடம் முதல் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல் உலகின் உயரிய ஆளுமை உடைய பெண்பாற் புலவர்களின் கருத்தி யல் புதிய போக்கிற்கு நம்மை இட்டுச் செல்கிறது. அறம், மறம், காதல், இன்பம், இயற்கை இவற்றோடு இணைந்து வாழ்ந்த சங்க காலப் பெண்டிர் கல்வியறிவும் பெற்றிருந்ததால் படைப்பாளிகளாகத் திகழ்ந்து பெண்டிர் வாழ்க்கையைப் பதிவு செய்தனர். தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் எனப் போற்றப்படும் சங்க காலத்தில் ஆண் பாற்புலவர்களுக்கு சளைக் காமல் பெண்பாற் புலவர்களும் இலக்கிய ஆளுமை பெற்றிருந்தனர்.

அவ்வையார், அஞ்சில் அஞ்சியார், அஞ்சியத்தை மகள் நாகையார், அல்லூர் நன்முல்லையார், அணிலாடும் முன்றிலார் ஆதிமந்தி, ஒக்கூர் மாசாத்தியார், பாரி மகளிர், வெண்ணிக் குயத்தியார், காக்கை பாடினியார், பொன்முடியார் போன்ற இன்னும் பல பெண்பாற் புலவர்கள் ஆற்றிய அரும்பங்கு அளவிடற்கரியது. சில பெண்பாற் புலவர்களின் இயற் பெயர் தனிப்பாடல்களிலோ அத்தொகுப்பு களிலோ குறிப்பிடப்பட வில்லை. அவர்கள் பயன்படுத்திய சொற்களிலிருந்து பெயர் வைக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, செம் புலம்பற்றி ஒருவர் பாடுகிறார். அக்கவித் திறம் கண்டு செம்புலப் பெயனீரார் என்று பெயர் சூட்டினர்.

'ஈன்று புறந்தருதல் முதற்கடமை' என்ற பொன்முடியாரின் வரிசமூகத்தில் பெண்ணின் நிலையை அடையாளப் படுத்துகிறது. சமுதாய நலனுக்காகவும், வீரத்துடன் செயல்படவும் ஆண் குழந்தை களைப் பெற்று தருவது, அவர்கள் போரில்



கொல்லப்படும் போது பெருமிதம் அடைவதும்தான் சிறப்பு என சங்க இலக்கியம் புனைந்துரைக்கின்றன.

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே

வேல் வடித்துக் கொடுத்தல் கொல் லர்க்குக் கடனே

நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே

ஒளிறுவாள் அருஞ்சமம் முறுக்கிக் களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே "

குடும்பத்தை விட மன்னனுக்கு, நாட் டிற்குச் செய்கின்ற போர் முதன்மையானது என்ற கருத்து பொன்முடியாரின் பாடலில் வெளிப்படுகிறது.

அரசகுல பெண்டிர் முதல் குறமகள் வரை பல்வேறு தொழில் செய் தோறும் பாடியுள்ளனர். பெண்கள் மீது திணிக்கப் பட்ட ஆணாதிக்கச் சிந்தனைகளை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தம் கவிதைகள் மூலம் உடைத்து எறிந்தனர்.

'செல்வோம் செல்வோம்' என்று சென்று கொண்டே இருக்கும் தன்மையைப் பெற்ற செல்வத்தைத் தேடி காதலியரை விட்டுப் போக வேண்டாம் என்ற உண்மையை காமக்காணி பசலையார் உணர்த்துகிறார்.

கைமைத்துயரை தாயங் கண்ணியார் கலங்க வைக்கும்படி பாடியுள்ளார்.

'கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி அல்லி உணவின் மனைவியோடு இனி

புல்லென்றனையாள் வளம் கெழு திருநகர்' என்று பாடுகிறார் இப்படித் தம் சொந்த முயற்சியால் கவிபாடும் திறனை வளர்த்து சாதித்த பெண்டிர் எத்தனையோ பேர் உள்ளனர்.

நிறை கர்ப்பமடைந்த பெண் ஆமை மணல்மேட்டில் மறைந்து நின்று புலால் நாறும் முட்டையை இட்டு மறைத்து வைக்கும் பிளவுடைய வாயைப் பெற்ற ஆண் ஆமை, குஞ்சு வெளிப்படும் வரை முட்டையைப் பாதுகாக்கும் என்ற அரிய அறிவியல், விலங்கியல் செய்தியை நப்பசலையார் பதிவு செய்த நுட்பம் வியப்பிற்குரியது.

நடுங்கின்று அளித்து என்நிறைஇல் நெஞ்சம்
அரும்புகொடி சிதைய வாங்கி கொடுங்கழிக்
குப்பை பெண் மணற் பக்கம் சேர்த்து
நிறைசூல் யாமை மறைத்து ஈன்று புதைக்
கோட்டு வட்டு உருவின் புலவு நாறு முட்டை'

எப்படிப்பட்ட அறிவியல் செய்தி பாருங்கள்.

'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் எனக்கேட்ட தாய்' என்று வள்ளுவர் தாயின் மகிழ்வு எப்போது அதிகம் என்று கூறுகிறார். பூங்கண் உத்திரையார் என்ற பெண்பாற்புலவர் அதற்கும் மேலாக 'ஈன்ற பொழுதின் அவன் இறந்த செய்தி மகிழ்ச்சி என்கிறார். படிக்கும் போது ஒரு நொடி நம் இதயம் துடிப்பதை நிறுத்திவிடும். கொக்கின் மெல்லிய இறகுபோன்ற நரைத்த கூந்தலை உடைய வயதான தாயின் இளைய மகன் போரில் எதிர்த்து வந்த யானையை கொன்றுவிட்டு அவனும் இறந்துவிட்டான். இச்செய்தி கேட்டு ஈன்ற பொழுதினும் அகம் மகிழ்ந்தாள் என பூங்கண் உத்தரையார் என்ற பெண்பாற்புலவர் பாடுகின்றார்.

நாட்டுப்பற்றுடைய வீரத்தாய் அவள்.

'மீன்உண்ணக் கொக்கின் தூவி அன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவர்
களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே'

என்று புறநானூறு கூறுகிறது.

பிற்கால இலக்கியங்களில் இந்த அளவு முன்னுரிமை பெண்களுக்கு வழங்கப் படவில்லை. சங்க காலப் பெண்டிர் நிலை பல கூறுகளில் சிறந்து விளங்கினாலும் சமூக அமைப்பில் மேட்டுக்குடிப் பெண்கள், சிறுகுடிப் பெண்கள் என்ற நிலை பிரித்துப் பார்க்கச் சங்க இலக்கியம் களம் அமைத்து தருகிறது. அப்படிச் சிறுகுடிப் பெண்களாகவும் கலைஞர்களாகவும் அடையாளப்படுத்தப்படும் விரலியர் அகம் புறமென்னும் இரு நிலைகளிலும் இடம் பெற்றுள்ளனர். தனிப்பட்ட பெண் ஆளுமைகள் விறலியராக நேரடிப் பதிவு செய்துள்ளனரா என்ற ஆராய்வோமானால் ஔவையார், ஆதிமந்தி ஆகிய இருவர் பாடல்களிலும் விறலியராகத் தங்களைப் பதிவு செய்துள்ளனர். ஔவையார் அதியமானின் புகழ் பாடும் பாட்டு ஒன்றில் தன்னை விறலியாக இனம் காட்டிக் கொள்கிறார். ஆதிமந்தியின் பாடலில் தன்னை ஆடு மகள் என்று கூறுவதால் விறலி என்று தெரிகிறது. ஔவை தன்னை விறலியாக எண்ணி மகிழும் சூழலில் ஆதிமந்தி அதை எண்ணி துயரப்படுகிறார். ஆதிமந்தி அரசியாக வாழ்ந்தவள் ஆட்டனத்தியை மணந்து கொண்ட காரணத்தால் ஆடு மகளாக வேண்டிய நிலை எண்ணி வருந்துகிறாள். எனினும் இலக்கியபடைப்பில் எவ்வித தொய்வுமில்லை. ஔவையாரைப் பற்றி அதிகம் கூற வேண்டியதில்லை. பெண்பாற் புலவர்களுக்கு பெருமையான எடுத்துக் காட்டாய், வழிகாட்டியாய் விளங்கியவர். ஔவையாருக்குப் பின் வந்த பல பெண் பாற் புலவர்கள் ஔவையார் என்ற பெயரிலேயே தம்மையும் அழைத்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

## வேதகாலம்

வேதகாலத்திலும் பெண்பாற் புலவர்கள் பெருமைக்குரியவர்களாக போற்றப் பட்டனர். அகஸ்திய பகிநீ, அபாலா ஆத்ரேயி, இந்திராணி போன்ற பலர் வேதம், ஞானம் பற்றி பல பாடல்கள் இயற்றியுள்ளனர். பக்தி இலக்கியம்

பக்தி இலக்கிய காலத்தில் சைவ சமயத்தினை வளர்க்க காரைக்கால் அம்மையார் அந்தாதி என்னும் இலக்கண முறையை அறிமுகம் செய்தார். இசைத் தமிழால் இறைவனைப் பற்றி முதன் முதலில் பாடியவர் இவர். அற்புதத் திருவந்தாதி போன்ற பதிகங்கள் பிற்கால தேவாரப் பதிகங்களுக்கு முன்னோடியாக திகழ்கின்றன. ஆண்டாளின் திருப்பாவை பக்தி மட்டுமல்ல இயற்கையின் அழகை இனிய தமிழில் வர்ணிக்கும் அழகுப் பாக்கள்.

## அதன்பின்.......

அதன்பின் பெண்களின் பங்கு அந்த அளவிற்குப் பேசப்படவில்லை.

கவிக்குயில் சரோஜினி அம்மையார் காலத்தில் தமிழ்ப் பெண்கள் யாரும் பெரிய அளவில் கவிதை எழுதியதாகச் செய்திகள் இல்லை. 1986 இல் ஈழப் பெண் கவிஞர்களின் தொகுப்பு 'சொல்லாத சேதிகள்' மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் பின் 2001 இல் தமிழ் பெண் கவிஞர்களின் கவிதை தொகுப்பு 'பறத்தல் அதன் சுதந்திரம்' வெளியானது பெண்ணியம், வன்கொடுமை இவற்றை முன்னிறுத்தி பல பெண் கவிஞர்கள் உருவாகினர்.

## தற்காலம்

தற்காலப் பெண்கவிஞர்கள் பத்திரிகைகளிலும், திரைப்படங்களிலும், முகநூல், இணைய தளங்களிலும் எண்ணற்ற கவிதைகளை படைத்துக் கொண்டுள்ளனர். லீனா மணிமேகலை, தாமரை, கனிமொழி, குட்டி ரேவதி, சல்மா, மாலதி மைத்திரி, வெண்ணிலா என்று இன்னும் பல பெயர்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். எண்ணற்ற பெண்கள் உலக அளவில் எழுச்சிமிக்கக் கவிதைகள் படைத்து, சமுதாய அவலங்களின் முகத்திரையைக் கிழித்து ஏற்றமிகு சமுதாயம் உருவாக எழுத்தெனும் கூராயுதத்தை எடுத்து இருக்கின்றனர்.

'கவிதைதான் எங்கள் ஆதி இலக்கிய வடிவம்' என்ற முழக்கம் கவி வரிகளுக்கு மேலும் உரமூட்டுகிறது. சிறுகதை, கட்டுரை, புதினம் போன்ற பல தளத்தில் தங்கள் திறமைகளை நிரூபித்தாலும் கவிதை வரிகளின் வீச்சு, சாடல் இச்சமுதாயத்தை விழிப்படைய வைக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. அரசியல், வரலாறு, பொருளாதாரம், சமூகம், உலகமயமாதல் என்ற தளத்தில் மரபு, புதுக்கவிதை, நவீன கவிதை, தன்முனைக் கவிதை, ஹைக்கூ என்று பல வடிவங்களில் பயணித்து தமிழ்க் கவிதையையே உலக மயமாக்கிக் கொண்டிருக்கிறார்கள் நம் சமகாலப் பெண் கவிஞர்கள். உடல், மனம் சார்ந்த பிரச்சினைகளை அச்சமின்றி தங்கள் படைப்பில் வெளிப்படுத்துகின்றனர். வாழ்வின் அனுபவங்களை செயற்கைத் தனமின்றி வெளிப்படுத்தும் திறன் இன்றைய பெண் கவிஞர்களை வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது. பெண்ணியத்தை மதிக்காத சமூகத்தை கேள்விக் கணைகளால், வலிமை வரிகளால் கேட்கத் துவங்கி விட்டாள் பெண். 'யார் அடிப்பது மனசின் ஒட்டடை..' என்பது கவிஞர் தாமரையின் வரி. உழைக்கும் பெண்ணின் வலியை இதைவிட வலிமையாகச் சொல்ல முடியுமா!

அண்மையில் தமிழ்ச் சூழலில் பெண்ணிய நோக்கு, பெண்ணிய விமர்சனம், பெண்ணிய எழுத்துகள், பெண்ணிய அரசியல் வெகுவாக விவாதிக்கப்பட்டு வருகின்றன. பெண் ஆளுமைகள் தங்கள் கருத்தை சமூகத்தில் அறையும் படி சொல்லும் திறத்தைக் கண்கூடாகக் காண்கின்றோம். பாலியல் வன்முறை, வன்கொடுமை போன்றவை கலாச்சாரத்தை சீரழிக்க விடாமல் சாதி, மத, இனப் பாகுபாடு ஒழிய, சுற்றுச்சூழல் தூய்மை, இயற்கை பாதுகாப்பு, நீர் வளம் காத்தல், இளைய சமுதாயத்தை நெறிப்படுத்துதல் போன்ற விழிப்புணர்வுக் கருவை மையமாகக் கொண்டு எண்ணற்ற கவி படைத்து சமூக சேவை எண்ணத்துடன் பெண்கள் முன் வரவேண்டும்.

'வாளினும் கூர்மையானது பேனா முனை' என்ற கருத்தை உண்மையாக்க பெண் கவிஞர்கள் எழுச்சியுடன் இன்னும் வீரியமிக்க படைப்புகளைப் படைக்க வேண்டும்.

'நுகத்தடியை எறிந்து விட்டு சகத்தினிலே
இன்னும் சாதிக்க மறந்துவிட்ட சிறகுகளை
விரித்து புறப்பட்டு விட்டாளவள் புயலாக!

புகழ வேண்டாம் பூவென்று கூறி
விருட்சம் தாங்கும் வேரவள்
தென்றலெனக் கூறி நிறுத்தி விடாதீர்கள்!'

காலத்தால் அழியாத படைப்புகளில் வாழ்ந்து இவ்வுலகை இயக்கிக் கொண்டிருப்பாள் என்றும் பெண்!

# இதயத்தின் ஈரமொழி

நிலையான அன்பில்
நிம்மதி அடையும் மனது
போராட்ட வாழ்விற்கும்
போதுமாகிப் போகும்.

யதார்த்தங்களையும் கடந்து
யாதுமாகி இருப்பதெல்லாம்
நேசத்துளிகளுக்காகவே அன்றி
வேறு எதுவாக இருக்கக் கூடும்.

இமைக்கும் பொழுதுகளிலும்
இமைக்கா நொடிகளிலும்
இதயம் உறைவதெல்லாம்
ஈர்க்கப்பட்ட அன்பில்தானே.
கனத்துப் போன மனக் காயமும்
கணப்பொழுதில் காணாமல் போக
கண்டறிந்து உணரும் உள்ளத்தின்
அன்பு கடத்தும் அதிசயம் தான்.
மலர்களை நாடும்
தேனீக்களைப் போல
பேரன்பின் மீதான பேராசை
யாரையும் விட்டதில்லையே.

இந்த வெள்ளந்தி மனதிற்கு
மெய்யன்பே போதும் சகியே
வேறென்ன வேண்டும் சொல்வாய் நீயே.

**முபீதா அமீன்**
அக்கரைப்பற்று.
இலங்கை

# பெற்றவரே உனக்காக

உன் தியாகம்
உதிரத்தினால் உருவாக்கப்பட்டதால்
உலக நிதர்சனத்தில் - நீ
மெழுகுவர்த்திதான்
வாப்பா உடன் நீ ஓயவில்லை
உம்மா என்றான உறவு சுமந்து
வியர்வையினால்
விழுதாகி கொழுகொம்பானதால்
விடைகாணா கனவுகளை
இலட்சிய இலக்குகளாக்கி
கருதங்கம் கிழித்து
வேரூன்றி விருட்சமாக
எத்தனையோவிழி மூடா இரவுகள்
சாட்சியம் கூறும்
எம் சாதனைகளில்.

வறுமை என்றும் வெறுமை தான்
விலக்கல்கள் தரித்து வாழும்
வாழ்க்கையில்
பொன்னான போதனைகளால்
எமை செதுக்கியதால்.

வாழ்நாளில் செவிலிகள் எம்மை
சுமக்கவில்லை என்றாலும்
உன் பராமரிப்பும் பழுதாகவில்லை
தாயே தந்தையுமாகி
இடம் நிரப்பல்
உன் மேலான
மேன்மை சொல்லும்
உன் வியக்கத்தகு அடைவுகளின்
பக்கப்பிரட்டலில்
ஆண் இனமும்
விழி விரிக்கும்.

பொறுமைக்கு கட்டியம் சொல்லும்
உன் நாமம்
நீ கலங்கிய நாட்களை கணக்கிடுகையில்
விம்மி வடியும்
விழியோடு நெஞ்சம்
ஆயுளில் நான்கில் மூன்றை மிஞ்சியதால்.

அதற்குள்ளும்
நிழல்களின் நக்கீல்ஸ்ஸான அடைவுகள்
இமய உச்சம் தாண்டி
உயிர்ப்பானதால்
கல்பு கண்ட காயம் மறந்து
பெருமித்து போனாய்
பொருள் கொண்ட பெருமைகளால்
அல்ஹம்துலில்லாஹ்
அவன் அருளிய அருட்கொடைகளுக்கு.

அவள் வளர்ப்பின் தீரா அர்த்தமாய்
தினம் தினம் கொண்டாடி தீர்த்தாள்
அனைவரும் அதிசயிக்கும்
அன்னையர் தினத்தை
என்றாலும் சுவனம் செல்ல சுணங்காமல்
நஜீப் வழி
நடந்தேறியது மரணம்.

ஈமானின் வலிமை
பொருந்திக் கொள்ளல்
இன்னாலில்லாஹ் இயம்பி
இருகரம் ஏந்துகிறேன்
இறைவனிடம் சொர்க்கத்து சோலையில்
அவளுக்காய்
அரியாசனம் ஒன்றை
அருள வேண்டி.
ஆமீன்.

**மு.ஹ.முர்ஷிதா ஷிரீன்**
விவசாய போதனாசிரியர் ( ஏறாவூர் )
சம்மாந்துறை, இலங்கை.

# பார்வை




இயற்கையைப் பாடும் இரண்டாம் மித்ரா அன்புச்செல்வி சுப்புராஜு
(மோதிரம் வரையும் நிலா
ஹைக்கூ தொகுப்பை முன்வைத்து)

இலக்கியம் ஒரு பெருங்கடல். அலைகளாக தொகுப்புகள் வந்து கொண்டேயுள்ளன. கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு அவர்களும் பல தொகுப்புகள் வெளியிட்டுள்ளார். கவிதை, ஹைக்கூ, தன்முனை, சிறுகதை என பன்முகங்களில் பயணிக்கிறது அவரின் இலக்கியப் பயணம். கவிஞர் தன்னுடைய தொகுப்புகளை வெளியிட்டதுடன் பல்வேறு கவிஞர்களின் பல்வேறு கவிதைகளையும் தொகுத்து வழங்கி ஒரு தொகுப்பாளராகவும் அடையாளப் பட்டுள்ளார். கவிஞரின் ஹைக்கூக்கள் மட்டும்அடங்கியதாக மோதிரம் வரையும் நிலா என்னும் ஹைக்கூ தொகுப்பு வெளிவருகிறது. அன்பின் சங்கமம் சிறுவர் உலகம், தன்முனைக் கவிதை படைப்பாளர்கள் பேரவை என்னும் இரண்டு இலக்கிய அமைப்புகளையும் நடத்தி வருகிறார். எழுதுதல், இயங்குதல் கவிஞரின் தொடர் பணியாக உள்ளது.

வீடு என்பது ஓர் அருங்காட்சியகமாக இருக்கக் கூடாது. ஒழுங்குடன் இருத்தல் ஆகாது. வைக்கப்பட்ட இடத்திலேயே பொருள் இருந்தால் அதில் உயிர்ப்பு இருக்காது.

அடுக்கிய துணிகளைக்
கலைத்துப் போட்டது குழந்தை
வீடு வீடானது

என கவிஞர் அன்புச்செல்வியும் கலைத்துப் போட்ட பின்பே வீடு வீடாக இருக்கிறது என்கிறார். அம்மாக்களால், அப்பாக்களால் அடுக்கி வைக்க முடியும். கலைக்க குழந்தைகளால் மட்டுமே முடியும். கலைத்தாலே, கலைக்கப் பட்டிருந்தாலே வீடு வீடாக இருக்கும் என்கிறார். ஆனால் ஹைக்கூ ஒழுங்காக உள்ளது.

பேசப்பேச
கூடும் ஏக்கம்
காணொளியில் பெயரன்

என்னும் ஹைக்கூ பல சிந்தனைகளை மனத்தில் ஏற்படுத்துகிறது. பொருளாதாரம், வேலைவாய்ப்பு ஆகியவற்றினால் கூட்டுக் குடும்பம் என்னும் ஓர் அமைப்பே இல்லாமல் போனது. வெளியூர் சென்று பிழைப்பு தேடுபவர்களை விட வெளிநாடு சென்று பிழைப்பவர்கள் அதிகரித்து

விட்டனர். மகன், மகள், பேரன், பேத்திகளுடன் காணொளியில் பேசியே காலம் கழிக்க வேண்டியுள்ளது. ஆனாலும் ஓர் ஏக்கம் உள்ளது என்பதைக் கவிஞர் ஹைக்கூ மூலம் வெளிப்படுத்தியுள்ளார். காணொளியில் பேசுவது நேரில் பேசும் உணர்வைத் தராது. மேலும் ஏக்கத்தையே அதிகரிக்கும்.

என்ன அவசரமோ
தண்டவாளத்தில் நசுங்கிய
அந்த உயிருக்கு

என்னும் ஹைக்கூவில் கவிஞரின் கருணை மனம் வெளிப்பட்டுள்ளது. இறந்து போன உயிருக்காக இரக்கப் பட்டுள்ளார். அந்த உயிர் என்கிறார். அது எந்த உயிராக இருந்தாலும் உயிர்தானே என்று வருத்தச் செய்கிறார். அவசரம் என்னும் வார்த்தையே அது தற்கொலை என்னும் முடிவிற்கு வரச்செய்கிறது. தற்கொலை முயற்சியும் தவறு என்று ஹைக்கூ மூலம் உணர்த்துகிறார்.



பொன்.குமார்

பட்டாம்பூச்சி மலருக்கு மலர் அமர்ந்து தேனை உறிஞ்சி பறந்து திரியும். பட்டாம்பூச்சி தன் தேவைக்காக மலர்களில் அமர்ந்தாலும் தனக்குத் தெரியாமலே மலர்களின் மகரந்த சேர்க்கைக்கு உதவுகிறது. பட்டாம்பூச்சியின் இச்செயலைக் கவிஞர்

ஒட்டிய மகரந்தத் துகள்களை
உதிர்த்தப் படியே பறக்கிறது
பட்டாம்பூச்சி

என்று ஹைக்கூவாக்கிக் காட்டுகிறார். இயற்கையைப் பற்றிய பதிவானாலும் இயற்கையான பதிவாக உள்ளது. மகரந்த சேர்க்கை எவ்வாறு நடக்கிறது என்பதையும் தெரிவிக்கிறது.

மக்கள் எப்பொருளை வாங்கினாலும் பேரம் பேசியே வாங்குவர். விற்பவன் விலையை ஏற்றி பேரம் பேசுபவருக்கு குறைத்துக் கொடுப்பதும் ஓர் ஏமாற்று வேலை. பேரம் பேசி வாங்கியதில் ஒரு பெருமகிழ்ச்சி. ஆனால் இப்பேரம் வெள்ளரிப்பிஞ்சு வாங்குவதிலும் தொடர்வது வருத்தமளிக்கவே செய்கிறது.

பேரம் பேசுதலில்
வெம்பிப் போகிறது
வெள்ளரிப் பிஞ்சு

என்னும் ஹைக்கூவில் வெள்ளரிப் பிஞ்சு வெம்பியதாக எழுதியுள்ளார். வெள்ளரிப் பிஞ்சு மட்டுமல்ல வெள்ளரிப் பிஞ்சு விற்கும் பிஞ்சு மனதும் வெம்பி விடுகிறது. ஹைக்கூவும் சுருக்கமாக, செறிவாக உள்ளது.

விவசாயிகள் குறித்த ஹைக்கூக்களிலேயே வித்தியாசமாக இருக்கிறது கவிஞர் அன்புச்செல்வி எழுதிய ஹைக்கூ

கொள்முதல் நிலையம்
விலை பேசப்படும்
விவசாயிகளின் கண்ணீர்

விவசாயிகளிடம் உற்பத்தி செய்வதை நேரடியாக கொள்முதல் செய்ய அரசு நிலையங்களை அமைத்துள்ளது. ஆனாலும் உரிய விலை கிடைப்பதில்லை. உற்பத்தி விலையை விட குறைவான விலைக்கே வாங்கப்படுகிறது. அதிலும் ஏமாற்றுதல், இலஞ்சம் வாங்குதல் உண்டு. கவிஞர் விவசாயிகளின் கண்ணீரே விலை பேசப்படுகிறது என விவசாயிகளுக்காக வருந்தியுள்ளார். விவசாயிகளுக்கான குரல்

கவிஞரிடமிருந்து வெளிப்பட்டுள்ளது.

எறும்புகள் ஊர்வலமாக செல்வது இயல்பு. இயற்கை. எங்கு செல்கின்றன, எதற்கு செல்கின்றன என தெரியாது. பின்தொடர்பவர்கள் குறைவு.

எறும்புகளின் வரிசை
பின் தொடர்ந்து போகும்
துப்பறியும் கண்கள்

என்னும் ஹைக்கூ மூலம் கவிஞர் பின் தொடர்ந்துள்ளது தெரிகிறது. கவிஞரின் ஹைக்கூ கண்கள் துப்பறியத் தொடங்கியுள்ளது.

புத்தருக்கும் ஹைக்கூவிற்கும் ஒரு நெடிய பந்தமுண்டு. நெருங்கிய தொடர்புண்டு. ஹைக்கூவை எழுதுவதற்கும் புத்தரைத் தியானிப்பதற்கும் ஒரு மன நிலைத் தேவை. கவிஞரிடம் அத்தகைய மனநிலை உள்ளது என்பதற்கு தொகுப்பில் புத்தர் பற்றிய ஹைக்கூக்கள் சாட்சியாக உள்ளன. காட்சியாக விரிகின்றன.

இருளின் அடர்த்தி
விலகத் தெளிவாகத் தெரிகிறார்
சிரிக்கும் புத்தர்

சிரிக்கும் புத்தர் சிந்திக்கச் செய்கிறார். இருண்ட மனத்தில் வெளிச்சத்தை பரவச் செய்கிறது ஹைக்கூ.

அழுகுரல் கேட்டு
கொண்டாடும் உறவுகள்
குழந்தைப் பிறப்பு

என்பது எதார்த்தமான ஒரு பதிவு. பிறக்கும் குழந்தை அழ வேண்டும். இல்லையெனில் இருப்பவர் அழ வேண்டும். குழந்தைப் பிறப்பின் போது குழந்தை அழுதால் சுற்றி இருப்பவர்களுக்குக் கொண்டாட்டம் என்கிறார் கவிஞர்.

கிராமத்து விளையாட்டுகளில் ஒன்று சொட்டாங்கல் ஆடுதல். இவ்விளையாட்டும் இப்போது அரிதாகிவிட்டது.

மேலும் கீழுமாக
அலைபாயும் கண்கள்
சொட்டாங்கல் விளையாட்டு

என்னும் ஹைக்கூ மூலம் சொட்டாங்கல் விளையாட்டை நினைவு கூர்ந்ததுடன் விளையாடும் போது கண்கள் அலைபாய்கின்றன என்கிறார். ஒரு படப்பிடிப்பாக உள்ளது. விளையாடியவர்களுக்குத் தெரியும். விளையாட்டைப் பார்த்தவர்களுக்கும் தெரியும். கண்கள் அலைபாய்வதை கற்பனையில் காணச் செய்துள்ளார்.

சிலைகள் பொதுவெளியில் இருக்கும். வாகனங்கள் செல்ல செல்ல சிலை முழுவதும் தூசு படிந்திருக்கும். மழை பெய்தால் சிலை குளித்தது போலிருக்கும். இந்நிகழ்வை அழகாக ஹைக்கூவாக்கியுள்ளார்.

பொழியும் மழை
தழுவியதும் திறந்தன

என்று இரண்டு வரிகள் எழுதி ஓர் எதிர்பார்ப்பை உண்டாக்கி மூன்றாம் வரியில்

சிலையின் கண்கள்

என்கிறார். சிலை கண் திறந்தாலே அழகு. சிற்பிகள் சிலை செய்யும் போது கடைசியாகவே கண் திறத்தலை செய்வர் என்பர். அதுவே முக்கியம். அதே போல் இந்த ஹைக்கூவும் மூன்றாம் வரியிலேயே

கவிஞர் ஹைக்கூவின் கண்ணைத் திறந்துள்ளார்.

வானவில்லின் நிறங்கள் ஏழு. அவை ஊதா, இண்டிகோ, நீலம், பச்சை, ஆரஞ்சு, மஞ்சள், சிவப்பு. எப்போது வானவில் தோன்றினாலும் இவ்வரிசையிலேயே நிறங்கள் தோன்றும். ஆனால்

நிறம் மாறினாலும்
அழகாக இருக்கிறது
அம்மு வரைந்த வானவில்

என்கிறார் கவிஞர். வண்ணங்கள் வரிசை மாறினாலும் அழகுதான். காரணம் வண்ணங்களின் கூட்டணி வசீகரிக்கவே செய்யும். கவிஞர் ஹைக்கூ எழுதினால் நன்றாக இருப்பது போல அம்மு வரைந்ததால் அழகாகவே இருக்கும்.

பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் சந்திரன் செல்லும் போது சூரியக் கிரகணம் ஏற்படுகிறது. இக்காட்சி வானில் அரிதாக நிகழும். இதுவோர் அறிவியல் நிகழ்வு..

சூரியனைச் சுற்றி
மோதிரம் வரையும் நிலா
சூர்யக் கிரகணம்

என்னும் ஹைக்கூ மூலம் கவிஞர் இந்நிகழ்வை மோதிரம் வரையும் நிலா என்கிறார். சூரியனுக்கு மோதிரம் அணியும் விழா என்றும் குறிப்பிடலாம்.

ஒரு விதை என்பது ஒரு காடு. ஒரு விதையை ஊன்றினால் அது மரமாகும் போது பல விதைகளைத் தரும். பின்னர் ஒரு காடே உருவாகிவிடும்.

அத்தி விதையை
இழுத்துச் செல்லும் எறும்பு
இடம் பெயரும் வனம்

என்னும் ஹைக்கூவில் ஒரு விதையை இழுத்துச் செல்வதால் ஒரு வனமே இடம் பெயர்கிறது என்கிறார். பொதுவாக பறவைகளே விதைகளைப் பரப்பும் என்பர். கவிஞர் எறும்பும் பரப்பும் என்கிறார்.

கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜூ அவர்களின் ஹைக்கூ பயணம் அமைதியாக, அழகாகச் செல்கிறது. மோதிரம் வரையும் நிலா என்னும் இத்தொகுப்பில் உள்ள ஹைக்கூக்களில் புதிய பாடு பொருள்களை புகுத்தி ஹைக்கூவை அடுத்த தளத்திற்குக் கொண்டு செல்ல முயன்றுள்ளார், ஹைக்கூவில் மிகுதியாக சமுதாயம் பற்றியதாகவே இருக்கும். கவிஞர் அன்புசெல்வி சுப்புராஜூ அவர்களின் ஹைக்கூக்களில் இயற்கையே அதிகம் காணப்படுகின்றன. இயற்கைக் குறித்தே அதிகம் பாடப்பட்டுள்ளன. கவிஞர் மித்ராவிற்கு பின் ஹைக்கூவில் இயற்கையைப் பாடியவர் இவராகவே இருப்பார். இரண்டாம் மித்ரா என்றே அழைக்கலாம். கவிஞர் பல ஹைக்கூ தொகுப்புகளைத் தொகுத்தளித்துள்ளார். தொகுப்புகள் தொகுத்த அனுபவம் கவிஞருக்கு ஹைக்கூ எழுத நன்கு உதவியுள்ளது. மோதிரம் வரையும் நிலா கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜூ மீது ஒரு புது வெளிச்சம் பாய்ச்சும் என்றே நம்பலாம். மோதிரம் வரையும் நிலாவிற்காக கவிஞரின் விரல்களுக்கு மோதிரம் அணிந்து பாராட்டலாம்.

எழுதுங்கள்!
எழுதுகிறேன்!
எழுதுவோம்!

# நான் என்பவன் யார்



நான்.....!!
கோபக்காரன், முரடன். சுயநலவாதி,
ஒழுங்காக பேசத் தெரியாதவன்.
முகத்துக்கு நேர் பேசுபவன்.

இப்படியெல்லாம்
என் முதுகுக்குப் பின்னால் பேசுகிறீர்கள்.
என் முதுகுக்குப் பின் நீங்கள் பேசுவதை
பற்றி எந்தவொரு கவலையுமில்லை.
என் முகத்துக்கு நேர் பேசக்கூட
உங்களுக்கு முதுகெலும்பில்லையென்று
பெருமை கொள்கிறேன்.

உங்கள் வார்த்தைகள் என் கொள்கையை
தீர்மானித்து விடாது.
ஆம் நான் கோபக்காரன் என்பதில்
மகிழ்ச்சி அடைகிறேன்.
எனைத் தவிர எவரும் என் மனதை
புரிந்துகொள்ளக் கூடாதென்று
விடாப்பிடியாய் இருப்பதால்.....
நான் முரடன் என்பதில்
கர்வம் கொள்கிறேன்.
நான் வளர்ந்து வந்த கரடு முரடான
வலி மிகுந்த பாதைகளை நீங்கள்
வாழவில்லையென்பதால்...

நான் பேசத்தெரியாதவன் என்பதில்
எனை நானே மெச்சுகிறேன்...
என் பேச்சுக்கள் பலரை நிலை குனியச்
செய்யுமென்பதால்...
முகத்துக்கு நேர் பேசுபவன் என்பதில்
கொஞ்சம் புன்னகை செய்கிறேன்.
மனதை கொஞ்சம் தூய்மையாக
வைத்திருப்பதால்..

நீங்கள் பார்த்தது, பார்த்துக்கொண்டிருப்பது
நூலின் வெளிதோற்றத்தை தான்,
இறுதி வரை நூலை படிக்காமல்
முடிவு செய்ய உங்களுக்குத் தகுதியில்லை.
என் பாதையில் நீங்கள் பயணம்
செய்யாதவரை,

நீங்களெல்லாம் உத்தமர்கள் தான்.
எனை போன்ற மனம் படைத்தோரெல்லாம்
கோபக்காரன், முரடன், சுயநலவாதி,
ஒழுங்காய் பேசத் தெரியாதவன்,
முகத்துக்கு நேர் பேசுபவன் தான்.

**அம்பர் அப்துல்லாஹ்**




மழலைப் பாடல்களுக்காக இரட்டை நோபல் உலக சாதனை 2024 இல் இந்தியா சென்னையில் பெற்ற போது

**நேர்கண்டவர் : ஆயிஷா சகீலா**

பிரபல எழுத்தாளரும் ஊடகவியலாளரும் சமூகசேவையாளருமான மாவனல்லை பாரா தாஹீர் உடனான நேர்காணலோடு இவ்விதழில் உங்களை சந்திக்கிறோம்.

இலக்கியத்துறையில் பல சாதனைகளை நிகழ்த்தி இன்று வரை தொடர்ந்து இலக்கியத்திற்குப் பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கும் இவர் நூற்றுக் கணக்கான கவிதைகள் மற்றும் சிறுகதைகளை எழுதியுள்ளார். இவரின் சிறுகதைகள் மற்றும் கவிதைகள் இலங்கை தேசிய பத்திரிகைகளில்

# தேசமான்ய பாரா தாஹீர் நேர்காணல்




பதுரியா மத்திய கல்லூரி கலண்டர் விநியோகத்தின் போது



அகில இலங்கை ஆற்றல் உள்ள பெண்கள் அமைப்பின் நான்காவது மாநாட்டில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் இஸட்.ஏ.எம்.பைசல் அவர்களிடம் இருந்து 2024 இல் ஊடக பங்களிப்புக்கு கிடைத்தது

பிரசுரமாகி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. சென்னையில் நடைபெற்ற உலக சாதனை விழாவில் 5000 மழலைப் பாடல்களை ஒரே நூலாக வெளியிடும் நிகழ்வில் தனது ஐம்பது பாடல்களையும் இணைத்து பங்களிப்பு செய்தமைக்காக இரட்டை நோபல் பரிசு பெற்றதோடு 'தமிழ்நேசன்', 'கவிச்சுடர்', 'கவித்தென்றல்' ஆகிய பட்டங்கள் மற்றும் விருதுகள் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மனித உரிமைகளுக்கான சமாதான அமைப்பின் ஊடகத்துறை பொறுப்பாள ராக செயற்படும் இவர் அகில இலங்கை ஆற்றல் உள்ள பெண்களின் அமைப்பான ஸ்ரீ லங்கா பெண் கிளப் அமைப்பின் ஊடக இணைப்பாளராக செயலாற்றுவதோடு அகில இலங்கை சமாதான நீதவானாகவும் கடமையாற்றுகின்றார்.

இவரைப் பற்றிய சிறிய அறிமுகத் தோடு நேர்காணலுக்குள் நுழைவோம்.

- **உங்களைப் பற்றிய ஒரு சிறிய அறிமுகத்தைத் தாருங்கள்.**

*நான் பாரா தாஹீர். இலங்கை திரு நாட்டின் எழில் கொஞ்சும் மலையகத் தின் பதுளையை பிறப்பிடமாகவும், மாவனல்லையை வசிப்பிடமாகவும் கொண்டிருக்கிறேன். எனக்கு இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் உள்ளனர். தற்போதுள்ள மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி, மகளிர் கல்லூரி யாக இருக்கும் போது அதில் ஆரம்ப கல்வி முதல் உயர்நிலைக் கல்வி வரைக்கும் கற்றுத்தேர்ந்து, மேற்படிப்பை பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக கற்றுத் தேர்ந்தேன். நான் ஒரு சமாதான நீதிவானாகவும், எழுத்தாளராகவும், கவிஞராகவும், ஊடகவியலாளராகவும், சமூக சேவையாளராகவும் திகழ்கிறேன்.*

- **இலக்கியத்துறைக்குள் பிரவேசிப் பதற்கான உங்கள் தூண்டு கோல் என்ன?**

*நான் கல்வி கற்ற காலத்தில் எனது தந்தையார் தாஹீர் அவர்கள் எமக்காக தமிழ், சிங்கள, ஆங்கில பத்திரிகைகளை வாங்கி வாசிப்பை ஊக்கப்படுத்தினார். எனது தாயார் ரம்ஜான் பீ அவர்கள் இலங்கைக்கான மாலைதீவு தூதுவரா லயத்தில் எழுதுவிளைஞராக கடமைப் புரியும் போது எழுத்துத்துறையில் ஈடுபட் டுள்ளதோடு, இலங்கை வானொலி*

திப்பிடிய முஸ்லிம் வித்தியாலயத்தில் புலமை பரிசில் பெற்ற மாணவர்களை கௌரவித்தல்





உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வு பொன்விழா மாநாட்டில் 2016 இல் இலக்கிய பங்களிப்பை பாராட்டி பொன்னாடை போர்த்தி அமைச்சர் ரிஷாத் பதுர்த்தீனால் கௌரவிக்கப்பட்டமை.

முஸ்லிம் சேவையில் நாடகமும் நடித்துள்ளார். அத்தோடு அவர் ஒரு மேடை பேச்சாளரும் ஆவார். இவ் இரு நிகழ்வுகளுமே என் இலக்கிய பிரவேசத்துக்கு தூண்டுகோலாக அமைந்திருக்கும் என கருதுகிறேன்.

- **இலக்கியத்துறையில் நீங்கள் செய் துள்ள பங்களிப்புகள் பற்றிக் கூற முடியுமா?**

கவிதை, கட்டுரை, சிறுகதை, விமர் சனம், சம்பவம், என பலதையும் இலங்கையிலிருந்து வெளிவரும் பல பத்திரிகைகளுக் கும், வானொலி நிகழ்ச்சிகளுக்கும், சஞ்சிகைகளுக்கும், தொலைக் காட்சி நிகழ்ச்சி களுக்கும் எழுதி யுள்ளேன். பல இலக்கிய போட்டி நிகழ்ச்சிகளில், சாஹித்திய விழா உட்பட பங்குபற்றி பரிசில்களும், சான்றிதழ்களும் பெற்றுள்ளேன். பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள், சவால்கள், சமூகத்தில் ஏற்படும் அநீதிகளை தட்டிக் கேட்டல், சிறுவர் துஷ்பிரயோகம், பெண் ஆளுமைகள் பற்றியெல்லாம் எழுதியுள்ளேன்.

சென்னையில் உலக சாதனை விருதின் போது




- **ஒரு பெண் ஊடகவியலாளராக சாதித்துக்கொண்டிருக்கும் நீங்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரதான சவால்கள் என்ன?**

முஸ்லிம் பெண்கள் ஊடகத் துறைகளில் ஈடுபடுவது குறைவு. பத்து வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன். இத்துறைக்குள் காலடி எடுத்து வைத்த ஆரம்ப காலங்களில் பெண் ஊடகவியலாளர் என்ற வகையில் பல சவால்களை சந்தித்துள்ளேன். குறிப்பாக முஸ்லிம் பெண் ஊடகவியலாளர் என்ற ரீதியில் செய்திகள் சேகரிக்க சென்ற இடங்களில் முஸ்லிம் பெண்களுக்கு தகுதியான தொழில் இதுவல்ல என அலசப்பட்டது. அவற்றை சவாலாக எடுத்துக் கொண்டு முன் வைத்த காலை பின் வைக்காமல் கணவர் எம்.எப்.எம். ஓமர் அவர்களின் ஊக்கத்தோடு படிகளை தாண்டி வந்தேன். அண்மையில் கூட பிரபலமான ஒரு பத்திரிகையில் தொடராக பிரசுரமான எனது செய்திகளை கண்டு பொறாமை பட்ட ஒரு ஊடகவியலாளரே எனது செய்திகள் பிரசுரமாவதை தடுத்து நிறுத்த அந்த பத்திரிகை நிறுவனத்தோடு தொடர்பை ஏற்படுத்தி தடுத்து நிறுத்த எத்தனித்ததை அறிய முடிந்தது. ஆனாலும் எதையும் உள்வாங்கி சளைக்காமல் என்னால் முடிந்தளவு சமூகத்துக்காக ஊடகத் துறை மூலம் பணியாற்றுகிறேன்.

- **உங்களது இலக்கியத்துறைக்கு உங்கள் குடும்பத்தவர்களின்மற்றும்கணவரின் ஒத்துழைப்பு எவ்வாறானது?**

என் இலக்கிய துறைக்கு என் பெற்றோர் தொன்று தொட்டு உதவிக்கரம் தந்தார்கள். எழுதுவதற்கு ஒத்துழைப்பு வழங்கியதோடு எங்கு இலக்கிய நிகழ்வுகள் நடந்தாலும் என்னை அழைத்துச் சென்று ஊக்குவித்தனர். காலப் போக்கில் இலக்கிய வாசமே இல்லாமல் இருந்த கணவர் என்னோடு பயணித்து எனது முதல் ரசிகராக இருந்ததை மறக்க முடியாது.

- ***உங்களது எழுத்துத்துறையின் பிரதான கருப்பொருள் எவ்வாறானதாக இருக்கும்?***

பிரதான கருப்பொருளை சமூகத்தில்



சென்னையில் உலக சாதனை விருதின் போது

இருந்தே இனம் கண்டு எடுப்பேன். பொதுவாக பெண்கள், சிறுவர்கள், முதியோர் பிரச்சனைகள், நாட்டு நடப்பு , நாட்டு அநீதிகள், போதைப் பொருள் என பலதையும் அடையாளப்படுத்தலாம்.

- ***பெற்ற விருதுகள் ?***

இந்தியா உலக சாதனையாளர் விருதாக தமிழ்நேசன், கவிச்சுடர், கவியருவி, கவித்தென்றல் மனித உரிமை விருதாக தேசமான்ய, கீர்த்தி ஸ்ரீகலா, விபூதிதிரியகான்தா மற்றும் போதைப் பொருள் பாவனை ஒழிப்பு ரம்ய லங்கா, உலக இஸ்லாமிய எழுத்தாளர் சங்கம்,



சென்னையில் உலக சாதனை விருதின் போது

அஹதிய்யா சம்மேளனம், கோல்டன் ஸ்டார் விளையாட்டு கழகம், அகில இலங்கை ஆற்றல் உள்ள பெண் எழுத்தாளர் சங்கம், போன்றவற்றிலும் விருதுகள் பெற்றிருக்கிறேன்.

- ***தற்காலத்தில் எழுத்துத்துறையும் எழுதுவதற்கான களமும் விரிவடைந்துள்ளது. சமூக ஊடகங்கள் நிறைய எழுத்தாளர்களை அறிமுகம் செய்கின்றது. இது பற்றிய உங்கள் கண்ணோட்டம் யாது?***

உண்மையில் களம் விரிவடைந்துள்ளது. முன்பு பத்திரிகைகளையும் சிறு சஞ்சிகைகளையும் மட்டுமே அநேகமாக நம்பி இருக்க வேண்டியிருந்தது. அதனால் தரமான எழுத்துகளுக்கே இடம் கிடைத்தது. அதற்கு மாற்றமாக இப்போது அச்சு ஊடகங்களை விட இணையத்தளங்களில் பலர் எழுதி வருகின்றது மட்டுமல்லாமல் எழுதிய குறுகிய காலத்துக்குள் நூல்கள் வெளியிட முனைவது வியப்பாகவுள்ளது. இவர்கள் காண்பதை கற்று நிறைய எழுத வேண்டும். அனுபவம் பெற வேண்டும்.

- ***மனித உரிமைகளுக்கான சமாதான அமைப்பின் ஊடகத்துறை பொறுப்பாளராக இருக்கிறீர்கள். இதன் மூலம் நீங்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் பற்றிக் கூற முடியுமா?***




பதுரியா மத்திய கல்லூரி கணணி அறைக்கு பழைய மாணவியரால் கதிரைகள் அன்பளிப்பு




முஸ்லிம் மீடியா போரம் ஊடக செயலமர்வில் பங்களதேஷ் உயர்ஸ்தானியரோடு

மனித உரிமைகளுக்கான சமாதான அமைப்பின் நிர்வாக அங்கத்தவராக இருப்பதோடு வறுமை ஒழிப்பு, சிறுவர் மற்றும் முதியோர் போசாக்கின்மை சம்பந்தமாக விழிப்புணர்வு நிகழ்வுகளை ஏற்படுத்தல் திடீர் அனர்த்தம் நிகழும் போது சமூக தொண்டு புரிதல் போன்ற வற்றில் ஈடுபடல்.

- **இலக்கியத்துறையில் பெண்கள் முன் னேறுவதற்குக் குடும்பம் தடையாக இருக்கிறது என்று கருதி தமது திறமைகளை முடக்கி வாழும் பெண் களுக்கு நீங்கள் கூற விரும்பும் ஆலோ சனைகள் என்ன?**

இலக்கியத் துறையில் பெண்கள் முன்னேறுவதற்கு குடும்பம் தடையாக இருக்கும் அளவுக்கு நாம் நடந்துக் கொள்ளக் கூடாது என்பதையே நான் முன் வைக்க விரும்புகிறேன். எதற்கும் திட்டமிடல் அவசியம். எமக்குள் ஒரு கட்டமைப்பை வைத்து திட்டமிட்டு குடும்ப புரிந்துணர்வை அனுசரித்து செயல்பட்டால் வெற்றி உண்டு. அடுப்பூதும் பெண்கள் நிலமை மலையேறி விட்டதென்றே சொல்லலாம்.

- **எமது தமிழ்நெஞ்சம் இதழ் பற்றிய உங்கள் கண்ணோட்டம் என்ன?**

**தமிழ்நெஞ்சம் 53 ஆண்டு காலமாக வெளிவந்துக்கொண்டிருக்கிறது என்றாலும், இதழ் அறிமுகம் எனக்கு குறுகிய காலத்துக்குள்ளே தான் அறிமுகம் கிடைத்தது. அது பல்சுவைகள் நிறைந்த சஞ்சிகை என்றே சொல்லலாம். பல எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறது போற்றத் தக்கதாக உள்ளது. ஆளுமைகளை நேர்கண்டு அறிமுகம் செய்துக் கொண் டிருப்பது வரவேற்கக் கூடியது. மொத்தத்தில் சிறந்த ஒரு சஞ்சிகை. வளர்க அதன் பணி. தமிழ்நெஞ்சம் இதழின் ஆசிரியர் அமின் அவர்களையும் சந்திக்க முடிந்தது. அவரை சந்தித்தபோது அவரிடமிருந்து பல விடயங்களை கற்றுக்கொள்ள முடிந்தது. வளர்க அவர் தொண்டு.**

**மகிழ்வாக விடைபெற்றோம். நன்றி.**

பதுரியா மத்திய கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியர்களை கௌரவித்தல்



HROPA மனித உரிமைக்கான சமாதான தூதுவர் அமைப்பினால் 2022 இல் தேசியமானிய திரிய கான்தா விருது பெற்ற போது



## சித்திரையே நித்ததிலமே வருக !!

பாவலர் கருமலைத்தமிழாழன்

சித்திரையே நித்ததிலமே வருக
சிறப்புகளை அள்ளியள்ளித் தருக !
முத்தமிழின் சுவைவாழ்வில் பொழிக
முகிழ்வின்பம் கையிலேந்தி வருக !

அமிழ்தத்தைப் பொழிந்திடவே வருக
அல்லலினை ஓட்டிடவே வருக !
திமிர்ந்தஞானம் அகமேற்றி வருக
திகழுஞ்ஞான மருளோட்டி வருக !

தங்கிருக்கும் அவலங்கள் நீங்க
தரணியெல்லாம் செழிப்பள்ளிப் பொழிக !
மங்கலமே மனையெல்லாம் பொங்க
மகிழ்ச்சியெனும் மலர்களினைக் கொணர்க !

அன்புதனை மனங்களிலே சேர்ப்பாய்
அரவணைக்க மனிதநேயம் வளர்ப்பாய் !
வன்முறைகள் இல்லாமல் ஒழிப்பாய்
வளர்ச்சியினை ஒற்றுமையால் விளைப்பாய் !

பொய்மைகளின் முகம்கிழித்துக் கொல்வாய்
பொதுமையெண்ணம் பகையழிக்கும் சொல்வாய் !
மெய்மைகளே நலம்பயக்கும் என்பாய்
மேன்மையெலாம் உழைப்பதில்தான் மொழிவாய் !

செந்தமிழைத் தெருவெல்லாம் ஏற்று
செவ்வறமே நமதென்று சாற்று !
சிந்தனையில் புதுமைகளை ஊற்றிச்
சித்திரையே எமைவாழ்த்திப் போற்று !

# நினைவுகள்

நினைவுகள் அன்றி
மனம் நிற்குமா?
புனைவுகள் அன்றி
கவிதைகள் நிற்க்குமா?

நிறைந்து இருக்கும்
மனதில் மகிழ்வு இருக்கும்
மறைத்து வைத்த
மந்தணம் சிரிக்கும்

சிரிக்கும் கனவுகள்
மெய்ப்பட வேண்டும்
விரியும் நினைவுகள்
கையகப்பட வேண்டும்

வேண்டும் என்றும்
வேண்டாமென்றும் நிலை மாறட்டும்
வேண்டியது, வேண்டிய படியே
தண்டனிட்ட படியே ஆகட்டும்

ஆகட்டும் அது
நல்லதாய் முடியட்டும்
பழுதொன்றும் இல்லாமல்
பாங்கான நினைவாக மட்டும்

சசிகலா விஸ்வநாதன்

# வானும் - மண்ணும்

நடராஜன் கே.கணபதி



விண்ணும் வானும் - மண்ணும் போர்க்களம் - வானில் பறக்கும் - விமானம். விமானத்தில் பறக்கும் மனிதர் கள். போர் விமானம் - களத்தில் இறங்கும். பயணத்தில் - விமான போர் வீரர்கள்.

போர்க்களத்தில் வெற்றி பெற்று நாட்டுக்காக போராடும் விமானப் படை வீரர்கள். பலமுறை வெற்றி பெற்றும் ஒருமுறை தலையெழுத்தை மாற்ற முடியாமல் - விமானம் போர் விபத்தில் சிக்கியது - அது அல்லாது - தப்பித்த விமான அதிகாரி.

தன் கால்களும் சிக்கியதை கவனிக்க வில்லை - அப்படியும் விமானத்திலிருந்து குதித்து தப்பித்ததால் 2 கால்களும் செயலிழந்தார். அதுவும் அவருக்குக் கவலையில்லை. நாட்டைக் காத்த பெருமை வெற்றி வீரர் என திகழ்ந்தார்.

அன்று முதல் வேலையில் போர்வீரராக செயலிழந்த 2 கால்கள் இல்லாமல் (Wheel Chair) சக்கர வண்டியிலே அமர்ந்து, வாழ்ந்து கொண்டே பெருமையுடன் வாழ்கிறார். (Ashok Khetkar) அசோக் கேட்கர்... இவரைப் போல் எத்தனை வீரர்கள் மிகவும் முக்கியமான வீராங் கனைகள் வாழ்ந்து வருகிறார்கள். நமக் கென தெரியவரும்.

நம் உள்ளூர் பிரச்சனை வீட்டுப் பிரச்சனை, சமுதாய பிரச்சனை என நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சமூக அந்தஸ்தை பெருக்கிக் கொள்கிறோம். நாட்டுக்காக பாடுபடுபவர்கள் எத்தனை பேர், உயிர் விட்டவர்கள் எத்தனை பேர் - இவர்களில் எத்தனை பேர் விதவைகளாக மாறினார்கள், குழந்தைகள் தகப்பனில்லாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

பொறுப்பில்லாமல் - நாட்டுப்பற்றில் லா மல், கவலையில்லாமல் - சண்டை சச்சரவுடன் எத்தனை பேர். இவை அனைத்துக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க தேச சேவை செய்த ஒரு அதிகாரி 2 கால்களை இழந்தவர் இது ஒரு நிஜ கதைதான். கேட்டுத் தெரிந்து கொண்டது. மிகவும் சோகமான சரித்திரம் படைத்த வீரர் வாழ்ந்தார் வாழ்கிறார்; வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

அவர்தான் விமான படை தளபதி உயர்திரு ஆகோர் கேட்கர் (Delhi) டெல்லி போக விமான நிலையத்தில் ஒரு

கார் வேகமாக வந்து நின்றது - (Departure Entranceல) கிளம்பும் நுழைவாயிலில் கார் வந்துநின்றவுடன் ஓட்டுனர் ஓடி வருகிறார் கதவை திறக்க - அதே சமயத்தில் - விமான சிப்பந்தி (Wheel Chair) இரு சக்கர தள்ளு வண்டியை எடுத்து அந்த கார் கதவின் அருகே நிறுத்த இருவரும் அதில் உள்ளவரை வீல் சேரில் தூக்கி அமர வைத்து தள்ளிக் கொண்டு செல்கிறார்கள் - அவருக்கு 2 கால்களும் இல்லை - விமான பயணி அவரை நேர்வழியாக அனுமதி பெற்று அமைதியாக சோதனை கவுண்டர் வர அவருக்கு பெரும் வரவேற்பு - சல்யூட் அடித்தனர். நேரே விமான தளத்திற்கு - மும்பை - டில்லி விமானம் புறப்படும் இடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அவருக்கு தனி மரியாதை Pilot முன்பு உள்ள விசேஷ Lifeல் கனம் தூக்கியில் அமர வைத்து விமானத்தில் Business Classல் - VIP இருக்கையில் அமர்ந்தார். விமான பயணிகள் அமர வைத்தார்கள் தக்க மரியாதையுடன்.

அவரவர்கள் வந்து அமர்ந்த பின் முக்கிய அறிவிப்புகள் செய்து விமான ஊழியர்கள் தங்கள் வண்ணம் விமான தற்காப்பு செய்திகளை அறிவித்தவுடன் கதவுகளை மூடியபடி வைத்து - விமானம் பறக்கும் செய்தியை விமானி (Pilot) ஒரு பெண்மணி அறிவித்துக்கொண்டே ஒரு செய்தி இன்று நமது சிறப்பு விருந்தினர் Wing Commander விமான படை தளபதி அசோக் கேட்கர் (Ashok Khetkar) முன் சீட்டில் அமர்ந்திருக்கிறார். போரில் 2 கால்களையும் இழந்தவர் என்று அறிவிக்கவே - அனைவரும் நின்று சல்யூட் அடித்து மரியாதை செலுத்தினர். அனைவரின் கண்களிலும் நீர் மல்க. அவர் நிற்க முடியாமல் கைத்தடி உதவியுடன் (Air Hostess) விமானப் பணிப்பெண்ணை பிடித்துக்கொண்டு மறு வணக்கம்

# வெறுங்கனவு

குறுங்கவிதைகள்

1.விற்பனையாளரின் பேச்சில்
வாசம் இல்லாதிருந்தால்
வாடிப் போகும்
பூக்கடை

2.துரத்தும் நாயிடம் தப்பிக்க
கூழாங்கல்லுக்கு அலைந்தால்
இரத்தக் காயம்
இலவசம்

3.தூண்டிலுக்கு தடுமாறும்
மீன்கள் இருப்பது வரை
தேடலுக்கு உள்ளாகும்
மண்புழு

4.உதிர்ந்து விழும்
ஒற்றை இறகுக்காய்
ஆட்டத்தை நிறுத்துவதில்லை
அகவும் மயில்

5. ஏணி படிக்கட்டுகளை
பாதங்களால் தொடாமல்
உயரம் அடைய நினைப்பது
வெறுங்கனவு.

## ஐ.தர்மசிங்
நாகர்கோவில் அடைக்கும் தாழ்.

செலுத்தினார்.

அனைவரும் ஆர்வத்துடன் பிரயா ணத்தை தொடங்கினர். விமானி (Pilot) தான் விமானத்தை டில்லி வரை ஓட்டிச் செல்வதாக, விமானம் ஆகாயத்தில் பறக்கத் தொடங்கியது. எல்லோரும் கைகூப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர். ஒரு வீட்டு விருந்தினர் நம்முடன் பயணம் செய்வதாகக் கருதி ஆனந்தப்பட்டனர்.

அசோக் ஐயா விங் கமாண்டர் - விமான படை அதிகாரிக்கு மனம் கனம் தளர்ந்து ஆனந்தக் கண்ணீர் விட்டார். விமானம் பறந்து கொண்டே இருக்கும்போது அவருக்கு பொறையேறியது. இருமினார். விமான பணிப்பெண்கள் நெருங்கும் முன்பே அவர் அருகில் அமர்ந்திருந்த ஒரு சிறுவன் அந்த தாத்தாவிற்கு தண்ணீர் ஊற்றிக் கொடுத்தான். தாகமும் ஆவேச மும் தீர்ந்தது. எல்லோரும் பிரமித்து போய் நின்றனர். அந்த சிறுவனின் செயலைப் பார்த்து வியந்தனர் விமானப் பெண்கள்.

பாதி வழி தாண்டியதும் விமான ஓட்டி பெண் (Cabin) தன் இருக்கை விட்டு வெளியே வந்து - அசோக் ஐயாவை வணங்கி தன் மார்போடு இணைத்துக் கொண்டாள். தேங்கி தேங்கி அழுதாள். அருகில் அமர்ந்திருந்த பையனும் அந்தப் பெண்மணியுடன் சேர்ந்து அழத் தொடங்கினான்.

விமானத்தில் ஒரே குழப்பம், ஆச்சரி யம். விமானப் பெண்மணி ஓட்டுகையில் இருக்கையை விட்டு வரலாமா. இது சட்ட விரோதம் ஆயிற்றே. விமானத்திற்கு ஏதாவது ஆகிவிட்டால் அனைவரின் உயிரும் பலியாகுமே என்று அலறினர். விமான பெண்மணிகளும் ஆச்சரியத்தில் மூழ்கினர்.

விமான ஓட்டியிடம் ‘மைக்’கை தந்தார்கள். அந்த செய்தி கேட்டு ஒரே கைதட்டல். நான் இவருடைய பெண். அப்பாவை 20 வருடங்களுக்கப்புறம் சந்திக்கிறேன். நான் கலப்பு திருமணம் செய்து கொண்டதால் நானும் அவரும் பிரிந்து வாழ்ந்தோம்.

அவர் வருடா வருடம் ‘சுதந்திர தினத்தன்று’ மும்பை - டில்லி விமானத்தில் சென்று விழாவில் பங்கேற்று சர்கார் விருது பெறுவர். அவருக்கு சிறப்பு செய்யும் இந்தியா சர்காரிடமிருந்து அழைப்பு வரும். மற்றும் அவருடைய நட்பு, உறவு, சக ஊழியர்கள் வீரர்களை சந்திக்க வருவார்.

நானும் விமானம் ஓட்டும் விமானி ஆகவேண்டும் என்ற கனவு என் அப்பாவிற்கு இன்று நிறைவேறிவிட்டது. தாத்தாவிற்கு தண்ணீர் கொடுத்தவர் வேறு யாருமில்லை என் மகன். தாத்தாவை பார்த்து பிரமித்துப் போனான். அவரும் பேரனை கட்டிக் கொண்டு முத்தம் கொடுத்தார். அவனும் அவரை இறுக அணைத்துக் கொண்டான்.

அந்த விமான ஓட்டி தன்னுடன் ஓட்டுபவன் வேறு யாரும் இல்லை என் கணவர் - அவரிடம் ஒப்படைத்து வந்தேன். மறுபடியும் உங்கள் அனைவரையும் மீதி பாதி வழி டில்லி வரை அழைத்துச் செல்கிறேன் என்று ஓடி தன் இருக்கையில் அமர்ந்து விமானத்தை கவனமாக ஓட்டி டில்லி விமான நிலையத்தை அடைந்தனர்.

கவிஞர் டாக்டர்.
நடராஜன் கே.கணபதி

M.A., B.Com., LLB PGdPM.DCP.D.Litt.(USA)

# அண்ணன் தம்பி உறவு பாடல்

அண்ணன் தம்பி உறவுக்குள்ள
ஆயிரம் தான் விசயம் இருக்கு
அன்னை மடி திண்ணை போல
ஆளுக் கொன்னு உறங்க இருக்கு ..

எச்சிப் பால் தம்பி குடிச்சான்
அந்தக் கத ஊர் அறியும்
தம்பி வச்ச மிச்சச் சோற
அண்ணன் தின்னான் யார் அறியும்...

இளையது இளங் காளை என
இந்தக் கத ஊர் அறியும்
மூத்தது முத்துன மூளை என
தம்பி கரையேற அது தெரியும்..

ராமன் லட்சுமணன் என்ற பேரு
தெருவுக் கொரு நாலு பேரு
சோட்டாளு தோளோடு தோள் சேர
தெருவு ஆடும் அலப்பறை யோடு

ஆத்து மணல் டவுசர் பை
ஈரங் காயாது எப்போதும்...
சோத்து வட்டி அப்பன் அடி
பிரியாது எப்போதும்..

அம்மா ஒளிச்சு வச்ச ஒத்த காசு
ரெண்டு கூறு ரெண்டு பேரு
குச்சி ஐஸ் ஒழுக ஒழுக
நாக்கு ரெண்டு பங்கு போடும்...

அண்ணன் சட்ட கிழிஞ்சு கிழிஞ்சு
தையல் போட்டு தம்பிக் காகும்
அண்ணன் புத்தகம் கஞ்சி ஒட்டி ஒட்டி
தம்பிக்காக வறும பாடும்..

தம்பி வளர்ந்து சேட்ட செய்ய
அண்ணன் உறவு தட புரியும்..
அதே நேரம் தியேட்டர் போக
தியாகியாக காச வாரி எறியும்..

உறவு மறந்த திரிஞ்ச மனம்
சம்பாதிக்க போகப் போக தனி ஆச்சு
குடும்பம் குட்டி ஒட்டிய பிறகு
தனி மரம் தனித்தே போச்சு.

அண்ணன் தம்பி உறவுக்குள்ள
ஆயிரம் தான் விசயம் இருக்கு
கிராமம் நகரமாக மாற மாற
நரகமாக உறவு மாறி இருக்கு...

விருந்தாளி சோறு போல
அண்ணன் தம்பி ஆகிப் போச்சு
ஒரு நாளுக்கு மேல் இருந்தா
தம்பி வீடும் முகம் சுருங்கிப் போச்சு..

எச்சிப் பால் தம்பி குடிச்சான்
அந்தக் கத ஊர் அறியும்
தம்பி வச்ச மிச்சச் சோற
அண்ணன் தின்னான் யார் அறியும்...

இளையது இளங் காளை என
இந்தக் கத ஊர் அறியும்
மூத்தது முத்துன மூளை என
தம்பி கரையேற அது தெரியும்..

**ம.சேரன்**
வாலாந்தூர்




# மஞ்சள் மாம்பூ

**நூல் மதிப்புரை**

**வஃபீரா வஃபி**

இலக்கிய உலகில் ஹைக்கூ தனியழகுடன் மிளிர்கிறது. ஹைக்கூ எழுதுவது என்பது தவமியற்றுவதற்கு ஒப்பானது என்று சொல்வார்கள். ஒரு தலைசிறந்த ஹைக்கூ, காணும் காட்சிகளினூடாக உருவாகி, பலமுறை செதுக்கப்பட்ட பின்பே அதற்கான தகுதியைப் பெறுகிறது. அவ்வகையில் டொக்டர் ஜலீலா முஸம்மில் எழுதிய 'மஞ்சள் மாம்பூ' ஹைக்கூ நூலில் இடம்பெற்ற பல கவிதைகளும் தனித்துவமாகத் திகழ்ந்து முதன்மை பெறுகின்றன. இந்நூலானது இலக்கிய மன்றங்களை அலங்கரித்து மணம் பரப்பி வருகிறது.

இந்நூலில் அடங்கப்பெற்ற கவிதைகளுள் என் மனம் கவர்ந்த முதன்மையான சில ஹைக்கூக்களைப் பார்த்தோமானால்,

'முளைக்கும் விதை
பூமிக்கு கிடைக்கிறது
மகா மழை'

மரங்கள்தான் மழையை பூமிக்குக் கொடுக்கும் வரம் என்பதை உணர்த்தும் அழகியதொரு ஹைக்கூவாக அமைந் திருக்கிறது.

அடுத்து,

"உயிரோடு இருக்கும் போதே
பற்ற வைக்கிறான்
விரலிடுக்கில் சிகரட்"

பலவித கேள்விகளை மனதுக்குள் தொடுக்க வைத்து, புகைப்பழக்கம் ஆயுளுக்குக் கொள்ளி வைக்கும் உண்மையை உணர்த்திப் போகிறது.

"பொழியும் மழை
முற்றத்தில் நிறையும்
மஞ்சள் மாம்பூக்கள்"

புத்தகத் தலைப்புக்குப் பொருத்தமாய், காட்சியை நினைவுத் திரையில் ஓட வைக்கிறது. அதேபோல மற்றொரு ஹைக்கூவும் காட்சியை கண்ணுக்குள் இழுத்து வந்து நிறுத்திச் செல்கிறது.
'

"சமிக்ஞை விளக்கின் மேல்
சப்டென அமர்ந்து கொண்டது
பௌர்ணமி நிலவு" அற்புதம்!

"கரையோரம்
மெல்ல நடைபோடும்
சிறு அலை"

சிந்தனைக்கு முடிச்சுகளிட்டு, வினாக்கள் தொடுத்து ஈற்றடியில் அடடா என

வியக்க வைக்கும் இந்த ஹைக்கூவை ரொம்பவே இரசித்தேன்.

“வாய்க்கு ருசியாக சமைத்த அம்மா
வரவே இல்லை
வாய்க்கரிசி போடப் பிள்ளைகள்’

இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான பெற்றோர்களது நிலையின் யதார்த்தத்தை, வார்த்தைகளூடாக சுருக்கென குத்தி சிந்தையில் ஏற்றுகிறது.

“கடற்கரை மணல்
கிறுக்கி விளையாடும்
சிறு நண்டுகள்”

குறும்புகளோடு ஓவியம் வரைகிறது மனதில்.

’காடழிப்பு
உருவான குடியிருப்பில்
வெள்ளக்காடு’

நவீனமென்ற பெயரில் இயற்கையை வெல்ல நினைக்கும் மானுடம் இயற்கையிடம் தோற்று வீழ்வதைக் குறிக்கும் விழிப்புணர்வு ஹைக்கூ.

“அடக்கஸ்தலத்தில்
ஆடியசைந்தபடியே
ஏற்றிய அகல்” ஆகா! அற்புதம்!

“கிடுகேற்றிய வண்டி
ஊரெல்லை வரை செல்லும்
வண்டிக்காரன் பாட்டு”

நினைவுகளைத் தாலாட்டிச் செல்ல, இன்னுமொரு ஹைக்கூ நூலாசிரியரின் சிந்தனையில் இலயித்து இரசிக்க வைக்கிறது.

“குளத்தில் விழுந்தும்’
மீன்களுக்கு இரையாகவில்லை
பிறைநிலா”அடடா!

“ஏழைகளின் பசி போக்க
எழுகின்றன கரங்கள்
ஓ! இது தேர்தல் காலம்”

மூன்றே வரிகளில் அரசியலின் சாயத்தை வெளுக்க வைக்கிறது.

“தேயிலைத் தோட்டம்
முளையிலேயே கிள்ளி எடுக்கப்படும்
தொழிலாளர் கனவுகள்”

இதைவிட தேயிலைத் தொழிலாளரின் துன்பியல் வாழ்வை விபரிக்கத் தான் முடியுமோ?

“ஆலயவளாகம்
இருளடைந்த சூழலில்
விரியும் விளக்கொளி” அழகு!

“மெதுவாய்ச்சுற்றி வந்து
தலைகோதிப் போகிறது
களத்துமேட்டுக் காற்று”
வியப்பைத் தருகிறது.

“சோறூட்டும் அம்மா
குழந்தைக்கு காட்டுகிறாள்
அலைபேசி கார்ட்டூன்”

நவீனத்துள் புதைந்த மானுடத்தை சுட்டும் விழிப்புணர்வு ஹைக்கூ என இதைக் குறிப்பிடலாம்.

“ஆவேச நடனம்
நொடிக்கு நொடி
பயணப்பாதையில் தண்ணீர்க் குழிகள்”
மிகச் சிறப்பு!

“மலைச்சவாரி
கொண்டையூசி வளைவில் கீழிறங்கும்
வெண்பனிப் படை” அழகியல்!

"நடுவதற்கு மரக்கன்றுகள்
இலவசமாகக் கிடைக்கும்
சுவாசிக்கக் காற்று"

சீரழியும் மானுட வாழ்வியலை ஹைக்கூக்கள் மூலமும் சீர்திருத்தி இயற்கையழிவுகளைத் தடுக்கலாம் எனப் புரிய வைக்கிறது.

"தப்பிக்கும் பறவை
கூண்டினுள் விழுகிறது
நிழல்"
மிகச் சிறப்பானதொரு ஹைக்கூ!

இது போன்றே மனதில் நினைத்து அசை போட்டு இரசிக்கக் கூடிய ஏராளமான ஹைக்கூக்கள் நூலின் பக்கங்களை அலங்கரிக்கின்றன.

தமிழ் கூறும் நல்லுலகிற்கு பூத் தூவலாக மலர்ந்துள்ள 'மஞ்சள் மாம்பூ' இலக்கிய முன்றலில் மணம் கமழ்ந்து நிலைத்து நிற்கும்.

நூலேணி பதிப்பக வெளியீடாக
வந்திருக்கும் இந்நூலின்
பக்கங்கள்:128
விலை: 750/= (இலங்கை ரூபா)






# இனிதாகவே வாழ்ந்து மகிழ்வுக் கொள்வோம் !

பொன்னெழில் பூத்தது உனது முகத்தினில்
ஊடுருவி வந்தாயே எனது மனசிற்குள்
மலர்ப் பாதங்களும் வலிக்கும் நடக்கையிலே
கருணைப்பார்வை பார்க்கிறேன் விழிகளிலே

ஆசைகள் பெருகுகிடுதே உன்வரவாலே
உன்னாலே தேகமும் தணலாய் சுடுகிறதே
முகத்தில் தெரியுதே காதலின் மோகமது
மனமும் துள்ளுதே மத்தாப்பும் ஒளிருதே

மனதுக்குள்ளே சிரிக்கிறாய் நீயுமின்று
ஓரவிழிப் பார்வைக்கு இத்தனை அழகோ
உறக்கக் கனவுககளில் வந்திடுகிறாய்
இரவுகளில் தொடர்கிறதே கனவுமங்கையே

பூத்திடும்மலரென வாழ்வினில் வந்துவிடு
வண்ணங்கள் நிறைந்த வாழ்வினைத் தந்துவிடு
இல்லறத்தில் நாம் இருவர் இணைந்திடுவோம்
இனிதாகவே வாழ்ந்து மகிழ்வுக் கொள்வோம் .

கவிஞர் இரா.சீ.பாலகுமார். M.A .,

# துரோகம் தாண்டிய பயணம்

பேனா முனைக் காதலி ஹாஸ்மியா தாஹா
கெக்கிராவ-கலாவெவ இலங்கை

அகில வட்டத்தினுள் மனங்களின் ஜனனம்
அம்மாவின் அன்பில் துவங்கிய பயணம்
ஆக்ரோஷம் வரை எதிர்மறையாயிடும் புதினம்
ஆழமாய் நோக்கினோ வியங்கோல்களே புலனம்

நெருக்கங்களின் ஆழம் இடைவிடாது தொடர
ஒளிவு மறைவில்லா பந்தமாய் மனப்பிணைப்புக்கள் பிணைய
இரகசியங்களும் கூட பரகசிமாய் பகிரப்பட
அத்தனை நம்பிக்கை வேரூன்றும் உறவது

அன்பின் வரிசையில் எவ்வுறவு என்றாலென்ன
நம்பிக்கையின் நாணயமாய் மனமிரண்டு இருக்கையில்
அச்சம் நீங்கிய ஆழமான கருத்தாடல்களிலேயே
அத்தனை நிம்மதி சாதாரணமாய் குடியிருக்கும்

அன்பின் அதிகாரம் உரிமையின் உச்சம் என
ஒருவரில் ஒருவர் பாகுபாடில்லா இயல்பினிலே
முட்டி மோதிடினும் தளம்பலில்லா அவ்வுறவுதனில்
ஒவ்வாமை நீங்கி ஒற்றுமையே குடியிருக்கும்

காலக்கடிகார நகர்வில் தற்காலிகமெனும் சுழல் காற்று
சுழற்சிப் பந்தயம் வைத்ததே பிரிவெனும் வாகை சூட்டி
சுற்றின் இறுதியிலோ துரோகம் பரிசானதே
ஏமாற்றமெனும் மகா திறன் கொண்டு

கருமையென வலி மேகம் சூழ
கண்ணீர் மழையிலே கயல்விழிகள் நனைய
மறக்க மறுக்கும் நினைவலைக்குள் தத்தளிக்குதே
மங்கையவள் மனதோ எதிர்நீச்சல் அறியாது

நாழிகையின் மின்னலோட்டத்தில் அவளும் தனையறியாது நகர
காலம் சொல்லும் பதிலில் அவள் முடிவுகளும் சரணடைய
துணிவெனும் மகுடம் சூடி துணிச்சலாய் வலம் வருகிறாள்
துரோகப் பரிசை வாரி வழங்கிய முகமூடி வதனம் முன்பாய்

முக்காலம் சொல்லும் முடிச்சிட்ட பதில்களிலே
முட்டாளாய் கடத்திய கடந்த காலக் கழிவு தனை
கண்ணீர் மழையாலே நனைத்து ஏப்பமிட்டு
நாளைய எதிர்காலமதை தனதாக்கிட
மங்கையவளிற்கோ வாழ்த்துக்கள் குவியட்டும்.

# பிரிவின்றிய தூய அன்பின் நேசம்

ரஸ்னா ரம்ஸான்
இலங்கை ,அக்குறணை

**கதை சுருக்கம்**

**புதிய தொடக்கம் என்று பயணித்தாலும், கடந்த காலத்தின் நிழல்கள் இன்னும் மனதில் சுமையாகக் கிடந்தன.**

**திடீரென மீண்ட சந்திப்பில், மறைந்திருந்த காதல் மறைமுகமாக மீண்டும் உயிர் பெறுகிறது.**

**நட்பு, காதல், தியாகம் மற்றும் புரிதலின் சங்கமத்தில், வாழ்க்கை அவர்களை சவால்கள் நிறைந்த பாதையில் இழுத்துச் செல்கிறது.**

**அவர்கள் கடந்த வலிகளை கடந்து விருப்பமான முடிவை அடைவார்களா..?அல்லதுமீண்டும்பிரிவின்பாதையில்பயணிப்பார்களா..?**

## தொடர் : 01

அதிகாலை நேரம் மணி நான்கைத் தாண்டியிருக்கும் அலாரம் சப்தம் கேட்க விரைவாக எழுந்தாள் நம் கதாநாயகி ஐஸ்வர்யா. இருபத்தி நான்கு வயது சற்று வெண்மை பொது நிறம் கவிதை கிறுக்குவதென்றால் கொள்ளைப் பிரியம் மற்றவர்களுக்கு உதவும் நல்ல குணமுடையவள். அவளுக்கென இருப்பது அவள் தங்கை ராகினியும் அவள் உயிர் நண்பியும் தான். ராகினி மெடிக்கல் க்கு ஜொய்ன் ஆக இன்னும் இரு மாதங்களே இருக்கின்றது. ஐஸ்வர்யா, ராகினி இவங்க ரெண்டு பேர்ட அம்மா, அப்பா இவங்கட சின்ன வயசிலயே இறந்துட்டாங்க! இவங்கள கண்கலங்காம பார்த்துக்கனும் னு சென்னைக்கு வந்த இவங்க அண்ணா. ஊருக்கு திரும்பவே இல்ல. அது நடந்து ஐந்து வருஷமாச்சு. இவங்க ஊர்ல இருந்து வந்து இரண்டு வாரங்கள் தான் ஆகுது.

அவசரமாக அதிகாலையிலேயே சமையலை முடித்து வீட்டு வேலைகளை யெல்லாம் முடித்தவள். வேலைக்கு கிளம்ப ராகினியை தட்டி

'சாப்பாடு சமச்சி வச்சிருக்கன் வீட்டு வேலை எல்லாம் முடிச்சிட்டன். கவனமா இரி மா எதாச்சும் ஒன்னுன்டா கோல் பன்னுமா' என்றாள்.

தூக்க கலக்கத்துடன் சரி கா நான் கவனமா இருக்கன் என்றாள் ராகினி.

ஐஸ்வர்யா ராகினியிடமிருந்து விடை பெற்று கிளம்பினாள்.

ஐஸ்வர்யா க்கு செப்ஃ ஆகனும்னு ஒரு கனவு இருக்கு சின்ன வயசுல இருந்தே அவள்ட அம்மாட கை பக்குவமும் அவளுக்கு இருக்கு. புதுப்புது சமையல் குறிப்புகளை செய்து பார்ப்பவள். இப்போ அவளுக்கு கெடச்ச வேல சேர்வன்ட் தான். விரைவாய் ஹோட்டலை அடைந்தவள் அவசரமாக சேர்வன்ட் உடையணிந்து வேலையை தொடங்கினாள்.

காலையிலேயே... அம்மு அம்மு என தன் தங்கையை அழைத்துக் கத்திக் கொண்டிருந்தான் நம் கதாநாயகன் அஷ்வின்.

அஷ்வின் ஒரு பிரபலமான செஃப் அவன் ஹோட்டலின் பெயர் மெமரீஸ் ரெஸ்டூரன்ட் மிக பழமையும் சிறப்பும் வாய்ந்தது. அஷ்வினுக்கு பெரிய குடும்பமே இருக்கு. எல்லாரும் விசேஷங்களுக்கு ஒன்டு கூடினா திருவிழா தான்.

அஷ்வின்ட அம்மா சுபா, அப்பா சங்கர், அண்ணா அரவிந்த், அவன்ட தங்கை எல்லோரும் அவள செல்லமா அம்மு னு தான் கூப்டுவாங்க. அஷ்வின்ட அம்மா, அப்பா, வெளியூர் போயிருக்காங்க அவனோட தம்பி அம்முவோட இரண்டாவது அண்ணா, அரவிந் ஒரு டாக்டர் அவன் ஒரு ஆப்ரேஷன்க்காக காலைலயே கிளம்பியிருக்க அஷ்வினும் அம்முவும் மட்டும் தான் இப்போ வீட்ல இருக்காங்க.

‘எங்கமா சீக்கிரம் வாமா மீட்டிங் இருக்கு‘

சிவப்பு நிற டாப்பும், வெள்ளை லெகின்ஸூம், துப்பட்டாவும் அணிந்து தன் கூந்தலை ஒரு புறம் ஒதுக்கிக் கொண்டு வந்தாள் அவனின், அம்மு

‘சாரி ணா கொஞ்சம் லேட் ஆவிட்டு‘



‘அஷ்வின் சரி மா சீக்கிரம் வா ‘

ம்ம்

அஷ்வினும், அம்முவும் காரில் ஏறி புறப்படுகின்றனர்.

ராகினி ஐஸ்வர்யா சமைத்து வைத்த உணவை உண்டவள் ச்சே அக்கா இல்லாதது ரொம்ப போரிங்கா இருக்கே என சிந்தித்தவள் ஐஸ்வர்யாக்கு கோல் செய்ததும் ஓரிரு ரிங்கில் அழைப்பு ஏற்கப்பட்டது.

ஐஸ்வர்யா : சொல்லுமா

ராகினி : அக்கா தனிய இருக்க முடியல சோம்பலாக இருக்கு என்னோட ப்ரண்ட் ப்ரியா வீட்டுக்கு போய் வரவா

ஐஸ்வர்யா : தனியா எப்டிமா போவ

ராகினி : ப்ரியா லோகேஷன் சென்ட் பண்ணியிருக்கா

ஐஸ்வர்யா : ஒன்ன தனியா அனுப்ப முடியாதுமா

ராகினி : ப்ளீஸ்க்கா என்னோட டார்லிங் தானே நீ நா கவனமாக போய் வருவேன் கா ப்ளீஸ்

ஐஸ்வர்யா : ம்ம் சரி மா கவனமா போய் வா அங்க போனதும் கோல் பன்னு

ராகினி : சரி கா தாங்க்ஸ் டார்லிங்

ஐஸ்வர்யா : ஓகே மை டியர் ஏன்ஜல்

அழைப்பை துண்டித்து விட்டு சோர்ட் டாப் டெனிம் சோல் அணிந்து முடியை விரித்து விட்டு வீட்டு கதவை பூட்டி விட்டு தன் நண்பி ப்ரியா வீட்டுக்கு செல்கிறாள் ராகினி. தனக்கு வரும் ஆபத்தை அறியாது!

போனில் லோகஷனை பார்த்துக் கொண்டே ராகினி நடக்க, அவளை குறி பார்த்து வருவது போல் ஒரு கார் வேகமாய் வர அவளை இடிக்க அருகில் வரும் போது அவளை தன் பக்கம் இழுத்தது ஒரு கரம் அவள் சில நிமிடங்கள் கண்களை மூடி திறந்து தன்னை காப்பாற்றிய உருவத்தை பார்த்தாள்.

அவளை விட ஓரிரு அடி உயரம் வெண்மையான நிறம் அவளை கோவத் துடன் பார்க்கும் கூரிய பார்வை.

அழகிய ஆண்மகன் என்றும் சொல்லலாம்.

ராகினி அவனிடமிருந்து விலகி மெது வாக தாங்க்ஸ் என்றாள்.

ஹேய் அறிவு இல்லயா நடு ரோட்ல போனை நோண்டிண்டு நடக்குற இப்போ நான் மட்டும் வரல இன்னேரம் மேல போய் சேர்ந்திருப்ப,

ஏற்கனவே கார் வேகமாக வந்ததில் பயந்திருந்தவள் அந்நபரின் கத்தலில் கண் கலங்கி அழுது கொண்டே

‘சாரி நா... நா.. வேனும்ன்டே அப்டி பண்ணல லோகேஷன் தேடினு வந்தன் அது தான்‘

‘ஸ்டோப் இட்‘

என கத்தியவன் நீளிக்கண்ணீர் வடிக் கிறத நிறுத்து ஐ டோன் லைக் திஸ் ஒன்னால என்னோட டைம் வேஸ்ட் ஆகிடுச்சி என்ட் ஒனக்கு ஒன்னும் ஆகல தானே நல்லா தானே இருக்க முதல்ல கண்

முன்ன நிக்காம கெளம்பு.

ராகினி எப்டி தப்பிப்பது என சிந்தித் துக் கொண்டிருந்தவள் அவன் பதிலை கேட்டவுடன் சீக்கிரமாய் கிளம்ப அவனும் தன் காரிலே கிளம்பினான்.

மாலை ஐந்து மணியை தாண்டிக் கொண்டிருந்தது ராகினி ப்ரியா வீட்டிற்கு செல்லவில்லை அப்படியே வீட்டிற்கே வந்தவள் சோபாவில் அமர்ந்து நடந்த நிகழ்வின் அதிர்ச்சியிலே இருந்தாள். ஐஸ்வர்யா வீட்டு காலிங்பெல்லை நெடு நேரம் அழுத்தியும் ராகினி கதவு திறக்காத தால் சற்று பயந்து ராகினிக்கு கோல் செய்ய ரிங்டோன் சத்தத்தில் ராகினி அந்நிகழ்விலிருந்து வெளியே வந்தவள் கதவை திறந்தாள்.

என்னமாஇவளோநேரம்காலிங்பெல்ல அழுத்துரேன் தூங்கியிருந்தியா? என ஐஸ்வர்யா கேட்க ம்ம் என்று சொல்லி அறையை நோக்கி நடந்தாள் ராகினி.

ஐஸ்வர்யா சமயலறைக்கு வந்து பார்க்க உணவு அப்படியே இருந்தது. அவள் வீட்டுக்கு வருவதற்கு முன் பிரியாவிற்கு கோல் பன்னி ராகினி பற்றி விசாரிக்க அவள் அங்கு ராகினி வரல்லன்டு சொல்லவும் பதறிக்கொண்டு வந்தவள் ராகினியை பார்த்த பின் தான் நிம்மதியடைந்தாள்.

இவளுக்கு என்னாச்சி என்கிட்ட பிரியா ட வீட்டுக்கு போறதா சொன்னா அங்க போகவும் இல்ல வீட்ல சாப்பாடு அப்டியே இருக்கு ஒன்னும் புரியலயே என சிந்தித்தவள் தட்டில் சாப்பாடு எடுத்துக்கொண்டு அறையை நோக்கி சென்றவள் கண்டது கால்களை மடக்கி தலையை குனித்து கண்ணீர் வடிக்கும் தன் தங்கையை தான். அவசரமாக சாப்பாட்டு தட்டை மேசையில் வைத்து விட்டு சோர்ந்து போய் கண்ணீர் வடிக்கும் தன் தங்கையை இறுக அணைத்தவள்

'பட்டுமா அழாத டா என்னாச்சு'

அக்கா அது வந்து காரு என்... என்ன
அவர் எனக்கு திட்.. திட்டி
என திக்கி திக்கி ராகினி கூற

அவள் முதுகை வருடி இங்க பாருமா எத பத்தியும் யோசிக்காத எதும் ஆகல அமைதியா நடந்தத சொல்லு என்று கேட்க ராகினி சற்று தன்னை அமைதிப்படுத்திக் கொண்டு நடந்ததை கூறினாள்.

சரி மா கூல் பயப்புடாத சரியா இனி நீ தனியாக போக தேவலம் நானும் கூடவே வாரேன் சரியா என கூறிவிட்டு, கொண்டு வந்த சாப்பாட்டை ராகினிக்கு சிரமப்பட்டு ஊட்டி அவளை தூங்க வைத்து விட்டு சிந்தனையில் ஆழ்ந்தாள். இரண்டு வருடங்களுக்கு முன்பு நடந்த நிகழ்வுகள் அவள் உள்ளத்தில் ஓட மனத்திரையில் ஏதேதோ சில நினைவுகள் வந்து போக அதில் ஒரு உருவம் அவளை பார்த்து கண்ணடிக்க அவள் விழிகளில் கண்ணீர் தேங்கி நிற்க கண்களை மூடி தன்னை சரி செய்தவள். நோ நோ எனக்கு இப்ப ராகினி மட்டும் தானிருக்கா வேற யார பத்தியும் நா யோசிக்க தேவயில்ல ராகினி ரொம்ப பயப்பட்றா இவள பிரிஞ்சி எப்டி நான் இருக்குறது இங்க இருந்து ஹோஸ்ட்டலுக்கு ரொம்ப தூரம் இவ ஸ்டடி ஸ்டார்ட் பண்ணுனதுக்கு அப்புறம் இவள தனியா விட முடியாது பிரியாகிட்ட இவள பத்தி கொஞ்சம் பேசனும் என நினைத்துக் கொண்டே உறங்கிப் போனாள்.

நேசம் மலரும்...

# தனக்கு வந்த தலைவலி

காயத்ரி பல் மருத்துவர் கொடுத்த பில் தொகை ஐம்பதினாயிரம் கண்டு அசந்து போய்விட்டாள். வயதான தந்தை யின் பல் வைத்தியத்திற்காக வந்திருந் தாள். மேல் வரிசை பற்களுக்காக ஆறு மாதங்களுக்கு முன்தான் இருபத்தைந் தாயிரம் செலவழித்து சிகிச்சை நடந்தது. முன்பற்கள் இரண்டு தவிர மீதி பற்கள் அனைத்திற்கும் பல் செட் கட்டப்பட்டது. அதில் ஒரு விரிசல் வர திரும்பவும் மருத்துவரிடம் போக; அவை இரண்டும் பலமில்லாமல் இருப்பதால் எடுத்துவிட்டு லேசான உலோகத்தில் மொத்தமாக புது பல் செட் தயார் செய்து தருவதாகவும் அதற்கு இருபது வருடம் உத்திரவாதம் தருவதாகவும் சொல்கிறார். பழைய பல் செட்டையே பழுது பார்த்து தர வேண்டினேன். முன்பற்களை இதில் ஒட்டி சேர்க்க முடியாது; என்று திட்டமாக சொல்லவும்; என் அப்பா,‘ வேண்டாம் காயத்ரி! முன்பற்கள் சிகிச்சையே இப் போது வேண்டாம். பழசை ஒதுக்கிட்டுத் தர சொல்லு. அதிலேயே நான் சமா ளித்துக் கொள்கிறேன். முன் பற்கள் தொந்தரவு கொடுத்தால், அந்த சமயம் பார்த்துக்கலாம். என்று என் பளுவைக் குறைக்க முன்வந்தார்.

நான் மருத்துவரிடம்,‘ மேடம்! ஆறு மாதங்களுக்கு முன்தான் இருபத்தைந் தாயிரம் செலவழித்தேன். அதற்குள் அது விரிசல் கண்டு விட்டது. அந்த சமயமே சொல்லியிருந்தால் இவ்வளவு செலவு வந்திருக்காது‘ என்றேன்.

‘என்னம்மா; இப்படி பேசுகிறாய். நான்தான் அப்போதே சொன்னேனே எல்லா பற்களுக்கும் சேர்த்து கட்டிடுங்க; என்று; நீங்கதான் கேட்கவில்லை.‘ என்றார்.

‘மேடம்! கொஞ்சம் குறைச்சுகுங்க. மேலும் மூன்று மாதம் அவகாசம் கொடுங்க மூன்று தவணைகளில் கொடுத்து விடுகிறேன்‘ என்று சற்றே தணிவாகக் கேட்டதற்கு,‘ என்னம்மா! இப்படி தொந்தரவு தருகிறாய். பல்செட் பொருத்திக் கொடுத்ததுக்கப்புறம் உன் பின்னால் அலைய முடியுமா? அதெல்லாம் சரிவராது. நீங்கள் வேறு மருத்துவரிடம் போய் சிகிச்சை எடுத்துக் கொள்ளுங்கள்‘ என்று கறாராக பேசிக்கொண்டிருக்கும் போதே, அவரது அலைபேசி அழைக்க, ஃபோனைக் காதுக்கு ஒத்தி பேச ஆரம்பித்தார். ’’என்ன, சார். இப்படி சொல்கிறீர்கள்! உடனே அத்தனை பெரிய தொகையை நான் எப்படி ஏற்பாடு செய்ய முடியும். ஒரு ஆறு மாத அவகாசம் கொடுங்கள். நான் தவணையில் கட்டி விடுகிறேன். என் கஷ்டத்தையும் சற்று புரிந்து கொள்ளுங்கள்‘ என்று நயமாகப் பேசினார். எதிர்பக்கம் இருந்தவர், என்ன பேசினாரோ, நான் அறியேன்.‘ தேங்க்ஸ்; சார். வரும் சனவரிக்குள் கண்டிப்பாக தவணை முடித்துவிடுவேன். பாதி தொகை முன்பணம் கட்டி விட்டேன்,சார். நோ ப்ராப்ளம். கண்டிப்பாக; ஷ்யுர்; சார்! மெனி தேங்க்ஸ், சார்‘ என்று ஃபோனை மலர்ந்த முகத்துடன் வைத்தவர், என்னைப் பார்த்தார் .

என்ன தோன்றிற்றோ, அவருக்கு. ‘சரிம்மா! நான் ஐந்தாயிரம் குறைத்துக் கொள்கிறேன். மருத்துவ செலவிலும் ஐந்தாயிரம் தள்ளுபடி செய்கிறேன். நான்கு மாதங்களில், மாதம் பத்தாயிரம் கொடுத்து விடுகிறாயா,‘ என்று அன்புடன் சொல்லியது; எனக்கு ஒரு ஆச்சரிய அதிர்ச்சியை கொடுத்தது; எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்ததை என் முகமே அவருக்கு உணர்த்தியது. தலைவலியும் காய்ச்சலும் தனக்குத்தானே வந்தால்தான் தெரியும் ; என்பது உண்மையாயிற்றா?

**சசிகலா விஸ்வநாதன்**

# கற்பகத்தின் கல்யாணம்

அன்புச்செல்வி சுப்புராஜு
பட்டாபிராம், சென்னை

மதியம் ரெண்டு மணிவாக்குல 'கற்பகத்தோட அப்பாவுக்கு ரொம்பவும் முடியலை... அவசரமா வாங்கனு...' னு ஆஸ்பத்திரில இருந்து தகவல் வரவும், எல்லாரும் வேகவேகமா ஆஸ்பத்திரிக்கு கிளம்புனாங்க.. அப்ப பக்கத்து வீட்டு அத்தை இராமேஸ்வரம் வரதுக்கு கட்டின பணம் வீணாகாம இருக்க உனக்கு பதில் கற்பகத்த அனுப்புனு சொன்னாங்க... கற்பகமோ ''அப்பாவுக்கு இப்படி இருக்குறப்போ நா எப்படி அத்தை வரது, நானும் ஆஸ்பத்திரிக்கு போகப் போறேன். உங்க கூட வரலைனு'' அவசரமா பேசினாள்.

"நீ சிவனைக் கும்பிடும் நேரம் உங்கப்பா எந்திருச்சிடுவாரு... அப்பாவுக்காக நல்லா வேண்டிக்க பாப்பா, கிளம்புனு" அம்மா சொல்லவும் "இல்லம்மா, அப்பா என்னைத் தேடுவாக, எனக்கும் அப்பா கிட்ட இருக்கணும் போல இருக்கு. நா போகல"னு அழுக ஆரம்பிச்சிட்டாள்.

"அட... நாங்க எல்லாம் இருக்கோம்ல, ஒரு நாளிலே என்ன ஆகிடப் போகுது, நீ போயிட்டு வா, இராமேஸ்வரம் போனா பாவம் தீர்ந்து புண்ணியம் சேருமாம், உங்கப்பாவுக்கு நல்லது நடக்கும். கெளம்பு தாயினு" அம்மாச்சி சொல்லவும் அரை மனசா கற்பகமும், தொணைக்கு அவ தங்கச்சியுமா இராமேஸ்வரம் கிளம்பி னாங்க.. அம்மாவும், மத்தவங்களும் ஆஸ்பத்திரிக்கு போக, வீட்டுக்கு காவலா அம்மாச்சி இருந்தாங்க.

இரவு 11.00 மணிக்கெல்லாம் பஸ் வந்துடுச்சு. மாத்து உடுப்பு, காலைல சாப்பிட புளியோதரை, தொட்டுக்க ஊறுகாய், செலவுக்கு பணம், குடிக்க தண்ணீர் பாட்டிலோட அக்காவும், தங்கச்சியும் பஸ்ல ஏறி உட்கார்ந் துட்டாங்க. எல்லோரும் வரவும் 11.30 போல பஸ் கெளம்பிடுச்சு. ''நாளைக்கு மதியம் போல திரும்பிடுவோமா அத்தை" கற்பகம் கேட்கவும் "என்னத்தா இப்பதா கெளம்புறோம். அதுக்குள்ள திரும்பி வரதப் பத்தி யோசிக்கிற... சுத்திப் பாக்க போறோம். நல்லா நின்னு, நெலச்சு நாலு எடத்தைப் பார்த்தோமா, சந்தோசமா வந்தோமா' னு இருக்கணும். செத்த சும்மாயிரு'' எதிர் வீட்டுப் பாட்டி சொல்லவும் அமைதியாகிப் போனாள்.

அதிகாலை 04.30 மணியளவில் "அக்கா மடம் வந்துடுச்சு, எல்லாரும் இறங்குங்க... பார்த்துட்டு, பஸ் ஏறி கொஞ்ச தூரத்துல தங்கச்சி மடம் அதையும் பார்த்துட்டு... நேரா இராமேஸ்வரம் போயிடலாம்'' அத்தை சொல்லவும் எல்லோரும் இறங்கி னார்கள். அக்கா மடம், தங்கச்சி மடமுனு ஒவ்வொரு இடமா பஸ் நிக்கவும், வேகமாக அத்தையிடம் "என்னங்கத்தை, இங்கே யெல்லாம் சுத்தி பார்த்திட்டு இராமேஸ்வரம் போனா நேரமாகிடும்ல... நேரா போயிருக்கலாமே" என்று ஆதங்கத் தோடு கேட்டாள்.

"அட, என்னாத்தா நீ, இந்த எடத் தோட அருமை தெரியாத பேசற...

சொந்த, பந்தத்தைத் தாண்டி நீதி பொழச்ச இடம்த்தா, சொல்றேங் கேளு... வா நடந்து சுத்திப் பாத்துக்கிட்டே சொல்றேன்... '' தொண்டையைச் செருமி தனக்குத் தெரிந்த வரலாறை அத்தை சொல்லத் தொடங்க, ஆங்காங்கே இருந்தவங்களும் வந்து ஆர்வமா கேட்கத் தொடங்கினாங்க...

"நம்ம சேதுபதி இராசாவுக்கு முன்னாடி ஆண்ட பாண்டிய மன்னரு இராம நாதபுரத்துல இருந்து இராமேஸ் வரத்துக்கு புள்ளவரம் வேண்டி நடைபயணமா வந்தாராம். அப்ப வழியில எங்கெல்லாம் சரிபாதியா தேங்கா உடையுதோ அங் கெல்லாம் மடம் கட்டினாங்களாம். மடம் எதுக்கு கட்டுவாக தெரியுமா? யாத்திரை வரவுக, போறவுகளுக்கு அன்னதானம், கூடவே ராத்தங்க வசதி.... இதுக்காவதே கட்டினாங்க.

நம்ம நாட்டுக்கு வந்தவுகளுக்கு வசதி செஞ்ச மாதிரியுமாச்சு, வேண்டுதலை நிறைவேத்தின மாதிரியுமாச்சுனு, தேங் காய் சரிபாதியாக உடைஞ்ச பதினேழு எடத்துவ (புதுமடம், தொண்டி நம்பு தளை, அக்காள் மடம், தங்கச்சிமடம், இராமேஸ்வர கடற்கரை நேர் எதிரே போன்ற இடங்களில்) சத்திரங்களைக் கட்டியதாச் சொன்னாலும், இந்த அக்கா மடம், தங்கச்சி மடம் பெயர் எப்படி வந்துச்சுனு இன்னொரு கதையிருக்கு... அதையும் சொல்றேன் கேளுங்க..." அத்தை தண்ணீர் குடிக்க, எல்லோரும் அத்தை முகத்தையே பார்த்துட்டு இருந்தாங்க மீண்டும் செருமிய அத்தை கதையைச் தொடர்ந்தாங்க...

"இந்தப் பகுதியை ஆண்டுவந்த சேதுபதி மன்னருக்கு ரெண்டு மகள்கள் இருந்தாக, அவுக ரெண்டு பேரையும் ஒருவருக்கே கல்யாணம் செஞ்சு கொடுத்து, மருமகன் கட்டுப்பாட்டிலே இந்தப் பகுதியை மன்னர் விட்டிருந்தாராம். அப்பொழுது இராமேஸ்வரம் இராமநாத சுவாமியைத் தரிசிக்க வரும் பக்தர்கள் எல்லோரும் படகுல ஏறித்தான் பாம்பன் கடலைக் கடந்து இராமேஸ்வரம் போக முடியுமாம். சேதுபதி மன்னரின் ஆணைக்கிணங்க, கட்டணம் செலுத்தாம இலவசமா படகுல பயணம் செய்யறதுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்துச்சு, நீண்ட காலமா இதேன் வழக்கம்.

அரசவையில வேல செஞ்ச ஒருத்தரு, பயணிகளை இலவசமா ஏத்திக்கிட்டுப் போறதுக்கு பதிலா கட்டணம் வசூலிச்சா நல்ல வருமானம் கிடைக்கும்னு மன்னரோட மருமகன் கிட்ட ஆலோசனை சொல்ல, அதக்கேட்ட மருமகனும் பயணம் செய்யுறவுக கிட்ட கட்டணம் வசூலிக்க சொல்லிட்டாரு. அன்னையில இருந்து இராமநாத சாமியைத் தரிசிக்கச் செல்லும் போதும், திரும்பும் போதும் ரெண்டு முறை கட்டணம் வசூல் செஞ்சிருக்காங்க. ஆனா இந்த விசயம் மன்னருக்கு தெரியாமலே நடந்துருக்கு.

கையில காசில்லாம இராமேஸ்வரம் யாத்திரை வந்த முனிவர் கிட்ட, படகிலேற காசு கேட்க , அவர் இல்லைனு சொல்லவும் படகிலே ஏத்தமாட்டோமுனு உறுதியா சொல்லிட்டாங்க. ஆத்திரமடைஞ்ச முனிவர் நேரா சேதுபதி மன்னரிட்ட போயி முறையிட்டுட்டாரு.

முனிவர் சொன்னது உண்மையானு விசாரிச்ச மன்னருக்கு கட்டண வசூலுக்குக் காரணமே தன் மருமகன்தானு தெரிஞ்சு மனவேதனையா போச்சு. தன்னுடைய இரண்டு மகள்களையும் கூப்பிட்டு, யாத்ரீகர் களிடம் நடக்கும் அடாவடியைப் பத்திச் சொல்லி, அப்படி செஞ்சவங்களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்னு கேட்க, மகள்களும் அவங்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கனுமுனு பரிந்துரை செஞ்சாங்க.

"யாராக இருந்தாலும் தண்டனை

கொடுக்கலாமா?''னு சேதுபதி ராசா பூடகமா கேட்க, லலயாரா இருந்ததாலும் சரிதான், பக்தர்கள் கிட்ட அடாவடியாக நடந்தவங்களுக்கு பாவம் பார்க்காம கடுமையான தண்டனை கொடுங்க"னு மகள்கள் ரெண்டு பேரும் உறுதியா சொல்லிட்டாங்க.

மகள்களோட உறுதியை மெச்சிய மன்னரும், "தவறு செஞ்சது வேறு யாருமில்ல, உங்களோட கணவர் தான்"னு சொன்னதும், மொதல்ல அதிர்ச்சி அடைஞ்சவங்க, மனசை தேத்திக்கிட்டு "உங்க மருமகனா இருந்தா லும் தண்டனையைக் கொடுங்க ராசா''னு சொல்லிட்டு, ''தங்களோட கணவர் பக்தர்களுக்கு செஞ்ச அநீதிக்கு பிராயச்சித்தமா ராசாகிட்ட வேண்டுகோள் ஒன்னை வச்சாங்க. அதம்படி அவங்களோட கணவரைத் தூக்கில் போட்டவுடனே, அவங்களும் உடன்கட்டை ஏறுவதாகவும், அவங்க கணவர் செஞ்ச பாவத்தைப் போக்குறதுக்கு அவங்களோட நினைவா ரெண்டு மடங்கள் கட்டி, இராமேஸ்வரம் செல்லும் பக்தர்களோட பசியைப் போக்க வயிறார சாப்பாடு போடணும்" னு கேட்டாங்க.

"தன் மகள்களின் கோரிக்கையை ஏத்துக்கிட்ட சேதுபதி ராசா, அவங்க நினைவா இந்த அக்கா மடம், தங்கச்சிமடம் ரெண்டையும் கட்டியதா சொல்றாங்க. சரி... சரி... வாங்க இங்கனயே குளிச்சிட்டு, காலைச் சாப்பாடு சாப்பிட்டு, வேகமா இரமேஸ்வரம் போகலாம்னு'' அத்தை சொல்லி முடிக்கவும், ''இந்த காத்துல கூட அவங்களோட நேர்மையான மூச்சு இருக்கும்" னு சொன்ன கற்பகம் மூச்சை ஆழ இழுத்து விட்டாள்.

அப்போது கற்பகத்தின் தங்கச்சிக்கு முக்கியமான ஒரு சந்தேகம் வந்துச்சு. என்னனு அடுத்த மாசம் பார்ப்போம்.

# பூம்பொழில் அழகினிலே

கரும்பச்சை நிறத்தில் அடர்ந்தோங்கிய மரங்கள்
கண்கொள்ளாக் காட்சிதனில் நிறைகின்ற மனங்கள்
சுரம்பாடி ஓடுகின்ற பளிங்கின் நீரோடை
சுற்றி வளைத்துச் சூழ்ந்திருக்குஞ் செடிகொடிகள்
பிரமாண்ட உருவெடுத்து உயர்ந்திருக்கும் மலைகள்
புரண்டதிலே தவழ்ந்திடும் வெண்ணிற முகில்கள்
இரைச்சலுடன் வீழுகின்ற வெள்ளை அருவி
இனிமையின் பாடல்தரும் எத்தனையோ குருவி

×

இயற்கை நமக்களித்த அற்புதமான படைப்பு
இதனை நாமுணர்ந்து செயற்படுதல் சிறப்பு
செயற்கை துளியுமிலா சீதோஷ்ணப் பரப்பு
சீர்மையின் காலநிலை நல்வாழ்வின் திறப்பு
உயிரினங்கள் உயிர்வாழ உருவான வனப்பு
உலகின் சுவாசமாய்த் திகழ்கின்ற வியப்பு
தூயவளித் தோற்றுவாய் மரங்களின் அணிவகுப்பு
துணிவாக உரைத்திடு கானகமே உயிர்ப்பு

×

பூம்பொழில் அழகினிலே பூரிக்கும் நெஞ்சம்
பூக்களின் வண்ணங்களில் அனைவரும் தஞ்சம்
வேம்புமுதல் நாணல்வரை விதவிதமான மஞ்சம்
வனவுயிர்கள் எல்லாம் மெய்மறந்ததிலே துஞ்சும்
செம்மையின் சுடரொளி நுழைந்திடவே அஞ்சும்
சீதளவனம் பார்த்திடவே விழிகள் கெஞ்சும்
காம்பொடு தொங்குகின்ற காய்கனிக்கேது பஞ்சம்
கனவுலகோவென எண்ணங்கள் எழுந்து விஞ்சும்

×

அங்கமாய் நம்முடன் வந்திடும் கானகம்
ஆதிமுதல் இன்றுவரை பச்சையின் தேனகம்
தங்கமாய்ப் பறந்திடும் பொன்வண்டுகள்
ஆயிரம்/துள்ளி ஓடிடும் மான்மரை முயல்களும்
ஓங்கி வளர்ந்த பெருந்தருக்களில் கூடுகள்
ஒத்திசைந்து வாழ்ந்திடும் பல்லாயிரம் பறவைகள்
எங்கெங்கு காணினும் பேரழகின் தோட்டம்
எடுத்தியம்பப் போதவில்லை சொற்களின் கூட்டம்

×

எண்ணிலா பயன்கள் இகத்தினில் காடுகள்
இயற்கைச் சமநிலை பேணிடும் அரண்கள்
உண்ணும் உணவு உவந்திடும் வள்ளல்
உயிர்களின் காப்பிடம் ஆகிடும் பசும்புலம்
மண்ணரிப்பு தடுத்திடும் மகத்தான சக்தி
மிகை வெப்பம் தணித்திடும் தாட்சண்யம்
கண்ணாயிரம் வேண்டுமே காடு காண்பதற்கு
காலத்திற்கும் இன்னுயிராய்க் காப்பதே நன்று

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

## ஆபாசம்
pornography

### பாத்திமா நலீபா
உளவியல் எழுத்தாளர் ...

மூளையில் ஆபாசத்தின் விளைவுகள்...

ஆபாசத்தை அதிகமாக பயன்படுத்துவதால் அதிகமான எதிர்மறை எண்ணங்கள் மற்றும் உடல் ரீதியான விளைவுகளும் ஏற்படுகின்றன. இதன் முக்கிய விளைவாக மூளையில் மூடுபனி மற்றும் சமூகப் பதற்றம்,மன அழுத்தம், எதிர்மறை எண்ணம்,உணர்வுக் கோளாறு என்பன ஏற்படுகின்றன.இதில் அதிகமாக இளைஞர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனால் மனநோய்களை விட அதிகமான மரணங்கள் ஆபாசத்தை பயன்படுத்துவதால் ஏற்படுகின்றன. மாணவர்களின் நல்வாழ்வு மற்றும் பள்ளியில் அடையக்கூடிய திறன் ஆகியவற்றின் மூலம் ஆபாசத்தின் மனநல பிரச்சினைகளைக் குறித்து மாணவர்களை விழிப்புணர்வுட்டுவது மிகவும் அவசியமாகும்.

திருமணத்திற்குப் பிறகும் ஆபாசப்பட வீடியோக்களை அதிகமாக பார்க்கிறீர்களா..?
இதனால் வரும் விளைவுகளை பற்றி தெரியுமா..?

திருமணத்திற்கு பின்பு ஆபாச வீடியோ பார்ப்பது திருமண வாழ்க்கையை விவாகரத்து வரை கொண்டு செல்லும் என ஆய்வு தெரிவிக்கிறது. அப்படி ஆபாச வீடியோ பார்ப்பதால் எப்படியெல்லாம் உங்கள் திருமண வாழ்க்கையை பாதிக்கும் என்பதை விவரிக்கிறது.

ஆபாச வீடியோக்களை உங்கள் மனைவிக்கே தெரியாமல் பார்க்கிறீர்கள் எனில் அதுவும் இரவில் பார்க்கிறீர்கள் எனில் திடீரென அதை அவர் தூக்கத்தில் எழுந்து காண நேர்ந்தால்..
அந்த கணமே உங்கள் மீதான நம்பிக்கை அற்று போகும். வெளிப்படைத் தன்மையில் சந்தேகம் எழும். இதுவே உங்களுக்குள்ளான விரிசலை பலப்படுத்தும்

இவற்றால் அடிக்கடி சண்டை வரும். இதை கட்டுப்படுத்த ஒரு கட்டத்தில் உங்கள் மனைவி பொய்யான உணர்வுகளை வெளிப்படுத்த நேரிடும்.இப்படி பொய்யான உச்சகட்ட உணர்வை இந்தியாவில் உள்ள பெண்கள்தான் அதிகம் செய்வதாகவும் சமீபத்தில் வெளியான ஆய்வு தெரிவித்துள்ளது.

ஆபாச வீடியோக்களை பார்த்து அது போன்ற உடலமைப்பு இல்லையோ என்ற தயக்கம் ஏற்பட்டு உங்களுக்கே உங்கள் மீதான நம்பிக்கை குறைந்துவிடும்

அதேபோல் ஆய்வு ஒன்று தொடர் ஆபாச வீடியோ பார்க்கும் பழக்கத்தால் துணையைத் தாண்டி மற்ற பெண்களுடனும் உறவு வைத்துக்கொள்ள தூண்டும் என்கிறது. இதனால் குடும்ப வாழ்க்கையே சீர்குலையும்

ஆய்வுகளில் ஆபாச வீடியோக்களை பார்ப்பதால் உடலுறவில் ஈடுபாட்டைக் குறைக்கும் என்கிறது. அந்த ஆய்வில் 25% செக்ஸில் ஈடுபாடு இல்லாமலும், 19% உடனே விந்து வெளியேறும் குறைப்பாடு கொண்டவராகவும், 34% ஆண்குறி விறைப்பில் குறைபாடு என இப்படி பல காரணங்களால் ஆண்கள் பாதிக்கப்படுவதாக கண்டறிந்து வெளியிட்டுள்ளது.

மேலும் அந்த ஆய்வு சிறந்த உதாரணத்தையும் அளிக்கிறது. அதில் மது அடிமை என்றால் அடுத்து அடுத்து என மேலும் குடிக்கத் தூண்டும். ஆனால் ஆபாச வீடியோக்களுக்கு அடிமை என்றால் அதை விட சிறப்பாக கிடைக்காதா என்ற தேடலே அடுத்தடுத்து இருக்கும். அந்த தேடுதல் திருப்தி அடையாததாக இருக்கும். அதனால்தான் ஆபாச வீடியோக்களுக்கு அதிக அளவில் அடிமையாவதாக தெரிவித்துள்ளது

இப்படி திருமண வாழ்க்கையில் திருப்தியின்மை, தனிமை, அழுத்தம் , மனநிலை மாறுபாடு, மனைவிக்கு அழுத்தம் கொடுப்பது என பல பிரச்சினைகள் உங்கள் திருமண வாழ்க்கையையே நாசமாக்கும். அதோடு இன்று பல விவாகரத்திற்கு இதுவும் காரணமாக இருப்பது ஆச்சரியத்திற்கு இல்லை

ஒருவருடைய வாழ்வில் ஆபாசத்தின் பழக்கம் பின்வரும் சிக்கல்களை ஏற்படுத்தும்.

- சமுகத் தனிமை
- விலகுதல்
- ரகசிய வாழ்க்கை
- பொய்
- ஏமாற்றுதல்
- சுயநலம்
- தீய பார்வை
- மனநிலை சீர்கேடுகள்
- எரிச்சல்
- மனநிலை மாற்றம்
- கோபம்
- தொடர்ச்சியான தலைவலி
- கவலை,பயம்
- மனச்சோர்வு
- சக்தியற்ற உணர்வு
- நடுக்கம்
- பாலியல் ரீதியான சீர்கேடுகள்
- மக்களை பாலியல் பொருளாகப் பார்த்தல்.



- மனநிலை மாற்றங்கள்
- மற்றவர் உணர்வை புறக்கணித்தல்
- பாலியல் தொடர்பான பொருட்களை பயன்படுத்தல்.
- பாலியல் உணர்வுகளில் தொடர்ச்சியான ஈடுபாடு.
- ஆபத்தான நடத்தைகள்
- பள்ளியில் அல்லது

வேலைத்தலங்களில் ஆபாசத்தை அணுகுதல்.

- சிறுவர் துஷ்பிரயோகம்
- ஆபாசக் காட்சிகளை, படங்களை விற்பனை செய்தல்.
- உடல் ரீதியான தீங்கு
- பாலியல் பிரச்சனைகள்......
- உடலுறவில் ஆர்வம் இழப்பு
- ஆபாசம் இன்று உணர்வுகளை நிறைவேற்றுவதில் சிரமம்
- ஊடுருவும் எண்ணம் (ஆபாசம்)
- உடலுறவின் போது ஆபாசக் காட்சிகள், படங்கள் பார்த்தல்
- அன்பை இணைப்பதில் சிரமம்
- நிர்பந்த உறவு
- ஆபத்தான இழிவான உடலுறவில் ஆர்வம்
- பாலியல் அதிருப்தி
- பாலியல் செயலிழப்பு
- விறைப்புத்தன்மை
- வெறுப்பு
- சுய வெறுப்பு
- குற்ற உணர்வு
- அவமானம்
- இழப்பு
- தனிமை
- சுய மரியாதை இழப்பு
- ஆபாசத்துக்கு அடிமை
- விடாப்பிடியான ஆபாச ஏக்கம்
- எண்ணங்களை கட்டுப்படுத்த சிரமம்
- எதிர்மறை எண்ணங்கள்
- தோல்விகள்
- தீவிர ஆபாச வெளிப்பாடு
- ஆபாசத்தை இழக்கும் போது எரிச்சல் மற்றும் கோபம்
- இளைஞர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்......

ஆபாசத்தை அதிகமாக பார்ப்பவர்கள் முக்கியமாக 16இற்கும் 30 இற்கும் இடைப்பட்ட வயதுடையவர்களே என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஆபாசத்தைப் பார்ப்பது ஒரு பிள்ளையின் இயல்பான மூளை வளர்ச்சியை பாதிக்கிறது.என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஆபாசம் ஒருவருக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளிக்கிறது.இவை மண வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாகும். ஆபாசத்தை முக்கியமாக இரகசியமாக பார்ப்பதால் அது அதிகமாக வஞ்சிப்பதற்கும்,பொய் பேசுவதிற்கும் வழிநடத்துகிறது.ஆபாசம் என்பது அன்பான உறவை உதாசீனம் செய்கிறது.

ஆபாசம் முக்கியமாக பெண்களையும் குழந்தைகளையும் துஷ்பிரயோகம் செய்கிறது. அது அவர்களது கண்ணியத்தையும் உரிமைகளையும் பறிக்கின்றது. ஆபாசத்தைப் பார்க்கின்ற யாரோ ஒருவர் இதற்கு உடந்தையாக இருந்து அத்தகைய துஷ்பிரயோகத்திற்கு ஆதரவு தெரிவிக்கின்றனர்.

ஒரு மனிதன் தான் எவ்வளவு நல்லவன் என நினைத்தாலும் ஆபாசத்தை மௌனமாக அங்கிகரித்து நல்ல சூழ்நிலைகளிலும் அவனை புத்தி கெட்டவனாக ஆக்குகிறது. என ஆராய்ச்சியாளர்களாகிய (ஸ்டீவன் ஹில்லும் நைனா சில்வரும்) சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆபாசத்தை பார்ப்பதால் வரும் ஆபத்துக்கள் நிஜமானவை. ஆபாசம்

தீங்கானது. அது அழிவுக்கேடான ஒன்றாகும். அதை தயாரிப்பவர்களையும் அதைப் பார்வையிடுபவர்களையுப் கறைப்படுத்துகிறது. பிள்ளைகளுக்கு ஆபத்தளிக்கிறது. அது விட்டொழிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இன்டர்நெட் ஆபாசம்

கம்ப்யூட்டர் ஆபாசம் (சைபர் போர்ன்) என்றும் அழைக்கப்படுகிறது. மிகவும் பிரபலமாகி பல கோடி டாலர் மதிப்புள்ள வியாபாரமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. ' வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' இவ்வாறு கூறுகிறது. 'கருப்பு (லாபகரமான) வெப் சைட்டை தேடிப்போவதற்கு, காரணம் (ஆபாசமாக) இருக்கலாம்.

கவலைக்குரிய விடயம் என்னவென்றால், சைபர் போர்ன் பார்க்கும் அநேகர் பிள்ளைகளே. வீட்டில் இருந்து மவுசை சில தடவைகள் click செய்தாலே போதும் இவர்களுக்கு இவை அனைத்தும் கிடைக்கும். அநேகமான பெற்றோர்களுக்குத் தெரியாமல் பிள்ளைகள் அடிக்கடி இன்டர்நெட்டில் திரிகிறார்கள் 'தி டெட்ராய்ட் நியூஸ்' இவ்வாறு கூறுகிறது.85% பெற்றோர் தடை செய்திருந்த போதும் 5ல் இரண்டுக்கும் அதிகமான பிள்ளைகள் வெப் சைட் இணையத் தொடர்புகளை பயன்படுத்துகின்றனர்.

# ஆபாசம் பார்ப்பது கெடுதியா?..

ஆபாசமான படங்களை எப்போதாவது பார்த்தால் எந்தக் கெடுதியும் இல்லை என்று பலர் கருதுகின்றனர்.அவ்வாறே கருத்தும் தெரிவிக்கின்றனர். ஆனால் அவ்வாறு இல்லை உதாரணமாக ஒரு தம்பதியினரின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டால், வார்த்தை தவறாத ஒரு மனிதன் திருட்டுத்தனமாக இதனைப் பார்வையிடும் போது தன் மேல் உயிரையே வைத்திருக்கும் மனைவியிடம் பொய் சொல்லத் தூண்டும்.

ஒருமுறை பார்ப்பதால் மனைவி அதனைக் கண்டு விட்டால் கூறும் பொய் ஒரு கெடுதி இல்லை என்று ஒருவர் கூற முடியுமா.......?????

ஒரு முறை இதனைப் பார்வையிட்டாலும் ஒரு மனிதனை தவறான வழியில் இட்டுச் செல்கிறது. இதனால் குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்படுத்தக்கூடிய வல்லமை இதற்கு உள்ளது. இதன் மூலம் மற்றவர்களோடு நெருங்கிய உறவுகளை மேம்படுத்த முடிவதில்லை என பலர் ஒப்புக்கொள்கிறார்கள்.

உங்களையும் உங்கள் அன்பானவர்களையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இன்டர்நெட் ஒரு பயனுள்ள கருவியாக இருக்கலாம். ஆனால் மற்ற கருவிகளைப் போல அதை தவறாகவும் பயன்படுத்த முடியும்.தவறான பயன்பாட்டுக்கு சைபர் போர்ன் ஆன்லைன் ஆபாசம் ஒரு உதாரணமாகும்.

பிள்ளைப் பற்றி கூறுவதால் ஆபாசத்தை பிள்ளைகள் தான் பார்க்கக்கூடாது வயது வந்தோர் பார்க்கலாம் என்று ஒருவர் முடிவு செய்து கொண்டால் அது தவறாகும் ஒரு வேலை கொஞ்ச நாட்களாக நீங்கள் ஆபாசத்தை பார்க்கின்றீர்கள் என்று வையுங்கள் இதனை முற்றாக விட்டுவிட

விரும்புகிறீர்களா..?

## உங்களால் முடியுமா....?

ஆம்... கண்டிப்பாக முடியும். இந்த விடயத்தில் உங்கள் மனம் உறுதியாக இருந்தால் முடியும்..

இவ்வாறான பழக்கத்துக்கு நீங்கள் தொடர்ச்சியாக அடிமையாகும் போது உங்களுடைய இச்சையை தீர்த்துக்கொள்வதற்கு உங்கள் பிள்ளை, தாய், உறவினர்கள் என அனைவரையும் உங்கள் இச்சைக்கு இரையாகக்கூடிய நிலை ஏற்படும். எனவே இவற்றை நன்றாக சிந்தித்து பாருங்கள்.

## இதிலிருந்து விடுபட வேண்டுமா...?

- முதற்கட்டமாக இதனை நிறுத்துங்கள்.
- தள்ளிப்போடப் போட கடினமாகி விடும்.
- தொடர்ச்சியாக பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துக்கு, ஆசைக்கு இடம் கொடுக்க வேண்டாம்.
- நண்பர்களுடனான உறவு பாதிக்கப்படுவதை சிந்தித்து பாருங்கள்.
- கணவனாகவும், தந்தையாகவும், மகனாகவும் இருக்கின்றீர்களா..?

உங்களால் உங்கள் மனைவியையும், பிள்ளைகளையும் நீங்கள் ஆபாசத்தை பார்க்க ஆரம்பித்ததிலிருந்து சிடு சிடுப்பாகவும், கடு கடுப்பாகவும்,மனம் விட்டு பேசாதவராக இருந்திருப்பிங்கள் இப்போது நீங்கள் அவர்களுடன் அன்பாக நடந்து கொள்ளுங்கள்.

- சில நேரங்களில் காரணமின்றி எரிந்து விழும் தன்மை.
- நண்பர்கள் உறவினர் உங்கள் நடத்தை வேறுபாட்டை புரிந்து கொள்வார்கள்.
- நீங்கள் இதிலிருந்து விடுபட போராடிக் கொண்டிருக்கும் சமயத்தில் ஆபாசம் அந்த வெப் சைட்டில் தற்செயலாக நுழைந்து விட்டால் உடனடியாக அதை விட்டு வெளியே வந்து விடுங்கள்.
- உங்கள் பிள்ளைகளை ஆபாசத்தை விட்டுப் பாதுகாக்க சில ஆலோசனைகள்
- தொலைபேசியில் Password இடுவதை அனுமதிக்காதீகள், அவ்வாறு இட்டாலும் அதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.
- உங்கள் பிள்ளையின் அறையில் கம்ப்யூட்டரை வைக்க வேண்டாம்.
- இன்டர்நெட் இணைப்புகள் தொடர்பான எதுவாக இருந்தாலும் அனைவருடைய பார்வைக்கும் எட்டும் வகையில் வையுங்கள்.
- உங்கள் பிள்ளைகள் எப்படிப்பட்ட இன்டர்நெட் புரோகிராமிங் இணைப்புகளை பயன்படுத்துகின்றனர் என்பது பற்றி அறிந்து கொள்ளுங்கள்.
- உங்களுக்கு தெரியாமல் உங்கள் பிள்ளைகள் தனக்கென சொந்த வெப் சைட்டை உருவாக்கி வைத்திருக்கிறார்கள் அது குறித்து மேலும் கவனம் செலுத்துங்கள்.
- ஒழுங்கற்ற,ஆபாச, தகராறு செய்வது போல அல்லது மிரட்டலாக வரும் செய்திகளுக்கு ஒரு போதும் பதிலளிக்காதீர்.
- இரவு நேரத்தில் அல்லது

*தனிமையில் இருக்கும் போது தொலைபேசி, கணணி பாவனைகளை தவிர்த்தல் வேண்டும்.*

*பெற்றோர் தங்கள் பிள்ளைகளோடு அன்பான பாசப் பிணைப்பை எப்போதும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அவர்களோடு மனம் விட்டு பேச வேண்டும். அப்போது தான் உணர்ச்சி பூர்வமான அரவணைப்பு கிடைக்கும். கம்ப்யூட்டர் அரட்டை அறைக்குள் நுழைந்து விடாதீர்கள். முன் பின் தெரியாதவர்களுடன் பேசுவது ஆபத்தானது. வயது வந்தோர் சிலர் தங்கள் கரம் பிடித்த துணைவர்களை உதறிவிட்டு ஆன்லைனில் சந்தித்த ஒருவரோடு ஓடிவிடுகின்றனர்.*

*இவ்வாறு பலர் இதற்கு அடிமையாக்கப்பட்டு இதிலிருந்து எவ்வாறு மீள்வது என தெரியாமல் நடுக்கடலில் தத்தளிப்பது போல இதிலிருந்து விடுபட போராடிக் கொண்டிருக்கும் பலர் உள்ளனர்.*

*இதுகுறித்து பலர் கருத்து தெரிவித்த போது இவ்வாறு கூறுனார்கள்...*

*‘எனது வயது 26*

*நான் ஒரு ஆண்..*

*நான் என் வாழ்க்கையை சீரான முறையில் உறவுகளை பேணி வாழ்ந்த ஒரு ஆண்மகன். சில காலங்களுக்கு பின்னர் நான் காதல் வயப்பட்டேன் காலங்கள் செல்லச் செல்ல நாம் ஒருவரை ஒருவர் அதிக நெருக்கமானோம்....*

*பின்னர் ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்த போது எம்மை அறியாமலேயே சில தவறுகளை செய்து விட்டோம். இவ்வாறு சில காலங்களுக்கு பின்னர் அவள் என்னை விட்டு விலகி சென்று விட்டாள். ஆனால் அன்று நடந்த தவறுகளினால் நான் ஆபாசத்திற்கு அடிமையாகி விட்டேன்.......‘*

*‘ எனது வயது 19*

*நான் ஒரு ஆண்..*

*எனது வீட்டில் நான் ஒரே பிள்ளை தாய் தந்தை இருவரும் எப்போதும் பார்த்தாலும் சண்டையிட்டவாரே இருப்பார்கள் எனக்கு அவர்களை பிடிக்க வில்லை.*

*என்னிடம் நேரம் ஒதுக்கி பேசமாட்டார்கள்......*

*என் மீது அன்பு செலுத்த மாட்டார்கள்.....*

*எப்போதும் என்னை ஒரு பொம்மை போலவே வழிநடாத்துகின்றனர். நண்பர்களுடன் நட்புக்கொள்ள விடாமல் என்னை வழிநடத்தி வந்தனர். காலப்போக்கில் அவர்கள் என்மீது சந்தேகம் வந்தது, எனது தொலைபேசியை நோட்டமிட ஆரம்பித்தனர். ஆபாசம் தொடர்பான விடயங்கள் தொடர்பான காட்சிகளை படங்களை பார்க்க வேண்டாம் என அதிகமாக கூறி வந்தனர். அவற்றை நான் பார்க்க மாட்டேன் என்று கூறியும் அவர்கள் என்னை நம்பவில்லை. அவர்களின் வார்த்தைகள் என்னை அதைப்பற்றி தேடத் தூண்டியது.*

*இவ்வாறு பார்க்க ஆரம்பித்த நான் இதில் அடிமையாகி விட்டேன்....‘*

*‘ எனது வயது 46*

*நான் ஒரு பெண்...*

நானும் எனது கணவரும் தொழில் புரிகிறோம். எனக்கு ஒரு ஆண் பிள்ளை வீட்டில் அவர் மாத்திரம் இருப்பார். அவரை என்னால் முடிந்த அளவு நன்றாக பார்த்துக் கொள்கிறேன். இரவு நேரத்தில் மாத்திரம் நாம் ஒன்றாக இருப்போம்.

எனது கணவர் தினந்தோறும் ஆபாசம் பார்ப்பார், இரவு நேரங்களில் அதைப் பார்த்து விட்டு அதில் உள்ளவாறு செய்யுமாறு கூறுவார். அவர் மட்டும் பார்ப்பதில்லாமல் என்னையும் பார்க்குமாறு கூறுவார். நான் எவ்வளவு புத்திமதி கூறியும் அவர் பழக்கம் அதிகரித்து கொண்டே இருக்கிறது. மேலும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் எனது மகனும் இதில் அடிமையாகி உள்ளார் என்பது எனக்கு தெரிய வந்தது இவர்களை நான் எவ்வாறு மீட்டுக் கொள்வது......?

## கணவரை விவாகரத்து செய்தால் எனது மகனின் நிலை என்ன...???'

இவ்வாறு ஆபாசத்திற்கு அடிமையானவர்களை எவ்வாறு இனங் காண்பது..?

- அதிக தனிமை
- பெண்கள் மீது வெறுப்பு
- கீழ்த்தரமான பார்வை
- ஆபாசமான பேச்சு
- உறவில் நாட்டமின்மை
- வெறுப்பு
- அதிக கோபம்
- அதிக படியான எரிச்சல்
- அதிக தொலைபேசியுடனான தொடர்பு
- சிறுவர் துஷ்பிரயோகம்
- அதிக பொய்
- அழுத்தமான password

நான் முன்னர் பதிவு செய்யப்பட்ட கட்டுரையிலும் குறிப்பிட்டுள்ளேன்...

தற்போதைய காலகட்டத்தில் விவாகரத்துக்கள் அதிகரிப்பதற்கு காரணம் என்ன?

சற்று சிந்தித்துப் பாருங்கள்!

இந்த காலகட்டத்தில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கையடக்க தொலைபேசி இல்லாதவர்கள் இல்லை.

விவாகரத்து அதிகரிக்க பல காரணங்கள் இருக்கின்றன அவற்றில் புரிந்துணர்வு இன்மை, அனுபவம் அற்ற வயதில் திருமணம் என பல காரணங்கள் உள்ள போதிலும் தற்காலத்தில் விவாகரத்து அதிகரிக்க முக்கிய காரணம் இந்த ஆபாசம்.

நாம் ஒரு நாளைக்கு எத்தனை தடவைகள் யூடியூப், கூகுல் என்பவற்றை பார்வையிடுகின்றோம். அதில் யதார்த்தமாக ஆபாசப் படங்களை காட்சிகளை பார்வையிடுகிறோம். அவற்றில் இருந்து பார்வையை தளர்த்தி வேறு பகுதிக்கு செல்கின்றோம்.அவ்வாறான தருணங்களில் தான் ஒவ்வொரு மனிதனும் அந்த ஆபாசத்தினுல் ஈர்க்கப்படு அடிமையாக்கும் தளங்கள் பல

காணப்படுகின்றன.

இவ்வாறான காட்சிகளை பார்பதனுடாக அடிமையாக காணப்படும் நாம் பிற்காலத்தில் நம் ஒவ்வொருவருரினதும் எதிர்காலம் பற்றி சிந்தித்து இருக்குறோமா?

இவற்றால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்ன?

இதனை தொடர்ச்சியாக செயற்படுத்தும் போது gray mate பகுதி பாதிக்கப்படுகிறது.இதனை 100 க்கு மேற்பட்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது

- சிந்திக்கும் திறன்
- முடிவெடுக்கும் திறன்
- செயற்பாட்டு திறன் என்பன பாதிப்புக்கு உள்ளாகும்.

Emotions இவை அனைத்தும் பாதிக்கப்படுகிறது.இவை அதிகமாக ஏற்படுவது 17வயது உட்பட்டவர்களுக்கே.

இப்பழக்கமானது தொடர்ச்சியாக செல்லும் போது அது உங்கள் வாழ்க்கையை மட்டுமின்றி உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையையும் பாதிக்கும்.

இதற்கு ஈர்க்கும் மூன்று முக்கிய காரணங்கள்

1. கையடக்க தொலைபேசிகள்
2. தனிமை
3. வலைதளங்கள்

உலகில் ஒரு மணித்தியாலத்திற்கு 25,000 பேர் இவ்வாறான வலைத்தளங்களை பார்வையிடுகிறார்கள். என ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.அதிலும் 50-60% ஆண்கள், இவ்வாறான குற்றச்சாட்டு காரணமாக 66% பெண்கள் விவாகரத்து பெற்றுள்ளனர்.

இதனால் திருமணத்தில் ஏற்படும் பாதிப்புக்கள் என்ன?

- விவாகரத்து
- சந்தேகப்பார்வை
- ஆண் ஆதிக்கம்
- உண்மையற்ற நிலை
- கொடுமை
- மன உளைச்சல்
- ஒற்றுமையின்மை
- சண்டை
- பொருத்தமற்ற நிலை
- எதிர்மறை எண்ணங்கள்
- கற்பனை உலகம்
- இரவில் மனைவி அல்லது கணவன் தூங்கியதற்கு பின்னர் இவ்வாறான காட்சிகளை பார்த்தல்
- காணொளிகளில் காண்பவற்றை நிஜவாழ்க்கையில் நிலைநாட்ட முயற்சித்தல்.
- உறவில் நாட்டமின்மை
- பிள்ளைகளின் புறக்கணிப்பு
- தனிமையை நாடிச் செல்லல்
- அழுத்தமான password

## சுய இன்பத்தால் ஏற்படக்கூடிய விளைவுகள்?

- முதுகு, இடுப்பு, கழுத்து போன்ற இடங்களில் வலி.
- இரவில் அடிக்கடி கனவு வந்து விந்து வெளியேற்றம்.

- ஆண்குறி சிறுத்து சுருங்கிக் காணப்படும்.
- ஆண்குறி வளுவிழந்து அதில் நிறைய நரம்புகள் தோன்ற ஆரம்பிக்கும்.
- விறைப்புத்தன்மை அதிகரிக்கும்.
- கன்னம் ஒட்டிப் போகும்.
- கண்ணில் கருவளையம் தோன்றும்.
- கைகளில் நரம்புகள் மிதந்து தோன்ற ஆரம்பிக்கும்.
- சோர்வு அதிகரிக்கும்.
- உடலுறவிலோ அல்லது சுய இன்பத்திலோ ஈடுபட்டு 5 அல்லது 10 நிமிடங்கள் விந்து வெளியேற்றம்.
- ஆண்மை குறைவு ஏற்படுகின்றது.
- மலம் கழிக்கும் போது விந்து வெளியேற்றம்.
- ஞாபக மறதி.
- உங்கள் மீது உங்களுக்கு வெறுப்பு ஏற்படும்.
- மன அழுத்தம் அதிகரிக்கும்.
- துணைவியை திருப்திப்படுத்த முடியாத நிலை.
- பெண்கள் மீது வெறுப்பு.
- கை, கால் மூட்டு வலி.
- தசைப்பிடிப்பு.
- தனிமை ஏற்படும்.
- உங்களுடைய விந்தணுக்களின் எண்ணிக்கை குறைவடைந்து நீங்கள் ஒரு பிள்ளைக்கு தாய் அல்லது தந்தை ஆக முடியாத நிலை ஏற்படும்.
- ஆண்குறியில் வலி ஏற்படும்.
- வாழ்நாட்கள் பாதிக்கும்.
- முடியுதிர்வு.
- மயக்க நிலை.
- மறதி.
- துணைவியுடன் உறவில் நாட்டமின்மை (sex).

# இவற்றினால் எவ்வாறு விவாகரத்து ஏற்படுகின்றது.

இவ்வாறான பழக்கம் தன் கணவனிடமோ அல்லது மனைவியிடமோ இருப்பதை அறிந்த பின்னர் இருவருக்கும் இடையே பிரச்சினைகள், வாதங்கள், மனக்கசப்புகள் என பல முரண்பாடுகள் ஏற்படுகின்றன நம்பிக்கை அற்ற மனப்பான்மை ஏற்படுகின்றன.

ஒன்றாக பேசியுறவாடிய நேரம் குறைந்த செல்கின்றன.

திருப்தியற்ற நிலை ஏற்படும்.

இவ்வாறான நிலையில் 100% பெண்கள் மன அழுத்தத்தை எதிர் நோக்கியுள்ளார்கள் .

இன்னொருவரை நாடும் நிலை ஏற்படும்.

இவற்றை தீர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் விவாகரத்து ஏற்படுகின்றது.

சிந்தித்துப் பாருங்கள்...

இக்கட்டுரை உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் பயன்படுமாயின் உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுங்கள்.....

பாத்திமா நளீபா

# ஆண்களும் பெண்களும் சமமா?

ஆண்களும் பெண்களும் சமமா? என்றால்,
'இல்லவே இல்லை' என்கிறது உளவியல்.
ஏன் என்றால்...
18 வயதில் பெண்களுக்கு அழகான ஆண்களைப் பிடிக்கிறது.
25 வது வயதில் அறிவில் முதிர்ந்த ஆண்களைப் பிடிக்கிறது.
30 வது வயதில் வாழ்வில் வெற்றி பெறும் ஆண்களைப் பிடிக்கிறது.
40 வது வயதில் திறமைகளை நிலைநாட்டிய ஆண்களைப் பிடிக்கிறது.
50 வது வயதில் நேர்மையான ஆண்களைப் பிடிக்கிறது.
60 வது வயதில் உதவும் குணம் கொண்ட ஆண்களைப் பிடிக்கிறது.
ஆனால் ஆண்களைப் பொறுத்தமட்டில்,
18 வயதில் அழகான பெண்களைப் பிடிக்கிறது.
25 வது வயதில் அழகான பெண்களை மட்டும் பிடிக்கிறது.
30 வது வயதில் அழகான பெண்களை மட்டும் பிடிக்கிறது.
40 வது வயதில் அழகான பெண்களை மட்டும் பிடிக்கிறது.
50 வது வயதில் அழகான பெண்களை மட்டும் பிடிக்கிறது.
60 வது வயதில் அழகான பெண்களை மட்டும் பிடிக்கிறது.
நடக்க முடியாமல் நான்கு காலில் ஊர்ந்து செல்லும் 70 & 80 வது வயதிலும் அழகான பெண்களை மட்டும் பிடிக்கிறது.
வயதிற்கேற்ப பச்சோந்தி போல் குணத்தை மாற்றிக்கொள்ளும் பழக்கம் ஆண்களுக்குக் கிடையாது.
உளவியல் ரீதியாக ஆண்களும் பெண்களும் சமம் இல்லை என்பது விஞ்ஞானப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

தகவல் ; **நாஞ்சில் தமிழன்**

ஏப்ரல் மாத
இதழ் சிறப்பாக
வந்திருக்கிறது.
கட்டுரைகளும்,
கதையும்,
கவிதைகளும்
இதழுக்கு
மெருகூட்டும்
வண்ணமாக
அமைந்திருக்கிறது.
வடிவமைப்பில்
கவனம் புரிகிறது.
வாழ்த்துகள்
தோழரே

SA அப்துல் கபூர்
ஆசிரியர்
வெண்ணிலா

*இதழ் கண்ணுற்றேன்.சிறப்பாய் வந்துள்ளது.வரதனுக்கும் தாங்களுக்கு மான உரையாடல் வரதனுக்கு தாழ்வு மனப்பான்மையை நீக்கி இருக்கும் என நம்புகிறேன்.அறம் செய் என்றால் வாரி வாரி கொடுப்பதா?இக்காலத்தே மனிதனை மனிதனாகப் பார்ப்பதுதானே? சாலையில் கிடக்கும் சிறு கல் ஒன்றை பிறர் கால் தடுக்கி கீழே விழாதவாறு அப்புறப்படுத்துவதும் அறந்தானே. முதலில் அறம் செய விரும்புதல் வேண்டுமல்லவா?இதைத் தானே ஔவை பிஞ்சு உள்ளங்களில் முதலில் விதைத்தாள்.மூன்றாம் உலக போர் பற்றிய கட்டுரையும் நன்று.கருத்தமயின் பாத்திரம் தனக்கு உழவு மட்டுமே தெரியும் என்பது மட்டுமல்ல அவன் பயிற்றுவிக்கும் வாழ்வியல் முறை இக்கால தலைமுறைகள் கற்று கொள்ள கூடிய ஒன்று. அலை பேசி ஒன்று இருந்து விட்டால் உலகமே தெரிந்து விடுகின்ற எண்ணம்கொண்ட தலைமுறை. தருமியும் சொக்கனும் என்பது போல் வரதனும் அமினும் வாழியநலம்*

***சுந்தரப் பாண்டியன், புதுக்கோட்டை***

# துளிப்பா

1

மழைக்குக் குடை
பயனுள்ளதாய் இருக்கிறது
நிழற்குடை .

2

தொழில் வளர்ச்சி
அதிகரித்துக் கொண்டே இருக்கிறது
காடுகள் அழிப்பு.

3

அழிக்கப்பட்ட வனத்தில்
தழைத்து வளர்கிறது
மின்னணுப் பூங்கா.

4

பறவையின் வாழ்க்கை
ஊஞ்சலாடுகிறது
இயற்கை அழிப்பு.

5

வயலில் கொக்கு
மெல்ல எட்டிப் பார்க்கிறது
வளையில் நண்டு .

6

பாலின் விலை
அதிகரித்துக் கொண்டே செல்கிறது
ஊற்றும் தண்ணீர்.

7

கடல் மணலில்
காலடித் தடங்கள்
நண்டுகள்.

8

பூக்களின் வாசம்
மகிழ்வைத் தருகிறது
மரத்தடியில் வாழ்க்கை.

9

சுற்றிவிடும் பம்பரம்
சுழன்று வீழ்கிறது
மனிதனின் ஆசை.

10

கோபுரக் கலசம்
கண்ணுக்கு நன்றாய்த் தெரிகிறது
பௌர்ணமி நிலவு.

11

விலை குறைந்தும்
வாங்க மறுக்கின்றனர்
தர்ப்பூசணி.

12

விலை கூடியும்
கூட்டம் குறையவில்லை
நகைக்கடை

**பாவலர் க.சண்முக சிதம்பரம்**

# தாயன்பே தாலாட்டு

ஏணிப்படியாகும் வாழ்வியலில்
ஏமாற்றங்கள் ஏற்றங்கள்
இறக்கங்கள் எள்ளளவு
காணமுடியாத அவளன்பு

ஓடும் இரத்த
நாளங்களெல்லாம் படர்ந்து
உணர்வுகளால் ஒழிக்க முடியாத
அசையாத பாசம்

அவள் மடிதேடிய மழலை நாட்கள்
நினைவால் மீட்ட வரம் கேட்கிறேன்

காலத்தில் கரைந்து காற்றாகிய நாட்கள்
என் தாய்மைப்பக்கங்களுக்கு நினைவூட்டியது

அவள் வதனத்தில் பொதிந்த மொழிகள்
பிள்ளை என்னை பீடிக்கவே இல்லை

ஆகாய வெளியும் நீலக் கடலும்
விசாலித்த அன்பின் மொழிகளில்
வியந்து நிற்கின்றேன்

சுருங்கிய தோல் மடிந்த கண்கள்
மூன்றுகால் நடை கண்ணுக்கு விருந்தாளியவள்

உலகத்து உறவுகள்
எத்தனை கோடியாயினும்
அவளின் ஒருபார்வை
உள்ளத்திற்குப் போதும்

எத்தனை காத்திருப்புக்கள்
இந்தப் பூமியில் அவள் விழிகள்
கணிக்கும் நேரம் யாரால் உணரமுடியும்

இதழ்களுக்கு மௌனம் கொடுத்து
தேடல்களுக்கு இதயம் கொடுத்து
வழிமேல் விழிமேய்வாள்

இல்லத்தரசி மகுடம்தாங்கி
உள்ளத்தைப் பிரித்தறியும்
அவளாற்றல் உளவியல் உண்மைகளின்
உறைவிடம்

குழந்தைக் குரல்களுக்கு
வகைவகையான
விடைவிருந்து
வண்ண மொழிகளாலே
அரவணைக்கும் அவளழகு

பிள்ளைச் சாகசங்களின்
உணர் நரம்புகளோடு
அவள் இதயத்தின்
அற்புதமான பாய்ச்சல்

அழுகைக்கும் அகமகிழ்வுக்கும்
ஒற்றை ஒத்தடம்
நேசப் பிணைப்பின்
தொடர் இணைப்பு

வையக வாழ்வில்
அவள் உயிர்ப்பின்
நினைவுகள் ஒன்றே
இயக்கத்தின் உந்துசக்தி

தாயே உன்
அன்பின் பொழிதல்களுக்கு
குடை மறந்து
நனைகின்றேன் நான்

என்னிறுதி மூச்சின்
நிமிடங்களில் உன்வதனம்
காணவே வரம் கேட்கிறேன்....

✍️ சேஹ்ஹு மொஹம்மது பெனாஸிரா,
முஸ்லிம் ஹல்மில்லாவ,
மதவாச்சி.

# குறுந்தொகையும் தன்முனை இயைபுக்கவிதைகளும்

குறுந்தொகைப்பாடல் ( 210)

திண் தேர் நள்ளி கானத்து அண்டர்,
பல்ஆ பயந்த நெய்யின், தொண்டி,
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு,

எழுகலத்து ஏந்தினும் சிறிது - என் தோழி
பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு
விருந்துவர கரைந்த காக்கையது பலியே!

(காக்கைப் பாடினியார் )

விளக்கம் : *பிரிவில் சென்ற தலைவனின் வரவை காக்கை கரைந்து விருந்தினர் வரப் போகிறார் என அறிவிக்கிறது. காக்கைக்கு வெண்ணெல் அரிசியால் விருந்து வைக்கப் படுகிறது.*

தன்முனை இயைபுக்கவிதை :

காக்கைக்குச் சோறு வைத்து,
கரையுமெனக் காத்திருந்தாள்
காதலன் வருகையைக்
கண்விழித்துப் பார்த்திருந்தாள்

பாடல் (18)

வேரல் வேலி வேர்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!
யார் அஃது அறிந்திசினோரே -சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம்தூங்கியாங்கு
-இவள்
உயிர்தவச் சிறிது , காமமோ பெரிதே!
(கபிலர்)

**விளக்கம்** : *பலாமரத்தில் மிகப்பெரிய பலாப் பழத்தைச் சிறு கொம்பு தாங்குவது போல, காதலியின் காதலை அவள் உயிர் தாங்குகிறது.*

தன்முனை இயைபுக் கவிதை×

கொம்பில் பழுத்தபலா
காம்பே தாங்கும் /
அன்பில் விளைந்த காதலை
உயிரே தாங்கும் /

பாடல் (3)

நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர் அளவின்றே - சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே
(தேவகுலத்தார்)

விளக்கம் . *காதலனிடம் தான் கொண்ட நட்பு நிலத்தை விட அகலமானதும் வானத்தை விட உயர்வானதும் கடலை விட ஆழமானதுமாகும் என்கிறாள் தலைவி.*

தன்முனை இயைபுக் கவிதை×

நிலமும் வானமும்
நட்பை விடச் சிறியது
நீள்கடல் ஆழத்தினும்
காதலே பெரியது/

பாடல் (20)

அருளும் அன்பும் நீங்கி, துணை துறந்து,
பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்,
உரவோர் உரவோர் ஆக!
மடவம் ஆக, மடந்தை நாமே!
(கோப்பெருஞ்சோழன்)

**விளக்கம்** : *அன்பும் அருளும் நீங்கி, பொருள் தேடும் பொருட்டுத் தலை வன் பிரிகிறான். பிரிவாற்றாமல் தலைவி பொருள் தேடச் சென்ற அவர் அறிவு டையவரா? ஆற்றியிருக்கும் நாம் அறிவு டை யோரா? எனப் புலம்புகிறாள்.*

தன்முனை இயைபுக் கவிதை×

அன்பான தலைவன்
திரைகடல் ஓடினான்
ஆற்றாது தலைவி
புலம்பலில் வாடினாள்

பாடல் (4)

நோமென் நெஞ்சே நோமென் நெஞ்சே :
இமை தீய்ப்பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற்கு அமைந்த நம் காதலர் அமைவு
இலர் ஆகுதல் நோம் என் நெஞ்சே!
(காமம் சேர் குளத்தார்)

**விளக்கம் :** *தலைவனின் பிரிவு ஆற்றாமையால் அழுதகண்ணீர் வெந்நீராகி, இமைகளைச் சுட்டன. காதலனின் அன்பை நெஞ்சுடன் பேசி ஆற்றியிருக்கிறாள் தலைவி.*

தன்முனை இயைபுக் கவிதை×

கண்ணீர் வெந்நீரானால்,
இமைகள் தீய்ந்து விடும்
காதலன் பிரிவானென்றால்,
நெஞ்சம் பட்டுவிடும்

**திருமதி.இரா.இராஜாமணி**
ஈரோடு





## புதியதோர் உலகம் செய்வோம்!

மதியினில் சுடர்விடும் மலர்ச்சியை அளித்திடும்
விதியினை படைத்திட விழைந்தே அழைப்போம்!
நலிவுறும் மக்களும் நன்னிலை பெற்றிடவே
பொலிவுறு நிலையெழ புல்லறிவை அழிப்போம்!

வலியவர் சுரண்டிடவே வறியவரை வாட்டிடும்
வலியதை உணர்ந்தே வாதையைத் துடைப்போம்!
பொதுநலமே கண்டிட புரட்சியே ஒளிர்ந்திட
புதுவிதி எழுதிய பாவேந்தரைப் போற்றுவோம்!

சரியான நீதியுடன் சட்டத்தைத் தாங்கிடவே
புரிந்திடும் செயல்களால் புவியிது சுழலட்டும்!
குறுகிய மனங்களைக் குடைந்திடும் பாக்களால்
உறுதியுடன் அணுகுவோம்! உள்ளதை மாற்றட்டும்!

பகுத்தறிவாளர் நிறைந்திட பொதுவுடமைச் சமூகம்
வகுத்திடும் அறவழியால் வாழ்விதை நிறுத்துவோம்!
எல்லோருக்கும் தேசமாம்! எல்லோருக்கும்
உரிமையாம்!
நல்லார்வழியே புதியதோர் உலகம் செய்வோம்!

**கவிஞர் மாலதி இராமலிங்கம்,**
புதுச்சேரி.




# சின்னதாய் ஒரு மாற்றம்

**பா. அனிஸ்குமார்**
பத்தாம் வகுப்பு
நாகப்பட்டினம்

‘ஐடி கார்டைக் காணோம்’’… என்று கத்திக் கொண்டிருந்தான் மிதுன்.

சமையலறையில் இருந்து வெளியே வந்த அம்மா “ஸ்கூல் விட்டு வந்ததும் அதை ஒரு எடத்துல வைக்க மாட்டேங்குற… அதனாலயே தினமும் காலையில ஒரே பரபரப்பு… இதே வேலை தான் உனக்கு” என்று தேடி எடுத்துக் கொடுத்தாங்க .

இவன் கத்தும் சத்தம் கேட்டு உள்ளே தூங்கிக் கொண்டிருந்த குட்டி தம்பி எழுந்து அழ ஆரம்பித்து விட்டான் .

அதற்குள் ஆட்டோ வந்து விடவும், மிதுனை ஸ்கூல் அனுப்பிவிட்டு அழுகின்ற தம்பியைத்தூக்கி சமாதானம் செய்தபடியே வீட்டை ஒழுங்குப் படுத்தினாங்க அம்மா.

மிதுனை ஏற்றிக் கொண்டு ஆட்டோ பக்கத்துத் தெருவில் இருக்கும் கவின் வீட்டிற்குச் சென்றது. கவின் வாசலிலே ரெடியாகி நின்று கொண்டிருந்தான்.

இருவரும் ஒரே வகுப்பு தான். மிதுன் எப்போதுமே தாமதமாகத்தான் கிளம்புவான். ஆட்டோ வந்து ஹாரன் சத்தம் கேட்ட பிறகு தான் வருவான். ஆனால் அவன் நண்பன் கவின் எப்போதும் ஆட்டோ வருவதற்கு முன்பே தயாராகி வெளியில் நிற்பான். அவனால் ஒருநாள் கூட தாமதமானதே கிடையாது. நண்பர்கள் இருவரும் பேசிக்கொண்டே பள்ளிக்குச் சென்றார்கள் .

மாலை பள்ளி முடிந்ததும் இருவரும் ஆட்டோவுக்காக வாசலில் நின்று கொண்டிருந்தாங்க.

“கவின்! எனக்கு உன்னோட மேத்ஸ் நோட் கொடுடா... போன வாரம் லீவு போட்டேன்ல அன்னைக்கு உள்ள தெல்லாம் எழுதிட்டு தரேன்”...

‘‘நான் நியூ நோட்டு போட்டுட் டேன்டா... நீ கேட்டது பழைய நோட்டுல இருக்கு, வீட்டுக்கு வரியா எடுத்து தரேன்”...

இருவரும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது ஆட்டோ வரவும் இருவரும் ஏறிக் கொண்டார்கள் . கவின் வீட்டுக்குச் சென்றதும் ஆட்டோ அங்கிளிடம் சொல்லி விட்டு கவின் உடன் உள்ளே சென்றான் மிதுன்.

வீட்டிற்கு நுழைந்தது முதல் கவின் செய்ததெல்லாம் கவனித்தான் மிதுன். எல்லாமே அவனுக்கு வித்தியாசமாக இருந்தது. ஸ்கூல் பேக், ஐடி கார்டு, வாட்டர் பாட்டில் எல்லாவற்றையும் மிதுனைப் போலத் தூக்கி எறியாமல் ஒரு இடத்தில் வைத்தான்.

கவின் வீட்டுக் குட்டி பாப்பா விளை யாடிக் கொண்டிருந்தாள். அவள் தூக்கி எறிந்த பொம்மைகள் எல்லாம் எடுத்து கூடையில் வைத்துக் கொண்டு, அம்மாவை அழைத்து மிதுன் வந்திருப்பதைச் சொன்னான்.

அம்மா மிதுனுடன் பேசிக் கொண்டி ருந்தார்கள். அதற்குள் கவின் அவன் கேட்ட மேக்ஸ் நோட் எடுத்துக் கொண்டு வந்து விட்டான். புத்தகங்களை எல்லாம் அழகாக அடுக்கி வைத்திருந்தான். அதைப்



பார்த்ததும் ஆச்சரியமாக இருந்தது.

இந்நேரம் மிதுன் வீடாக இருந்தால் தேட வேண்டும். வீட்டில் உள்ள எல்லோ ருமே தேடினாலும் அவன் நோட்டு புத்தகங்கள் கிடைக்காது. நோட்டை வாங்கிக்கொண்டு கவின் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு வெளியில் வந்தான் மிதுன்.

“ஏய் கவின்! என்ன உன் தங்கச்சி பாப்பா டாய்ஸ் எல்லாம் நீ எடுத்து வைக்கிற... வீட்டு வேலை எல்லாம் செய்ற... அதெல்லாம் உங்க அம்மா எடுத்து வைக்க மாட்டாங்களா?”...

‘‘ஏய் இதுல என்ன இருக்கு?... சாதாரண விஷயம். நம்ம வீடு நாமதான் சுத்தமா வச்சுக்கணும்... எல்லா வேலை யும் அம்மாதான் செய்யணும்னு எதிர் பார்க்கக் கூடாது... அவங்க எவ்ளோ வேலைகளைப் பார்ப்பாங்க... நம்மால முடிந்த சின்ன சின்ன உதவிகளை செய்யலாம்”... என்றான் கவின் .

நண்பனுக்கு நன்றி சொல்லி விட்டுப் புறப்பட்டான் மிதுன் .

ஆட்டோவில் வரும் வழியில் யோசித்துக் கொண்டே வந்தான். வீட்டுக்குள் நுழைந்ததும் எப்போதும் போல் ஸ்கூல் பேக், ஐடி கார்டை தூக்கி எறியாமல் அதற்குரிய இடத்தில் வைத்தான். சோபாவில் அம்மா மடித்து வைத்திருந்த துணிகளை எல்லாம் தம்பி கலைத்து விட்டிருந்தான் . அதை எல்லாம் எடுத்து அடுக்கி வைத்தான். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அம்மாவிற்கு அவன் செயல்கள் ஆச்சரியமாக இருந்தது. “நம்ம மிதுனா இது!... என்று நினைத்துக் கொண்டே அவனிடம் எதுவும் வெளிக் காட்டி கொள்ளாமல், “ஸ்கூல் விட்டு வந்தாச்சா?... டிரஸ் மாத்திட்டு வா... உனக்கு பிடிச்ச ஸ்னாக்ஸ் செஞ்சு வெச்சிருக்கேன்”.. என்று சொன்னாங்க.

“இதோ வரேன் மா’’... என்று துள்ளலுடன் ஓடினான் மிதுன்.



# பட்டாம்பூச்சி

**ஜீ.மைத்ரேயி**
**வந்தவாசி**

ஓர் அழகிய நகரத்தில் சுமதி ஐந்தாம் வகுப்பு படித்து வந்தாள். அன்று அவளது வகுப்பறையில் அன்பு என்ற ஆசிரியர் பட்டாம்பூச்சியின் வாழ்க்கை வரலாறு பற்றிக் கூற ஆரம்பித்தார்.

அன்பு ஆசிரியர் பட்டாம்பூச்சியின் வாழ்க்கை நான்கு நிலைகளைக் கொண்டதாகும் என்று கூறினார்.

எறும்புகள் எப்பொழுதும் கூட்டமாக உழைத்துக் கொண்டே இருக்கும். ஒரு துளி கூட ஓய்வு எடுக்காது. ஆனால், பட்டாம்பூச்சி எப்பொழுதும் ஓய்வு எடுத்து அடுத்தவரைக் கேலி, கிண்டல் செய்து கொண்டே இருக்கும்.

பட்டாம்பூச்சி மழைக்காலத்தில் ஓய்வு எடுப்பதற்கும், உணவு உண்ணுவதற்கும் எதுவும் தயார் செய்யவில்லை. எறும்பு செய்வதைக் கண்டு கேலி செய்து கொண்டே பட்டாம்பூச்சி விளையாடிக் கொண்டே இருந்தது.

கோடைக்காலமும் முடிந்து மழைக் காலமும் தொடங்கியது. எறும்புகள் ஓய்வு எடுத்தன. பட்டாம்பூச்சி மழையில் நனைந்து பெரும் வேதனைப்பட்டது. அதற்கு தான் நாம் எப்பொழுதும் நம் வேலையை நாம் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும்



# இட்லி vs தோசை

பிரபலமான ‘அண்ணாச்சி ஹோட்டலில்’, சமையலறை எப்போதும் கலகலப்பாக இருந்தது. ஆனால் ஒன்று மாறவில்லை- இட்லியும் தோசையும் எப்போதும் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தன!

ஒரு நாள் காலை, முதல் வாடிக்கையாளர் வருவதற்கு சற்று முன்பு, அவர்களின் சண்டை மீண்டும் தொடங்கியது.

தோசை: “என்னைப் பார்! நான் பொன்னிறமாக, ஸ்டைலாக இருக்கிறேன்! மக்கள் என்னை சில சமயங்களில் ஒரு மேஜை அளவுக்கு செய்கிறார்கள்! உன்னால் அதைச் செய்ய முடியுமா?”

இட்லி: “பெரியதாக இருப்பதற்காகவே சிறந்தவன் ஆக முடியாது. நான் மென்மையாகவும், ஆரோக்கியமாகவும், சாப்பிட எளிதாகவும் இருக்கிறேன். குழந்தைகள், பெரியவர்கள், பற்கள் இல்லாதவர்கள் கூட என்னை ரசிக்கவும் ருசிக்கவும் முடியும். உங்களைப் பற்றி என்ன? யாராவது உங்களைத் தவறாகக் கடித்தால், அவர்களின் பற்கள் உடைந்து போகக்கூடும்”

தோசை: ”நீ சாதாரணமாகவும், சலிப்பாகவும் இருக்கிறாய்”

இட்லி: “நான் இல்லாம சாம்பார், சட்னி சாப்பிடறதுக்கு எந்த பிரயோஜனம் இருக்காது.”

மற்ற உணவுகள் நாடகத்தை ரசித்துக் கொண்டிருந்தன.

சட்னி: “இல்ல, மறுபடியும் வேண்டாம்!”

சாம்பார்: “எனக்கு இதிலிருந்து ஒரு இடைவெளி தேவை!”

வடை: “ஹாஹாஹா! நீங்க ரெண்டு பேரும் நீங்கதான் பெஸ்ட்னு நினைக்கிறீங்க? நான் இல்லாம காலை உணவு முழுமையடையாது!”

தோசை சிரித்தது. ‘‘நீங்களா? நீங்க வெறும் மொறுமொறுப்பான துணை!”

சமையலறை முழுவதும் சிரிப்பின் கொண்டாட்டமாக மாறியது. வழக்கமாக அமைதியாக இருந்த பொங்கல், கடைசியில் பேச ஆரம்பித்தது.

“போதும்! மக்கள் நம் அனைவரையும் வெவ்வேறு காரணங்களுக்காக நேசிக்கிறார்கள். ஆனால் இறுதியில், நாம் அனைவரும் ஒரே வாழை இலையில் ஒன்றாக பரிமாறப்படுகிறோம், இல்லையா?”

இட்லியும் தோசையும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

நீண்ட மௌனத்திற்குப் பிறகு, இட்லி, “சரி… ஒருவேளை நாம் இருவரும் ஸ்பெஷலாக இருக்கலாம்” என்றது.

தோசை சிரித்தது. “ஆனால் நான் இன்னும் மொறுமொறுப்பாக இருக்கிறேன்!’’

சமையலறை சிரிப்பொலி தொடர்ந்தது!

- நீதி -- ஒவ்வொருவரும் அவரவர் வழியில் தனித்துவமானவர்கள்

பர்வதவர்மன்



# வந்துவிட்டாய், ஆரா...

**சஹ்னாஸ் பேகம்**
முதலைப்பாளி, புத்தளம்

'இடது கையில் கட்டியிருந்த அம்புலி பந்து கொண்ட கையை சற்று உயர்த்திக் காட்டினான் மோகன். அந்த அடையாளம் இன்றும் அவர்களுக்குள் பழைய நினைவுகளை தூண்டி விட்டது. பத்து ஆண்டு களுக்கு பிறகு பள்ளி நண்பர்கள் அனைவரும் மீண்டும் சந்தித்த அந்த நாள் ஒரு புதிய ஆரம்பமாகவே இருந்தது.

கார்த்திக், மோகன், நவின், கிஷோர், ஆர்த்தி, மேனகா, லயா – அவர்கள் எட்டாம் வகுப்பு முதல் பிளஸ் டூ வரை இணைந்திருந்த சின்ன உலகம். காலம் அவர்களைப் பிரித்தாலும், இருதயத்தில் தொட்ட நினைவுகள் ஒரே மாதிரியாகவே இருந்தன. வாழ்க்கையின் வேகத்தில் தொலைந்துபோன மற்ற நண்பர்களை மீண்டும் தேடத் தொடங்கினர். அந்த தேடலில் நிரோ, ஆகாஷ், விநோத், முவாத், நஸ்ரின், சிம்ஹா – ஒருவருக்கொருவர் தெரிவதுபோல கண்டு பிடித்தார்கள்.

ஆனால் ஒரே ஒருத்தியைக் காண வில்லை. அவள் இக்கதையின் நாயகி ஆரா. பள்ளி நாட்களில் சிறந்த தோழியாக வும், சிலருக்கென்றே தனித்த கண்ணோட்டத்தில் வைக்கப்பட்டவளாக வும் இருந்தாள். அவளது கண்களில் எப்போதுமே கனவுகளின் பசுமை விளைந்தது. 'ஆரா எங்கே?' என்ற கேள்வி, அனைவருக்கும் மனதுக்குள் ஊசியாய் குத்தியது.

அவர்களின் தேடல் நழுவ, சில நாட்கள் கழித்து பிக்னிக் போன போது. ஒரு அழகிய மலையடைந்த கிராமத்துக்கு அவர்கள் சென்றனர். அங்கே ஒரு பழைய வீடு. பசுமைத் தோட்டம், முன்னால் ஒரு கிணறு, பக்கத்தில் ஒரு ஜன்னல் வழியே கதிரவன் விழும் ஒளி. அந்த வீட்டுக்குள் ஒரு தம்பதிகள். நெஞ்சோடு வரவேற்றனர். உணவு, தங்கும் இடம் – மனதை தொட்டது. அவ்விரவு எல்லோருக்கும் கனவென இருந்தது தங்கிய போது, அவ்விரவின் நடுநிசியில் தூங்காது தவித்த ஆகாஷ் எழுந்து வெளியேறினான்.அது பழமை வீடு நீண்ட வீடு பல அறைகள் இருந்தது. இருவர் வாழும் வீட்டில் இத்தனை அறைகள் இருந்ததில் குழம்பிய மனதோடு தவித்தான் ஆகாஷ். ஆகாஷின் கண்ணில் பூட்டிய கடைசியறை தென்பட உள் நுழைந்தனுக்கு இருளே வரவேற்றது. செல்போன் டோச் வெளிச்சத்தில் நோக்கியவனுக்கு ஒரு பழைய டயரி சிக்கியது.

அதைத் திறந்தவன் பக்கங்களை புரட்டிக் கொண்டிருந்தான். எழுத்து நடையில் ஒரு விஷேஷம். சற்று ஒழுங்கற்ற அழகான கைரேகைகள். ஒரு பக்கம் மட்டும் மஞ்சள் கலந்திருந்தது. 'நினைவுகளில் நீ மட்டும்...' என்று ஒரு வரி.

அவன் கண்ணீர் விட்டான்.

அது ஆராதனாவின் கைஎழுத்து. அவளைப் பற்றி எல்லோருக்கும் தெரிந்த ஒன்றே ஒன்று – அவளின் சுருக்கமான நினைவுகள்.

ஆகாஷ் நினைவில் ஆழ்ந்தான். பிளஸ் டூ இறுதி நாளில் அவள் அவனைப் பார்த்து காதல் சொல்லி இருந்தாள். ஆனால் அவன், 'இதெல்லாம் ஈர்ப்பு தான்

ஆரா... நம்ம பின் வாழ்க்கை வேற மாதிரி' என்று கூறி அப்போதிருந்தே தலையைத் திருப்பிவிட்டான்.

அதன் பிறகு அவள் கண்டதா? கேட்டதா? இல்லை. ஆனால் அந்த டயரியில்: 'அவனை காதலித்தேன். இவனோ வேறொருத்தியுடன் வாழ்க்கை தொடங்கிவிட்டிருப்பான் என்று என்னை ஆற்றிகொண்டேன். ஆனாலும் உயிரோடு அவனிடம் சொல்ல முடியாத என் காதலை இதேபோல ஒரு நாள் பார்த்துவிடுவான் என நம்பிக்கையுடன் எழுதுகிறேன்.'

அவன் அழுதான். அனைவரும் மௌனத்தில் மூழ்கினார்கள்.

அடுத்த நாள் அந்த தம்பதிகள் அனைவரையும் வழியனுப்ப வந்த போது, அவர்கள் சொன்னார்கள்: 'எங்க பிள்ளைக்கு நாங்க திருமணம் செய்வது அவளுக்கு வருத்தம். வாழ்க்கை அவளுக்கு வரமாயிருக்கல. இப்போ பேசாமலும் எதுவும் உணராமலும் ஒரு ஓர அறையில் இருக்குறா.'

அது சாகரிக மழையைப் போல் விழுந்தது.

'ஆரா...?!' என்று அனைவரும் ஒரே சத்தத்தில்.

அவளை பார்க்க அவர்கள் துடித்தார்கள். அவள் நிழலாய் இருந்தாள். கண்கள் திறந்திருந்தாலும் உயிர்ப்போடு இல்லை. ஆகாஷ் ஓடி சென்று அவளை கட்டியணைத்தான். அவள் உடம்பு குளிர்ந்திருந்தது. அவன் அழுதான். 'மன்னிச்சிடு ஆரா... உன்ன நா உணராம போனேன். உன் மௌனம் என் உயிரைக் கடிக்குது...'

கிஷோர் அதே டயரியை எடுத்துப் பார்த்தான். கடைசி பக்கம்: 'அவனிடம் ஒரு நாள் என் காதலை சொல்ல முடியாவிட்டாலும், என் அப்பா அம்மா நாளைக்கு என் நிச்சயதார்த்தம் வைத்திருக்கிறார்கள். அந்த நாளுக்கு முன்பே என் உயிரோடு என் காதலுடன் வாழ நினைக்கிறேன். இறப்பே நிம்மதி...'

அது அனைவருக்கும் தாக்கியது.

ஆகாஷ் கதறி அழுதான். 'உண்மையான காதலோட இவள கைவிட்டது நா தான்டா. என் முட்டாள்தனம் தான் இவள வாழ நிம்மதியில்லாமல் பண்ணுது...'

அவனை சமாதானப்படுத்த முடியவில்லை.

மூன்று நாட்கள் கடந்தபின், மருத்துவர் ஒருவரிடம் அவர்கள் சென்றனர். அவர் கேட்டார்: 'இந்தக் குழந்தைக்கு ஏதாவது கடந்த கால சம்பவமா? ஒருவிதமான மௌனம், நினைவிழப்பு போன்றது இருப்பது போல...'

ஆகாஷ் முன்வந்து அனைத்தையும் சொன்னான். தன்னை தானே குற்றவாளியாக நினைத்து கதறினான். அவளை விட்டு சென்றதற்கு மன்னிப்பு கேட்டான்.

அவன் சொன்ன வார்த்தைகள், கதறல்கள், கண்ணீர்கள் எல்லாம் ஒரு உயிரை அசைத்தன.

அவள், ஆரா, கண் விழித்தாள்.

அவனை பார்த்தாள்.

'நீயா?' என்ற வார்த்தை சின்ன விசிறலாய் வெளிவந்தது.

அவள் கையைக் கடினமாய் பிடித்தான். 'நான் தான் ஆரா... இந்த உயிர் போகும் வரை நான்தான்...'

அவள் மெல்ல சிரித்தாள். கண்ணீரோடு.

வந்துவிட்டாய், ஆரா வந்து விட்டாள்.




# இப்படிக்கு என் இதயம்

நூல் (ஓர்) அலசல்

## ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்

புல்மோட்டை

'இப்படிக்கு என் இதயத்தின்' கதாநாயகி பாத்திமா சில்மியா. இவர் கேகாலை மாவட்டத்தின் மாவனல்லை மண் ஈன்றெடுத்த எழுத்துலகின் இளஞ்சிட்டு என்பதை மொழிவதில் பெருமையடைகின்றேன். பள்ளிக்காலம் முதல்இன்றுவரைதமிழின்வாடையைநுகர்ந்து தன் மூச்சுக்காற்றாக சுவாசித்து வருவதோடு மட்டும் நிறுத்தி விடாமல் அவளிதயம் பேசும் சுவாரசியங்கள் பலதை எழுத்துலகம் உணர்ந்து வாசிக்க வேண்டும் என்பதற்காக 'இப்படிக்கு என் இதயம்' எனும் நூலை கன்னிப்பிரசவம் ஆக்கினார். எழுத்துப் பிழைகளால் ததும்பும் இவ்வையத்தில் அவற்றையெல்லாம் விஞ்சி பல்சுவை எழுத்துக்கள் ஒவ்வொன்றையும் கோர்வைகளாக்கி கோர்த்தெடுப்பதென்பது சாதாரண காரியமல்ல. அவ்வாறு கோர்த்தெடுத்து நூலுருவாக்கியவர்களின் பட்டியலில் இவரின் எழுத்துக்களுக்கும் ஓர் அங்கீகாரம் இருப்பதையிட்டு அகமகிழ்கின்றேன். எழுத்துலகில் சஞ்சரித்து வரும் இவர், 'Rehna Writes' எனும் புனைப்பெயரில் எம் உள்ளங்களில் உணர்வு பூர்வமான வரித்துளிகளின் மூலம் இடம் பிடித்துள்ளார்.

வாழ்வியல் அம்சங்களை வண்ணமயமாய் எடுத்தியம்பும் கவி வரிகள் ஒன்றாகி இக்கவிதைகள் நூலாக வெளிவந்தமை வையம் முழுதும் உவகை தான் அல்லவா !..

இவரின் இக்கன்னி முயற்சியை நூலுருவாக்கம் செய்ய வேண்டும் என அவாக் கொண்ட ஏட்டுலாக்கனவாக்கம் அமைப்பின் பணிப்பாளர் ஆஷிக் ஹுசைன் அவர்களுக்கும் சிறப்பான முறையில் இதயம் பேசும் கதைகளுக்கேற்ற வகையில் நூலினை வடிவமைப்புச் செய்த தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கும் இதனை அச்சு பதித்து வெளியிட ஒத்துழைத்த ஜே. எம். ஐ. பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கும் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் தொடரட்டும் பணிகள்...

பாத்திமா சில்மியாவின் 'இப்படிக்கு என் இதயம்' உணர்த்துகின்ற உணர்வு பூர்வமான வரிகளை அலசிக்கொள்ளும்போது என் விழிகளில் அகப்பட்ட சிலதை விருந்தாய் சமர்ப்பிக்கின்றேன்

'நிலவின் ரசிகை' எனும் கவிதைத் தலைப்பில் (பக்கம் 72)

'களைக்காது கதைகள் கேட்கும் அவன்
கலையில் சளைக்காது சொற்களைச்
சிதறி விடுகின்றேன் சிதையாது அவற்றை
சிற்பங்களாக்கிட

வரிகள் ஏராளம் ஏலவே வரைந்திட்ட போதிலும்
அவனுக்கென தாராளங் கொள்ள
இவள் மனம் ஏனோ மறக்கவில்லை
வார்த்தையும் வற்றிடவில்லை '

ஆஹா! வரிகளின் அருமை தான் இன்னும் இன்னும் என் சிந்தையை தூண்டிச் செல்கின்றது அத்தனை பிடித்தங்கள் அவை ஒவ்வொன்றிலும். கேட்பதற்கென்று உள்ளங்கள் இருக்குமெனில் சொல்வதற்கென்று கதைகளும் இருக்குமல்லவா!

'எதில் உள்ளது அன்பு' (பக்கம் 99)எனும் கவிதைத் தலைப்பில் தென்பட்ட சில துளிகள்

'ஆடை ஆபரணங்களென அத்தனையும்
அவளுக்காக அள்ளி குவித்த போதிலும்
அன்புடன் அவற்றை அணிவித்து அவளை
அழகு பார்க்க மறந்து விட்ட அவன்
அறியவில்லை அவளின் ஆத்மார்த்த
எதிர்பார்ப்பான அன்பு அடங்கியிருப்பது
அந்த பண்டங்களிலல்ல அவனிலென்று ...'

அன்பை வார்க்காது வெறுமனே அற்பங்களை அள்ளிக் கொடுப்பதானது சுதந்திரப் பறவையைக் கூண்டிற்குள் அடைத்து வைத்து அழகு பார்ப்பது போன்றதே...

அவள்கள் எதிர்பார்ப்பது என்னவோ ஆயுளும் அன்பைத்தான் என்பதை சித்தரிக் கின்றார் கவிஞர்.

'உன்னால் முடியும்' என்ற தலைப்பில் (பக்கம் 61)சுழியோடிப் பெற்ற சில வரிகள் இதோ!

'வையகமே உனது திறமைக்குத் தளம்
தைரியமாய் நீயும் இறங்கிடு களம்
கிடைக்கும் வாய்ப்பை நழுவாது பற்றி
அடைந்திடு நிஜத்தில் வலுவான வெற்றி

தடைகள் தாண்டிடு கலக்கம் போக்கி
குறியாய் சென்றிடு இலக்கை நோக்கி
வீரியம் விதைத்திடு விதியாய் சிந்தையில்
உயர்ந்தாலும் துள்ளாதே மன அகந்தையில்

உன்னால் முடியும் உறுதி கொள்வாய்
இடைவிடாது இயங்கி இமயம் வெல்வாய்'

இதயம் பேசும் தூண்டல் வார்த்தைகள் கோழைகள் சோம்பேறிகளை திடுக்கிடச் செய்வதோடு துலங்கவும் செய்கின்றது. முடியாது என்று ஏதுமில்லை முடித்துக் காட்டி விட்டு வந்து நில்!.. வார்த்தைகளேதுமில்லை...

என்றவாறு தலைகோதி வெற்றியின் பாதைக்கு வழி சமைக்கின்றன அத்தனை வரிகளும்.

இன்னும் பலதை சொல்லிக் கொண்டே போகலாம். இருந்தும் வாசக நேசர்களாகிய உங்கள் பந்திக்கும் விட வேண்டும் அல்லவா!..

எழுத்துக்கோர்வைகள் பல சேர்ந்து 120 தலைப்புக்களால் 123 பக்கங்களாக பரிண மிக்கும் இந்நூலானது புனிதம் பேசி காவியம் வரைந்து அரியாசனம் கொடுத்து முத்துச் சிதறி வா-சிக்க வைத்து நிதர்சன உலகை எட்டிப் பார்க்க வைக்கிறது.

பள்ளிப்பருவத்தை கிள்ளி எடுத்து கொஞ்சம் உடுத்தி இன்று கற்பனையில் அழகு பார்த்திட வைத்திடும் 'வெள்ளைச் சீருடை நாட்கள்' என்ற தலைப்பில் (பக்கம் 29) மலரும் வரிகள்

'வெள்ளைச் சீருடையில் சுற்றித்திரிந்த
அந்த பொக்கிஷமான காலத்தை

அன்பான பரிமாறல்கள்
செல்லச் சண்டைகள்
குறும்புச்சேட்டைகள்
முடியக் காத்திருக்கும் பாடவேளைகள்
பாசம் நிறைந்த கண்டிப்புக்கள்

புத்தகப்பை மட்டுமே சுமையாய்த்தெரிந்த
அந்த அழகிய நாட்கள் வாராதோ மீண்டும்
நம் வாழ்வில் '

வரிகளின் வர்ணணைகளால் உணர்வுகளை யெல்லாம் ஊடுருவிச் செல்லும் 'இப்படிக்கு என் இதயம்' வாசர்களாகிய உங்களின் உள்ளங்களையும் வருடிச் செல்ல வேண்டும் என்ற அவாவுடன் இவளும்.

நூலின் பெயர்: இப்படிக்கு என் இதயம்
நூலாசிரியர்: பாத்திமா சில்மியா
நூல் பதிப்பு, வடிவமைப்பு :
தமிழ் நெஞ்சம் அமின்
வெளியீடு: ஆஷிக் ஹுசைன்
(ஏட்டுலா கனவாக்கம்)
அச்சகம்: ஜே. எம். ஐ

விலை: 650 /=

# பொய்க்கால் குதிரை

புல்லாங்குழலன்

சத்தம் போடாம திட்டு செல்லம்.

என்னை சண்டைக்காரின்னு சொல்றீங்களா?

இல்லம்மா, பக்கத்து வீடுகளில் உன் சத்தம் கேட்குமே. உனக்கு அந்தக் கெட்ட பெயர் வரக்கூடாதுன்னு தான்.

என்னா கரிசனம்? ஏன் அவங்க வீட்டிலெல்லாம் சண்டை வராதா?

நமக்கு பக்கத்து வீட்டிலே ஒரு நடுத்தர தம்பதி இருக்காங்கல்ல, அவங்க இரண்டு பேரும் சண்டை போட்டுக்கிறதில்லையாம். ரொம்பப் புரிதல் உள்ள குடும்பமாம் அது. ஏதாவது சத்தம் வருதான்னு பாரு,

நீங்கள் சொல்ற மாதிரி சத்தமில்லாம சண்டை போடறாங்களோ என்னமோ?

அவங்களைப் பற்றி நமக்கென்ன? நான் உனக்குப் பிடிக்காதவை ஏதாவது செய்தா என்னைக் கூப்பிட்டு விசாரிச்சு சரிபார்த்து அப்புறமா நீ என்ன வேணா திட்டிக்கோ, ஆனால் அடித் தொண்டையில கத்தாதே. நான் மன்னிப்பு கேட்டவுடன் நீ திட்டறத நிறுத்திடு. சரியா?

சரிங்க நீங்க இவ்வளவு சொல்றதால நானும் அமைதியா இருக்க டிரை பண்ணுறேன்.



*உயர் நடுத்தர வீடுகள் அடங்கிய அந்தத் தெருவின் ஒரு வீட்டில் சங்கருக்கும் அவர் மனைவி நந்தினிக்கும் நடந்த வாக்குவாதம் சுமுகமாக முடிந்து வீடு அமைதியானது.*

*அன்று இரவு 7 மணி அளவில் நந்தினியின் வீட்டு வரிசையில் மூன்றாவதாக இருந்த வீட்டிலிருந்து நந்தினியின் ஆபிஸ் நண்பி அவளைத் தேடி வந்தாள்.*

*நந்தினி, உங்க பக்கத்து வீட்டில் வசிக்கும் ரஞ்சனி நம் ஆபிசில் வந்து சேர்ந்திருக்கிறாள்.*

*புதியதாக வேலையில் சேர்ந்திருக்கிறாளா?*

*இல்லை. அவளும் அவள் கணவனும் சென்ற வருடம் தான் இந்த வீட்டை வாங்கி இங்கு குடி வந்தார்கள். அதற்கு முன்பாக அவள் பணிபுரிந்த இடத்தில் ஊதியமில்லா விடுப்பு 1 வருடத்திற்கு எடுத்திருந்தாளாம். அது நேற்றோடு முடிந்து மாற்றலாகி நம் ஆபீசில் நேற்று பணியில் சேர்ந்தாள். நேற்று நீ ஆபிசில் லீவு போட்டிருந்ததால் உனக்குத் தெரியவில்லை. இன்னொரு அதிசயம்*

*என்ன அதிசயம்*

*இந்தத் தெருவில் நாம் இருவரும் ஒரே அலுவலகத்தில் பணியில் இருக்கிறோம். இப்போது அவள் மூன்றாவது ஆள். அது மட்டுமல்ல நம் இருவருக்கும் இடையில் ஒரு சீட் இருந்ததல்லவா, அதில் அவளைப் போட்டிருக்கிறார்கள்.*

*கனிகா இன்று காலையில் தான் என் கணவர் எங்கள் பக்கத்து வீட்டார் பற்றி என்னிடம் சொன்னார். அவர்கள் மனம் ஒத்த தம்பதியராம். இருவரும் நல்ல புரிதலுள்ளவர்களாம். சண்டையே போட்டுக் கொள்ள மாட்டார்களாம். இப்போது நீ என்னவென்றால் அவள் நம் ஆபிசில் நம் பக்கத்திலேயே உட்கார்ந்து விட்டாள் என்கிறாய். பார்ப்போம்.*

*கனிகா தான் கொண்டு வந்த செய்தி முடிந்ததால் நான் போய் வருகிறேன் என்று சொல்லி அவள் வீட்டுக்குப் போய்விட்டாள்.*

*அன்று மூன்று பெண்களும் பணிபுரியும் அலுவலகத்தில் ஒரே முமுணுமுணுப்பும் சலசலப்புமாக இருந்தது.*

*இந்த கம்பெனியில் ஆட்குறைப்பு செய்கிறார்களாம். அதுவும் இன்றே எல்லோருக்கும் சம்பள பாக்கியை எல்லாம் செட்டில் செய்து வீட்டுக்கு அனுப்பப் போகிறார்களாம்.*

*கனிகா, நந்தினி இருவரும் தங்களுக் குப் புதியதாக அறிமுகமான தங்கள் தெரு தோழி ரஞ்சனியை நோக்கி, உங்களையுமா? என்றனர்.*

*ஆமாம். நான் தொடர் விடுப்பில் இருந்தது அவர்களுக்குக் குறையாகப் பட்டு விட்டது. அதனால் சீனியராயிருந்தாலும் என்னையும் வீட்டுக்கு அனுப்புகிறார்கள்.*

*இந்தச் சூழலை எப்படி சமாளிக்கப் போகிறோம் என்று நினைத்தால் தான் பயமாயிருக்கிறது என்றனர் மூன்று பேரும் கோரசாக.*

*அருகிலிருந்து மற்றொரு தோழி கேட்டாள், ஆமாம். உங்கள் கணவர்கள் நல்ல பணியில் தானே இருக்கிறார்கள். ஈசியாக சமாளிக்கலாமே*

*நாங்கள் தற்போது வாங்கியிருக்கும் வீடு கடனில் வாங்கியது.*

எனது கணவர் அதிக சம்பளம் பெற்றாலும் அவருக்கு பிடித்தங்கள் இருக்கின்றன. இதுவரை வீட்டுக் கடனை என் சம்பளத்திலிருந்து தான் கட்டி வருகிறோம். பிள்ளைகள் படிப்பு என ஏராளமான செலவுகள். எங்கள் பெற்றோர்களுக்கு வேறு பணம் அனுப்ப வேண்டும். என்ன செய்வது என்று புரியவில்லை என்றாள் ரஞ்சனி.

இதையே கனிகா மற்றும் நந்தினியும் சொன்னார்கள்.

நமது வேலை நிரந்தரமற்றது எனத் தெரியாதா?

அப்படி நினைக்கவில்லை. வேறு ஏதாவது வேலை தேடலாம் என்றால் இந்த ஊரிலேயே கிடைக்குமா? பிள்ளைகள் படிக்கிறார்களே. எப்போது கிடைக்கும்?. நடுத்தர வயது பெண்களாகி விட்டோமே.

சரி உங்கள் கணவர்களிடம் ஆலோசித்து முடிவு எடுங்கள். நானும் அதே நிலையில் தான் இருக்கிறேன். ஆனால் எனக்குக் கடன் இல்லை. அதனால் அதிகத் துன்பமில்லை என்றாள் அந்தத் தோழி.

வேலை இழந்தவர்களுக்கு அன்று மாலையிலேயே அவர்கள் பணிபுரிந்த காலத்திற்கான தொகையும், உடனே போகச் சொன்னாலும் போனசும் எனக் கொடுத்து பிரிவு உபசாரமும் செய்து தங்கள் பணியை முடித்துக் கொண்டது கம்பெனி.

அப்போதே தன் கணவருக்கு இந்தச் செய்தியைக் கூறினாள் ரஞ்சனி.

இரவு பேசிக் கொள்ளலாம் என இருவரும் தீர்மானித்தனர்.

கனிகாவும், நந்தினியும் தங்கள் கணவர்களைக் கலவரமடையச் செய்ய வேண்டாம் என நினைத்து அன்று இரவு அமைதியாகத் தங்கள் பிரச்சினைகளுக்கு முடிவு தேடலாம் எனப் பேசி தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றனர்.

பாக்கி பைசல் பண்ணி என்னை இன்று வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள் மை டியர் என்றாள் கனிகா தன் கணவன் ரமேஷிடம்.

பரவாயில்லை கனிகா, நாம் இதை எதிர் பார்த்தோம் தானே. ஆனால் இவ்வளவு சீக்கிரத்தில் எதிர்பார்க்கவில்லை தான். அதற்காக நீ ஒன்றும் கவலைப் படாதே. நமக்கு திருச்சியில் இருக்கும் ஒரு ப்ளாட்டை விற்று விடுவோம். அந்தப் பணத்தை செலவுகளுக்கும் கடன்களுக்கும் பயன்படுத்திக் கொள்வோம். அதில் வந்த வாடகைப் பணமும் வராது தான், என்றாலும் மொத்தமாக ஒரு தொகை கிடைக்கிறதல்லவா, அதை வைத்து சரி செய்து கொள்ளலாம். அப்புறம் வாய்ப்பு நன்றாக அமையும் போது வேறு வாங்கிக் கொள்வோம். இப்போது நாம் இருக்கும் இந்த அருமையான வீட்டிலேயே நாமிருப்போம். சரியா?

மை டியர், என் கவலையை ஒரு நொடியில் போக்கி விட்டீர்களே.

இப்படி என் வாழ்வு அன்பு மயமாய் இருப்பதற்கு அந்தக் கடவுளுக்கு நன்றி சொல்லியே ஆகணும். என் டியருக்கும் தான்.

நானும் சீக்கிரம் வேறு நல்ல வேலை தேடிக் கொள்கிறேன். அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்கிறேன். சரியா

சரி தான் வா குழந்தைகள் தூங்கி விட்டார்கள் நாம் போயப் படுப்போம்

அன்பே என கனிகாவின் இடுப்பில் கை வைத்துத் தள்ளிக் கொண்டு படுக்கை அறையை நோக்கிப் போனான் ரமேஷ்

எங்க ஆபிசில் என்னைக் கணக்குத் தீர்த்து வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள் என் அருமைக் கணவரே. இனி என்ன செய்வதாம்.

படிப்புக் கடன், வீட்டுக் கடன் என மாதச் செலவுகளுக்கு எப்படி சமாளிப்ப தாம் என்றாள் நந்தினி தன் கணவன் சங்கரிடம்.

இக்கட்டான நிலைமை தான். என்னை ரொம்ப நாளாக எனது ஆபிசில் தங்களின் மேல்படிப்புக்காக ட்யூஷன் எடுக்கச் சொல்லி வற்புறுத்துகிறார்கள். அதை இப்போது நிறைவேற்றிக் கொள்ளலாம். உன் சம்பளத்தில் பாதிக்கு மேல் கிடைக்கும். ஆனால் இரவு வீட்டிற்கு வர ஒன்பதரை மணிக்கு மேலாகும். பரவாயில்லை. கொஞ்ச காலம் இப்படி ஓட்டலாம்.

என்னைக்கூட மேத்ஸ் ட்யூஷன் எடுக்கச் சொல்லி நம் அண்டை அயலார் கூப்பிடுகின்றனர். நான் இதுவரை அதற்கு ஒப்புக் கொள்ளாதிருந்தேன். இப்போது அதற்கு ஒப்புக் கொள்ளலாம் அல்லவா, நீங்கள் கஷ்டப்படும்போது நானும் கொஞ்சம் தோள் கொடுக்கலாமே.

சரி சரி இப்போது எனக்கு உன் தோளைக் கொடு சாய்ந்து கொள்ள செல்லமே.

உங்கள் மார்பில் விளையாடும் குழந் தையை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் கொஞ்சலாம் வாங்க போகலாம் என்றதும் அங்கும் இரவு விளக்கு அணைந்தது.

இந்த இக்கட்டான நிலைமையை எப்படிச் சமாளிப்பதாம் என எனக்கு ஒரே கவலையாய் இருக்கிறது.

என்ன சொல்லு, நீ சொல்வதை என் றைக்கு நான் தட்டியிருக்கிறேன்.

என் ஒன்று விட்ட தங்கை ஒருத்தி இன்னும் திருமணமாகாமல் இருக்கிறாள். ஜாதகம் சரியில்லை என எல்லாம் தட்டிப் போய் விட்டது. ஒரு நாள் நான் எதேச்சையாக உங்கள் ஜாதகத்தோடு அதை வைத்துப் பார்த்தபோது மிகப் பொருத்தமாக இருந்தது. அவளும் நல்ல வேலையில் இருக்கிறாள்.

என்ன சொல்ல வருகிறாய்? பெண்கள் விரும்பாத, நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றையல்லவா சொல்கிறாய்.

அதனாலென்ன, நீங்கள் என்னைக் கைவிட மாட்டீர்களல்லவா, அவளுக்கும் கணவனாக இருந்திடுங்களேன். நான் சண்டை ஏதும் போட மாட்டேன். நம் குழந்தைகளை நான் பார்த்துக் கொள்கிறேன். வேலை தேடிக் கொள் வேன். நமக்குள் புரிதல் இருக்கிறது தானே. அவளுக்கு உண்மையான கணவனாக இருங்கள். எனக்கும் அவ்வப்போது உங்கள் அன்பைத் தாருங்கள். நான் அவளுக்குப் போட்டியில்லை. நான் அவளை இதற்கு சம்மதிக்க வைக்கிறேன்.

பின்னால் இதனால் கஷ்டங்கள் ஏற்பட்டால் நான் ஒன்றும் குறை சொல்ல மாட்டேன். நீங்களும் மாற மாட்டீர்கள் என நம்புகிறேன். பிறகென்ன?

இதெல்லாம் சரிப்பட்டு வருமா? நாம் வேறு வழி பார்க்கலாமே.

இல்லை இது தான் சரியான வழி. என் தங்கைக்கும் ஒரு நல்ல வாழ்வு கிடைக்கும்.

குழப்பத்துடன் அன்று இரவு இருவரும் சலனமின்றித் தூங்கப் போனார்கள்.

ரஞ்சனி திருமணப் பத்திரிகைகள் இரண்டை கனிகா வீட்டில் ஒன்றும் நந்தினியின் வீட்டில் ஒன்றுமாகக் கொடுக்க வந்திருந்தாள்.

தன் தங்கையின் கல்யாணம் என்றாள்.

வாயடைத்துப் போன கனிகாவும் நந்தினியும் சற்று பிரமை பிடித்து நின்றனர்.

ஏன் இப்படி? என்றனர். உங்கள் ஒப்புதலுடன் தானா இது என்றனர்

ஆமாம். இருவரும் சேர்ந்து தான் இதைச் செய்கிறோம்.

புரிதலா இது?

ஆம்.

புரிதல் எரிதலாகி திரிதலாகி விரிதலாகாமல் இருக்கவேண்டுமே.

அப்படியெல்லாம் ஆகாது என்ற ரஞ்சனி அங்கிருந்து சென்று விட்டாள்.

கனிகா, புரிதலின் இந்த நிலைமை சரியில்லை. நம் கணவர்கள் அன்பும் பாசமும் கொண்டு தீர்வு தந்தனர். இப்போது நமக்கும் நம் வாழ்வு தான் சரி என்றாகிறது பார்.

ஆமாம். நானும் அதைத்தான் நினைத்தேன். இனி கணவரிடம் கூடுதல் அன்பு செலுத்துவேன்.

நீ சொல்வது சரிதான் என்றாள் நந்தினி.

# வேட்கை நன்றே...

பா வகை : நேரிசைக் கட்டளை வெண்பா

என்றுமே வாழ்வினில் ஏற்றமாய் வாழ்ந்திடு
நன்றென யாவையும் நாளெலாம்- வென்றிடும்
ஒன்றென வேட்கையில் ஒற்றுமை ஓங்குமே
நன்றாய்ச் சிறக்குமே நாடு.

பிறப்பின் பெருமையால் பீடுடன் வாழ்வாய்
சிறப்பென நீயுமே சிந்தை- அறத்தில்
நலமெனும் வேட்கையில் நன்மையே எங்கும்
உலகினில் உண்மை உயர்வு.

வாழ்வியல் கவி **சா.நாகூர் பிச்சை**
துபாய்




## நூல் விமர்சனம்

நூலின் பெயர் : பாஷோவின் கைத்தடி
நூலாசிரியர் : ச. இராஜ்குமார்.
வெளியீடு : செங்கனி பதிப்பகம் .
நூல் விலை : 150
நூலை வாங்க :
*8867933021, 97508 56600.*

126 பக்கங்களைக் கொண்ட இந்த ஹைக்கூ நூல்

நம்பகத்தன்மையும், பூரணத்துவத்தையும் ஒருங்கே பெற்ற நூலாக இருக்கிறது. ஜென் என்பது அனுபவத்தின் துளிர்ப்பே. மொழியியலின் கட்டுக்களை கட்டவிழ்ப்பது. தர்க்கம் இங்கே தோற்றுப் போகும். என் அனுபவம் வேறு.

தங்களின் சூழல் வாழுமிடம் பொறுத்தே ஜென்னின் வார்த்தைகள் களம் காண்கிறது. நான் - என்ற உணர்வற்று இயற்கையோடு மனது கலந்திருப்பது. அந்த நிமிடத்தின் சுவை உணர்தல் என்பதே அதன் பூரணம். அது உதிர்தலாகவும் துளிர்த்தலின் திரட்டாகவும் இருக்கலாம். இரண்டும் ஒரே மனோபாவத்தை விதைப்பதே ஹைக்கூ.

**புத்தர் சிலையருகில்**
**உறங்கும் புலி**
**கானகத்தில் நிலவுகிறது பேரமைதி.**

புத்தன் தன் அமைதியின் அலை நீளங்களால் புலியை கட்டி வைத்து விட்டானோ? உறங்கும் புலிக்கு... கவலை ஏது? பார்க்கும் நமக்கோ... அடடா... புத்தனுக்கு ஏதேனும் ஊறு ஏற்படுத்துமோ? பசியில் எழுந்தால் என்னாவது? என்பது ஒரு புறம் இருக்க மற்றவிலங்குகள் அமைதியில் இருப்பதை வாழ்வை உறுதி செய்கிறது புலியின் உறக்கம்.

கலவரங்கள் இல்லை புலி உறங்கும் வரை என்பதே வனசாட்சி.

புத்தனின் மண் உதிரத்தால் கழுவப்பட நாமும் உறங்குவது போலவே நடித்து அச்சச்சோ போர்... கொன்று குவிப்பு - என்பதெல்லாம் வெறும் செய்தியாக மட்டுமே கடந்து விடுகிறோம். உறங்கட்டும் புலி.

நாம் யாரும் ஜப்பான் நாட்டு தீவுகள் அல்ல. எரிமலைகளை கண்டு ஹைக்கூ படைக்கவும், தனிமையில் கூவும் பறவையும் இலையுதிரும் காலமும் காத்துக்கிடக்க. நமது தமிழ் மண்ணில் வேர்ப்பலா...

மலைச் சரி வெங்கும் .... மணம் பரப்ப
வேலிப் பழத்திலும் வேட்கை எழும்

என்ன சுவை என்று அறிய ... அதுவே ஹைக்கூ. அதன் சுவை அவருக்கு பிடித்திருக்கிறது ... அவர் மூன்று வரிகளால் படைத்து நம்முன் படையலிடுகிறார். அதை இரசிப்பதை விடுத்து தர்க்கவாதிகள் எடுத்தியம்பும் சொற்களில் அவர்களின் அனுபவம் பேசவில்லை பொறாமையின் தொனி நர்த்தனமிடுகிறது.

யாரும் எழுத எழுத அடுத்த படி நிலையை அடைவர். ஹைக்கூவின் சிறப்பே. அதுதான். நமது கிராமங்களில் சகவீடுகளில் தாய்மார்கள் பள்ளிக்குச் செல்லும் குழந்தைக்கு தலைபின்னிவிடும் காட்சி மிக இயல்பானது.

**'தலைவாரி பின்னி முடிக்க**
**கரங்கள் இல்லை**
- எனும் போது மனது பதறும்....
**தாயை இழந்த குழந்தை போல.**
என்றே எண்ண ஓட்டம் பயிலும்.
**'விழுதுகளுடன் ஆலமரம்'**
என முடியும் வரிகள்

எத்தனை அற்புதம். விழுதுகள் காற்றி லாட அந்த ஆலமரம் தன் விழுதை பின்னிவிட ஆளில்லாத குழந்தையை நினைவூட்டும் வரிகள். நமது எளிய காட்சிகள் இயற்கையுடன் இணைந்தது. நாமும் அந்த மரத்தை கடந்திருப்போம் ஆனால் ஒரு ஹைக்கூ மனதில் கருவாகி உருவாகி அழகு மிளிரும் காட்சியது.

கண்முன் நிறுத்தும் தன்மை ஹைக்கூ வுக்கு உண்டு.

சொல்ல வந்ததை ... அட்சரம் பிசகாமல் அழகாக சொல்லிவிட்டார்

சகோதரர். வாழ்த்துகள்.

**அடுப்படியில் கிடக்கிறது**
**அன்றொரு நாள்**
**ஆசையாய் வாங்கிய சட்டை.**

மகனின் வளர்ச்சியை கெம்பீரமாய் தாய்க்கு என்றோ இரசித்த ஒரு நாள் ஒரு வருடமாக... அணிந்த சட்டை இப்போது... அம்மாவின் கைக்கு வெம்மை பரவாமல் தடுக்க, தன்னை வளர்த்த கைகளுக்கு. மகன் உடன் இருப்பது போல ஒரு மனவாசம்.. வண்ணம் போனால் என்ன? எண்ணம் இருக்கிறதே... மகன் உழைத்து தாய்க்கு உதவ எங்கோ நகரத்தில் உழல... அவனது சட்டை இப்போது அருகில், அவன் நினைவுகளை பெட்டகமாய் பூஜிக்கும் தாய்க்கு கந்தலாகி கரித்துணியாக.

இருந்தாலும் அதில் மகன் நினைவு ஓயாமல் ஓடிக் கொண்டிருக்க வீட்டு வேலையும் ஓடுகிறது. தனிமையில் முதுமையில் தாய்க்குத்துணை நினைவன்றி வேறென்ன?

---

**நூல் விமர்சனம் கவிஞர் தயானி தாயுமானவன்**



**வற்றிய ஆறு**

**ஒட்டிக்கிடக்கு**

**கற்களில் பாசி.**

பாசியென்பது பசுமையின் மிச்சம் கற்களிலோ குளிர்ச்சி பாசியினால். ஒட்டிக்கிடப்பது வறுமை என்றோ

செழிப்பாக வாழ்ந்தவனின் வாழ்வை இப்போது

வானம் பார்க்கும் வாழ்வு. சுழித்தோடிய தடம்

செல்வச்செழிப்பின் வரலாறு

இப்போது வழிப்போக்கனின் பேச்சாக

ஆறு அமைதியாக மணலாக கூழாங்கல்லாக

ஹோவென்ற வெள்ளத்தின் சத்தமில்லை.

ஆர்ப்பரிப்பு இல்லை. ஆனாலும் மணலுக்கடியில்

நீரோட்டம் உண்டு.

மனதின் ஈரம் உண்டு. பறவைகளே மீன்களே ஒரு நாள் நான் உங்கள்

வாழ்விடம்.

இப்போது வெறுமை. என... ஆயிரம் கதைகளைச் சொல்லும்

இந்த இளைஞர் ஹைக்கூ உலகில் புதிய கதவுகளைத் திறப்பார்.

கொஞ்சம் ஹைக்கூவில் மார்க்சீயம் கலந்து தருகிறார் ...

அங்கும் கூட தீப்பிடிக்கிறது வறுமை. போராட்டம் வெடிக்கும் முன் வேர்வை காயுமுன்...

**முதலாளியே... உன் கடமையை**

**சரியாகச்செய் ... கொடி பறக்கும்**

**எங்கள் சிகப்புக் கொடி பறக்கும்**

என்ற இந்தக்கவிதை தான் இந்நூலின் சிறப்பான ஹைக்கூ....

**தேயிலை தோட்டம்**

**நிலுவையில் உள்ளது**

**தொழிலாளர்களின் சம்பள பாக்கி.**

அற்புதமான நூல்

சகோதரரின் கைவண்ணம்.. வாழ்த்துகிறோம்

இன்னும் பல நூல் தந்து

தமிழை செழுமையாக்குங்கள், சகோதரரே.

இந்நூலை அழகாக பதிப்பித்த செங்கனி பதிப்பகத்திற்கு நன்றியும் பேரன்பும்..

**கவிஞர் தயானி தாயுமானவன்.**



# அவள்

## ந வா பிரபு



அவள் அப்படித்தான், எப்போதாவது திடீரென்று சாமி வந்தவள் போல ஆடுவாள். அவளைப் பார்த்து அந்தக் கிராமமே சில நேரங்களில் கைத்தொழும்.

அவள் சிறிய வயதில் இருந்தபோது, அவள் பாட்டி சொன்ன ஒரு கதை ஒன்று உண்டு. ஆடு மேய்க்கச் செல்லும் போது, மாரியம்மன் கோவிலின் பின்புறம் திடீரென்றுவந்தசத்தத்தில்மிரண்டு,மாரியம்மன் சன்னதியில், மாரியம்மன் பின்னால் ஒளிந்து கொண்டாளாம். அப்பொழுது மாரியம்மன் தோன்றி, 'கவலைப்படாதே, உனக்கு நான் இருக்கிறேன்' என்று ஆறுதல் சொன்னாராம்.

எங்கெங்கோ தேடி அவள் காணாமல் போகவே, அவள் பாட்டி இறுதியாக மாரியம்மன் கோவில் சன்னதியில், மாரியம்மன் பக்கத்தில் அமர்ந்து, மாரியம்மனைப் பார்த்து பேசியபடி இருக்கும் பேத்தியை கண்டு பயந்தே போனாள்.

எல்லா பெண்களையும் போல, அவள் பள்ளிக்குச் சென்றாள். எல்லா பெண்களையும் போல அவளும் பூப் பெய்தினாள். எல்லா பெண்களையும் போல, படிப்பு முடிந்ததும் வீட்டிலேயே அமர வைக்கப்பட்டாள்.

அவ்வப்பொழுது அவளுக்கு அருள் வந்து எதையாவது கேட்பாள் – பிரியாணி, தின்பண்டங்கள் என. அவளுக்கு ஏன் அப்படி நேர்ந்தது என்று நான் அவ்வப்போது யோசித்ததுண்டு.

அவளுக்கு அப்பொழுது 38 வயது, எனக்கு 22 வயது. ஏன் அவள் அப்படி செய்கிறாள் என்று நான் படித்த புத்தகங் களின் அனுபவ அறிவோடு யோசித்த

போது, ஒன்று விளங்கியது – அவள் தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டு, மற்றவர்களுக்காக நாடகம் போடுகிறாள். தான் ஏதோ ஒரு மாயவலையில் சிக்கிக் கொண்டதாக நினைத்து, தனக்குள் மருவிக் கொள்கிறாள்.

இந்தப் பெண்ணைப் பற்றி என் கல்லூரியில் எனக்கு தமிழ் ஆசிரியராக இருந்த அய்யா திரு மருதுவானிடம் பேசினேன்.

அவர் சொன்னார் : 'இது ஒரு விதமான மனோநிலை. சிறிய வயதில் ஏற்பட்ட பாதிப்புகள், வயதுக்குப் பிறகும் தொடரும். அந்தப் பெண்ணிற்கு சரியான வழிகாட்டுதல் இல்லை. பெற்றோரின் கல்வி அறிவு கூட இல்லை. அதனால் வந்த பாதிப்பு தான் இது.'

அதன் பிறகு ஒரு இரண்டு நாட்களில், அவள் அந்த ஊர் சலவைத் தொழிலாளியுடன் ஓடிப்போய் திருமணம் செய்துக் கொண்டாள்.

கடவுள் என்று கொண்டாடிய அதே ஊர், அவளைத் தூற்றியது. மன்வாரி தூற்றியது. திருமணமான சில மாதங்களிலேயே, அவனும் அவளை விட்டுவிட்டுப் போனான்.

பிறகு, அவள் தன்னந்தனியாகவே மாறிப் போனாள்.

சில நேரங்களில், ஊரில் 'பைத்தியம்' என்று கூட அழைக்கத் தொடங்கினார்கள்.

கடைசியாக, கடந்த பத்து நாட்களுக்கு முன்பு, அவள் இறந்துவிட்டாள். யாரும் இல்லாத அனாதையாக, உறவுகளுக்குள் ஒதுக்கப்பட்டு, உணவுகூட கிடைக்காமல் இறந்துவிட்டாள்.

ஒரு காலத்தில் தெய்வமாக நினைத்து, போற்றி பழகிய அத்தனை உறவுகளும், பொதுமக்களும், அவளை உதாசீனம் செய்தது.

அவளுக்கு ஏன் இந்த நிலை?

அவள் இறந்து பத்து நாட்கள் ஆனாலும், அந்த தாக்கம் இன்னும் மனதிற்குள் இருக்கிறது.

அவளின் இந்த நிலைக்கு என்ன காரணம்? தனிமைதான் நண்பர்களே!

தனிமை உண்மையில் மிகப் பெரிய கொடுமை.

உறவுகளுக்கு ஏங்குவோருக்கு தனிமை ஒரு கொடுமை.

அதே நேரம் அமைதியை விரும்புவோருக்கு, தனிமை ஒரு வரம்.

ஒரே நேரத்தில் தனிமை, கொடுமையையும் வரத்தையும் சேர்த்தே தருகிறது.

அன்பிற்காக ஏங்கி, ஏங்கி தனிமையாக இருப்பவர்கள், உன்னதமான மனநோயால் பாதிக்கப்படுகிறார்கள்.

அதே நேரம், அளவுக்கு அதிகமாக அன்பினால் – அந்த அன்பை கொடுத்து விட்டு, அதற்கு மாறாக அதே அன்பு திருப்பித் தரப்படவில்லையென்ற ஏக்கத்தோடு தனிமையில் செல்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இப்படி இரண்டு விதமான எண்ணங்களில் மனித மனம், பயணித்துக் கொண்டே இருக்கிறது...

# இளையவன் சிவா கவிதைகள்

1.

பேசிப் பேசி கலைத்துப் போய்
காதலைச் சரணடைந்தேன்.
மௌனத்தில் தாலாட்டி
உறங்க வைக்கிறாய்.

தேடித்தேடி கவிதையில்
இளைப்பாறினேன்
வாசித்த விதத்தில்
என்னை வாழ்வித்தாய்.

ஓயாத நச்சரிப்பில் உன்னை
கேள்விகளில் துளைத்தேன்
ஒன்றுமே செய்யாது
என்னைச் சீண்டினாய்

வேலையின் களைப்பை
உன் பெயரில் கலைப்பேன்
எல்லாவற்றையும் உள்வாங்கி
ஊமை ஆவாய்

குடுப்பைக்காரனின்
அவசரத்தை வாங்கி
ஓடிக்கொண்டிருக்கிறேன்
நீயோ கிழவியிடம் தடி வாங்கி
நடந்து பழகுகிறாய்

அவசர மனத்தின் அவஸ்தைகளை
அடக்க மாட்டாது அவதிப்படுகிறேன்
அனைத்தையும் அறிந்தும்
அச்சோ என சூழ் கொட்டுகிறாய்.

காதலின் சுவையை கணப்பொழுதும்
கைவிடாது ரசிக்கத் துடிக்கிறேன்
நீயோ கடைசி வரை
மௌனத்தையே
விடையெனத் தருகிறாய்.

2

தூசு

எனக்கான சாபங்கள்
பழிக்கத் தொடங்கட்டும்.
எனக்கான விரோதங்கள்
கத்தியைத் தீட்டி காத்திருக்கட்டும்.
எனக்கான குழி தோண்டல்கள்
நடந்தேறட்டும்.
எனக்கான புறக்கணிப்புகள்
அணிவகுக்கட்டும்.
எனக்கான தீண்டாமைக் கணங்கள்
நீண்டு போகட்டும்.
எனக்கான முட்டுக்கட்டைகள்
முன்னேறட்டும்.
எனக்கான தனித்துவிடப்படல்கள்
அரங்கேறட்டும்.
எனக்கான கண்ணீர் சுரப்பிகள்
அதிகரிக்கட்டும்.
எனக்கான கண்டன
அறிக்கைகள் தயாராகட்டும்.
எனக்கான கோபமுத்திரைகள்
கொதிக்கட்டும்.
எனக்கான எதிர்ப்பு
ஏவுகணைகள் பாயத் தயாராகட்டும்.
எனக்கான அதிருப்திகள்
அவை ஏறட்டும்.
காதல் நுழைந்து விட்டபின்
என்ன செய்யும் இவை?

3

கோபத்தின் உச்சியில் குதிக்கும்
மனதை சரிசெய்ய
உலவிடும் கால்களுக்கும்
உலரளாகும் பாடலுக்கும் மத்தியில்
நின்றுவிடும் தருணத்தைத் தேடுவேன்.
வியப்பின் எல்லையில்

என்னையே திரும்பிப்
பார்க்கும் நொடிக்குள்
எட்டிப்பார்க்கும் கர்வத்தை
அழுத்தி விடுகிறது
உள்ளே ஒளிந்திருக்கும்
தோல்வியின் வடு.
பொதிமூட்டையென
சுமக்க முடியும் தருணத்திலும்
நிராயுதபாணியாகவே
அடைக்கப்படுகிறேன்
கல்லறைப் பெட்டியில்.

4.

நீங்கள் அணைத்துவிட்டு
வணங்குவது
காலைவாறிவிட
என்பதன் நோக்கத்தில்
வெளிச்சத்தை நாங்களே
வரவழைத்தபின்
உங்களின் பாசாங்கு முகத்தில்
நடந்துகொண்டிருப்பது
நவரச நாடகமன்றி
வேறென்ன.
அவற்றிலும்
உங்களின் கற்பித
விலங்குகளின் கலவையைக்
காண்கையில்
வனமிழந்தவைகளின்
வாழ்வியல் புரிகிறது.

இளையவன் சிவா



## கவிதைத் துளிகள்.

சிந்தனையில் தலைசாய்த்து
சாதனையில் துயில் பயில
வாசிப்பே அத்திவாரம்.

உன்னை வந்தடையும்
ஒவ்வொரு கடினங்களும்
உனக்கு வழிகாட்டியே
கடினமதில் சிந்தை கொண்டால்
வலி அற்று வாழ்வாய்.

தன்னம்பிக்கை உள்ளம்
தோல்வி கண்டபின்
துவண்டு விழாது
வெற்றியை நோக்கி
துரிதமாக செல்லும்.

உடலில் ஏற்படுவதல்ல அங்கவீனம்
உள்ளம் சோர்வடைவதே அங்கவீனம்.

முயற்சியுடன் நீ வெற்றியை தேடினால்
முடிவில் வெற்றி உன்னை தேடும்.

பயந்து நடந்தால்
எறும்பும் உன்னை சிறை பிடிக்கும்
எழுந்து நடந்தால்
எரிமலையும் உனக்கு வழி கொடுக்கும்
முயற்சியே பலன்.

சவாலை கண்டு கலங்காதே
அது உன்னை செதுக்கும் சிற்பி
உன் இதயத்தை வலுப்படுத்தும் சக்தி.

நீ பிறந்தது முதல் இறக்கும் வரை
உனக்கு அகராதி உன் பெற்றோர்கள்.

அறியாமையை போக்க
அறிவை அள்ளித்தந்த
அற்புத ஞான ஊற்று ஆசான்கள்.

இறந்த கால எதிர்கால சிந்தை அறியாத
நிகழ்கால சிட்டுக்கள் சிறுவர்கள்.

முஹமட் நபீஸ்

# வெண்பா போட்டி 40

## காலம் : மார்ச் 2025

துத்தி

முத்திப் பழுத்திருக்கும் மூலத்தை நம்வீட்டுத்
துத்தி இலைக்கீரை தூரெடுக்கும் - கத்தியதை
வைக்காமல் காத்துநல வாழ்வளிக்கும் கீரையதாம்
கைக்காது தின்று களி !

பாவலர் கோவதன். மலேசியா

.

பெருங்காயம்

பெரும்வாயுத் தொல்லையோ வந்து வதைத்தால்
பெருங்காயம்  உண்ணுக பெற்று - தரும்நலம்
வாயுவின் துன்பம் மடிந்திடும் நன்றாக!
பாயுமின்பம் என்றுமிங்குப் பார்!

கெங்கை பாலதா

.

பாகற்காய்

ரத்தத்தில் சர்க்கரை ரம்மியமாய் ஆகிட்டா
மொத்தமும் போகும் முனைப்பொடு பத்திரமாய்
வாழவே பாகற்காய் வாங்கியுண்பாய் நல்லதாகும்
வீழ விடாது விரும்பு

எழுத்தாளர் நாகா

.

திப்பிலி

கரகரன்னு பேசுறியே தம்பிஎன் னாச்சு!
வரவர உன்குரல் நல்லா - வரலயே! நீ
காய்ந்தசிறு திப்பிலியை நல்லா அரைச்செடுத்து
வாய்கொள்ள ஆகும் குணம்.

லோகநாதன்

முடக்கறுத்தான் கீரை

முடக்கறுத்தான் கீரை முதன்மைமிகு மூலி
முடக்கிடும் மூட்டுவலி முந்தி - திடமாய்
உலவிடத் தேர்ந்த உணவாய் திகழ்ந்து
நலத்தைத் தருமதை நாடு !

எம்.ஆர்.தனசேகரன், மலேசியா.

மஞ்சள்

மஞ்சளும் தேனும் மகத்தான தாகிடும்
கொஞ்சம் குழைத்துக் கொடுத்தேநீ - துஞ்சாமல்
நம்மை துரத்தி நலிந்திட வைத்திடும்
தும்மல் சளியைத் துரத்து.

பாவலர்மணி நிறைமதி நீலமேகம், பெண்ணாடம்

தேன்

சுத்தமான தேனெடுத்துச் சுண்ணாம்பும் கொஞ்சமிட்டுப்
பத்தொன்று போட்டாலே போதுமே - கத்தவிடும்
பாழுஞ் சுளுக்கும் பறந்தோடிப் போய்விடும்
வாழுமிந்த வைத்தியமே வான்!

அ.வள்ளிபாபு, நெய்வேலி.

ஆடா தொடையிலை

ஆடா தொடையிலையில் ஐந்தாறை ஆய்ந்தெடுத்து
சூடாய்க் கொதிநீரில் சுண்டவைத்து -ஊடாய்
மிளகினிப்புச் சேர்த்து மிடறாய்க் குடித்தால்
வளரும்நோய் வற்றிவிட வாய்ப்பு.

மாலதி திரு

கருஞ்சீரகம்

பெருநோய்கள் கூட பொசுக்கென்றுப் போக
கருஞ்சீ ரகத்தையுட் கொள்க - உறுதியாய்ச்
சாவினை அல்லால் சகல உடற்நோய்க்கும்
மேவிடும் நன்மருந்தாம் அஃது.

பக்ருதீன் இப்னு ஹம்துன்

.

மிளகு

வளவாழ்வு காண வரும்நோய்கள் ஓட
மிளகதனைச் சேர்ப்பாய் உணவில் - வளமாய்
பலகாலம் வாழப் பயன்நல்கும் பார்நீ
நலம்நல்கும் நல்மிளகு நன்று.

கசகசா

தூக்கமிலாத் தன்மை தொடரும் சளிக்கட்டு
ஏக்கப் பெருமூச்சு என்றென்றும் - போக்க
கசகசா உண்டால் கழிச்சட் குறையும்
கசகசா நல்ல மருந்து.

நெல்லிக்காய்

நெல்லிக்காய் உண்டக்கால் நீர்ச்சுரப்பி தானியங்கும்
எல்லாநோய்த் துன்பமதும் இல்லாமல் - செல்லுமதால்
வாந்தி மனநோயும் வாராது போக்கிவிடும்
ஏந்திடு நெல்லிக்காய் ஏற்று.

பாவலர் தாழை ந.இளவழகன், மணப்பாறை.

.

வெந்தயம்

பந்திக்கு முந்திசென்று பாய்துண்ண பாவத்தால்
நொந்தும் வயிற்றுவலி நோயாகி - வந்தாலோ
வெந்தயத்தை நெய்யில் வறுத்தபின் மோரிலே
தந்தாலே போகும் தகர்ந்து

மலர்மைந்தன், கல்பாக்கம்

.

பெருங்காயம்

வாய அடக்காம வாயு புகுந்திடுச்சா?
சாய முடியாம சாஞ்சாலும் - ஓயலையா?!
கொஞ்சம் பெருங்காயம் கூட்டிய நீரருந்தப்
பஞ்சாப் பறந்துவிடும் பார்!

செ. இராசா

.

**இஞ்சி**

இஞ்சித்தேல் சீவி இடித்ததன் சாறெடுத்து
கொஞ்சமாய்த் தேனுங் குழைத்துநீ எஞ்சிடாமல்
உண்ணவே தானாக ஓடும் இருமலும்
திண்ணமாய்த் தீருந் தெளி...

ஜனனி, கோவை

.

**பாலுடன் பூண்டு**

தாய்ப்பால் சுரக்குந் தரணியிற் தாய்மாரின்
நோய்க்கு மருந்தாகி நோகாமற் - சேய்தன்னை
ஆய்ந்தறிந்து காத்திடும் அன்புடன்பா லில்பூண்டு
வாய்நிறைய உட்கொள்ளல் வந்து .

சரஸ்வதி பாஸ்கரன் .

.

**தூதுவளை**

காதுமந்தம் உண்டா கவலை எதுக்குமக்கு
தூதுவளைக் கீரைத் துவையலெடு - ஏதுவாம்
தும்மல் சுவாசத் துவார மடைப்பெலாம்
இம்மியும் வாரா(து) இனி

குலா கிருஷ்ணா, ரொறொன்ரோ / கனடா

.

**சீரகம்**

வெற்றுக் குடிநீரில் வேண்டியநற் சீரகத்தைப்
பற்றுடன் இட்டுப் பருகுவோம் - தொற்றெல்லாம்
அண்டாமல் ஓடும் அழகாய் உடல்மாறும்
கொண்டாடும் மேனி குளிர்ந்து

இரா அழகர்சாமி, மூக்கிரட்டை

.

**மூக்கிரட்டை**

சிறுநீர கத்தினது சீரான வேகம்
உறுதியாகும் சர்க்கரை ஓடும் - முறையாக
மூக்கிரட்டைக் காய்ச்சி முழுதாய்க் குடிப்பதால்
போக்கும் பிணியைப் புகல்

தென்றல் கவி

.

கல்லுப்பு - கிராம்பு

பல்லு வலியிருந்தா பக்குவம் சொல்றேன்கேள்
கல்லுப்புக் கூட கிராம்புரெண்டு - செல்லமா
கல்லுல தட்டிவெந் நீர்காய்ச்சிக் கொப்பளிக்க
பல்லுவலி போகும் பறந்து

க.சங்கரபாண்டியன்

.

துளசி

நெஞ்சுசளி தீயிலிட்ட நெய்யாகும் காய்ச்சலுமே
பஞ்சாகப் போகும் பறந்துடலில் - இஞ்சிதனைத்
தட்டித் துளசியுடன் தண்ணீரில் காய்ச்சருந்து
பட்டறிவின் பாட்டி மருந்து !

பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்.

.

கல்யாண முருங்கை

நெஞ்சு சளியும் நெடுநாளாய் வாட்டுதோ?
கொஞ்ச உறக்கமும் கூடலையோ! - அஞ்சாதே
முள்ளு முருங்கையிலை முற்றியதாய்க் கொண்டுவா
தள்ளிச் சளியும் தணித்து.

பாவலர்மணி வா.சண்முகம்

.

வேப்பிலை

வேப்பிலை நோயை விரட்டிடும் சக்தியாம்
சாப்பிட்டால் நோயின் கிருமியிடம் - காப்பாற்றும்
ஏப்பமில்லா வாயுவும் ஏறா அழுத்தத்தை
மோப்பத்தை செய்தாலே மேன் .

சாந்தி இரவீந்திரன், நெதர்லாந்து

.

.

தூதுவளை

தூதுவளை துய்த்துண்ண தூரவோடும்மூக்கொழுகல்
காதுநோய்கள் மார்ச்சளி காசநோய் - தீதாம்
பசிமந்தம் தாதிழப்பு போற்பலமுள் நீக்கல்
உசிதமாகும் பண்படுத்தி உண்.

வானதி சந்திரசேகரன்

.

## பிரண்டை

பிரண்டைக் கொளுந்து பிடுங்கி அரரைத்துத்
திரண்ட துவையலைத் தின்றால் – நரம்புத்
தளர்ச்சி அகலும்; தசையு மெலும்பும்
வளர்ச்சி அடையும் வனப்பு

தனராஜ் பாப்பணன்

.

## பச்சரிசி

உருண்டு திரண்டே உடலில் இருக்கும்
மருவைக் கரைக்கும் மருந்தாம் – விருந்தாகும்
அம்மானாம் பச்சரிசி ஆண்மை பெருக்கிடும்
சும்மா எடுத்துச் சுவை.

பாவலர் க.சண்முக சிதம்பரம்

.

## கடுக்காய்

கடுக்காய்த்தூள் கொஞ்சம் கலந்து குடிக்க
மிடுக்காய் நடப்பாய் மிளிர – தடுத்திடும்
பல்வலியை வாய்ப்புண்ணை! பாட்டி மருந்தினைச்
சொல்லி அருந்து சுகம்.

ஓசூர் மணிமேகலை

.

## மந்திக் கறி

மந்திக் கறியது மந்திரம் செய்ததோ
கந்துவட்டி யாகவே கக்குவான் – முந்தும்
இருமலும் சட்டென இல்லையே காண்க
மருந்ததில் சித்தமே மாற்று

பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை

.

.

## அத்தாப் பொருதி

வெட்டிய புண்ணும் விருட்டென ஓட்டிவிடும்
கொட்டுங் குருதியுங் கெட்டியாம் – சட்டென்றே
அத்தாப் பொருதியிலை அவ்விடம் பூசிவர
சித்தமாய் ஆறும் சிராய்ப்பு.

செல்லமுத்து, மேல்மங்கலம்

.

## பதினி பு - தினா

மதினியே உங்களுக்கு மாத்திரை வேண்டாம்
பதினி குடிக்கப் பழகு - கதியாய்ப்
புதினா உடன்சேர் புதுமைச் சுவையாம்
மதிக்காத வெப்ப மகற்று.

சோ. சுந்தரேசுவரி.

.

## வெற்றிலை

வெற்றிலைத் தேனுடன்  வால்மிளகைச் சேர்த்துவாயில்
குற்றமுற மென்றிட  தின்றவுடன் - பற்றிய
வற்றா சளியுடன்  வறட்டும்  இருமலையும்
முற்றும் குறையும் முயன்று

கவி நிலா மோகன், தஞ்சாவூர்.

.

## கசாயம்!

திப்பிலி சுக்கு மிளகுக் கசாயத்தால்
அப்போதே மார்புச் சளியகலும் - தப்பாது
வாரம் இருமுறை வைத்தே அருந்திட
தூரமாய்ச் செல்லுமே தொற்று.

இரா.கவிதா, திண்டுக்கல்

.

## பாட்டி வைத்தியம்

கடுக்காயும் மஞ்சள் கடுகளவில் கொண்டு
நடுக்கல்லில் நன்றே நசித்தே - அடுத்ததன்மேல்
பூசசேற்றுப் புண்ணும் பிரிந்தோடும். வீட்டிலுண்டு,
மாசில் குணத்தின் மருந்து .

குயில்.மு.இரசியா பேகம்.

.

## இயற்கை நிறமி

கற்றாழை பாலெடுத்து பாங்காக கிண்ணமிட்டு
குற்றாத நெல்லி அரைத்தெடுத்தச்  சற்றே
கலந்து தலைமயிரி லிட்டால் கருக்கும்
இளமை நிறங்காணும் பார்

மருத்துவர் தேவி

.

பால்

முக்கண்ணாங் காயுடைத்து மூவிரண்டு சில்லெடுத்துச்
செக்கன்ன கல்லுரலில் சேர்த்திடித்துப் - பக்குவமாய்த்
தூய்வெள்ளைப் பாலெடுத்துத் தூங்கும்முன் நாங்குடித்தல்
வாய்ப்புண்ணைப் போக்கும் வழி..

வள்ளி முத்து

.

மாம்பாஞ்சான்

குடலுள்ள காயத்தால் குற்றுவலி வாட்ட
நடமாடு கின்றாயோ நாளும் - உடலுள்ள
நோய்போகும் மாம்பாஞ்சான் நோண்டிச் சமைத்துண்ண
வாய்க்கும் சுகம்தம்பி வந்து.

தமிழ்க்கீரன், ஈழநாடு.

.

துளசி

துளசியின் சாற்றுடன் தூய்மையான தேனை
அளவோடு நாளும் அருந்த இளமை
வளத்துடன் இன்பங்கள் வாழ்வில் செழித்தே
இளகிடும் நோய்கள் உணர்.

கவிஞர் க.தங்கவேலு, கிருட்டிணகிரி

காலையில் நீர் குடித்தல்.

காலை எழுந்ததும் கண்டிப்பாய் நீரருந்தி/
வேலை தொடங்கிட வெற்றியே - பாலைப்
பனையின் வலுவாகப் பாங்குடன் மேனி
வினைகள் நடத்தும் விரைந்து.

பொ.முத்துராக்கு

.

மிளகு - முடக்கொத்தான்

மூன்று மிளகும் முடக்கொத்தான் மூவிலையும்
தோன்றும் வலியைத் துரத்துமாம் - தேன்கலந்(து)
தென்று முடன்விழுங்க வென்புச் சுழியகன்று
தன்பால் வலிதீருந் தான்.

வீரா மோகன்

# வெண்பாப் போட்டி (பயணம்) 41

**போட்டியின் கால அளவு:**
மே 01 முதல் 12 வரை 2025

.
இம்மாதப் போட்டி....
.

வன்மமில்லா ஆட்சி வளர்வதற்கு நாமெல்லாம்
என்னசெய்ய வேண்டும் இயம்புங்கள்? - ?????

............... ................. ........... ............
........... ................ ........

இந்தப் பாடலின் தனிச்சொல்லில் இருந்து தொடங்கி பாடலை முழுமைபெறச் செய்வதே இம்மாதப் போட்டியாகும்.

**அசத்துங்கள் கவிஞர்களே....**

**ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம். வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.**
**ஒருவர் ஒரு வெண்பா மட்டுமே எழுதவும்.**

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் ப ட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்ப னைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகி ருங்கள் போதும்.
காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்.
தளர்வுகள் :-
தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டா யம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....
**தமிழ்நெஞ்சம் ஆசிரியர்**
மற்றும்
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு

# வாசிப்பு...

**இதயமலர்** மேற்கு தாம்பரம்

ஊடக உலகத்தில் உள்ளங்கையில் அலைபேசி, இருக்கும் போது வாசிக்க வேண்டிய அவசியம் என்ன? கேட்கலாம். வாசிப்பில் கவனம் எதற்காக? வாசித்தால் ஆகப்போவதென்ன? அடுக்கடுக்காய் கேள்விகள் அனைவரிடத்திலும். ஒரு காலத்தில் மாத, வார, தின இதழ்கள் வரும்போது அவைகளின் வரவுக்காக காத்திருந்தவர்கள் அதிகம். அலைபேசியின் தாக்கத்தால் இதழ்கள் தனது முகவரியை இழக்கத் துவங்கின. முகத்தைத் தொலைத்தன. இது ஆரோக்கியமானதா என்றால் நிச்சயமாக இல்லை.

ஊடக உள்ளடக்கங்கள் முழுமையானதாக இருப்பதில்லை. முதலாளிகளின், படைப்பாளிகளின் ஊடக எண்ண அலைகளுக்கேற்ப எழுத்துக்கள் வளையத் தொடங்கி விட்டன. உண்மை இருந்தாலும் காட்சிப்படுத்தும்போது தன் கொள்கைக்கு ஏற்ப திரையிடுகின்றனர். வெளியிடுகின்றனர். இருட்டடிப்பு இருக்கத்தான் செய்கிறது.

ஊடக சேவைகளில் நாம் நுழையும் போது கவனச் சிதறல்கள் உண்டாகின்றன. எதில் நாம் மனம் ஒன்றி பார்த்து வருகின்றோமோ அல்லது தேடுகின்றோமோ அதுதொடர்பானவை மட்டுமே நம் காட்சிக்கு வருகின்றன. நமது ஒவ்வொரு அசைவுகளும் நவீனத்தின் பெயரால் கண்காணிக்கப் படுவதை உணராமல் காலத்தை விழுங்கி நம்மை அடிமைப் படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

ஊடகங்கள் எதையும் முழுமையாகச் சொல்வதில்லை. 'ஊடகம் தற்காலிக மகிழ் வையே தருகிறது. தேடுதல் இன்ப மாகவே இருப்பதால் வருவதும் அப்படியாகவே இருப்பதினால் மறு பாதியை உணர்வதில்லை'. வாழ்க்கை என்பது இன்பம் மட்டுமில்லை. 'அனுபவம் வேண்டுமென்றால் துன்பம் உன்னைத் தழுவ வேண்டும்'. ஆனால் வாசிப்புக்குரிய நூலானது அனைத்து உணர்ச்சிகளையும் தாங்கியதோர் முதலீடாக உள்ளது. வாசிப்புக்கு வயதும் ஒரு பொருட்டல்ல. வாசிக்கும் போது மட்டுமே சொல்வளம், மொழி வளம், எழுத்தின் வளம் பிடிபடும்.

வாசிப்பு என்பது வளர்ச்சியின் விதை. 'என்னை மேலிருந்து கீழாக படி உன்னை கீழிருந்து மேலாக உயர்த்துகின்றேன் என்ற வாலியின் பார்வையாக' புத்தகத்தை நேசிக்க வேண்டும். வாசிக்கவும் நேசிக்கவும் உகந்த நூல்களை பூசிப்பதில் தவறில்லை. புத்தகமும் ஓர் ஊடகம் தான் என்றாலும் அதில் அனைத்து உணர்வுகளும் உள்ளடங்கி இருக்கும். 'வாசிப்புக்குரிய நூல் என்பதை கற்றறிந்த மேலோர் வாழ்த்தியோ பாராட்டியோ கருத்துரைத்து இருப்பர்'. விமர்சனம் கூட நூல்களுக்கு உண்டு.

எத்தனையோ மொழிகளுக்கு எழுத்து வடிவம் இல்லை. நம் மொழிக்கு அழகான வளமையான சிறப்பான எழுத்து வடிவம் உண்டு. வார்த்தைகளின் உச்சரிப்பால் நோய்கள் தீரும் என்பதாகக்கூட கேள்விப் படுகின்றோம். உணர்வோடு நீ உச்சரிக்கும்

போது ஆரோக்கியம் மேம்படுகிறது. மூச்சுப்பயிற்சியை ஒத்த வாசிப்பை புறந்தள்ளாதிருத்தல் நலம். வாசிப்பு என்பது குழந்தைப் பருவத்திலேயே வரவேண்டும். அப்படி வந்தால் மட்டுமே வாசிப்பின் பெருமை உணரலாம்.

அலைபேசியில் இருந்தாலும் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்றோ தேவைப் படும் போது தேடிக்கொள்ளலாம் என்றிருப்பதால் வாசிப்பு இல்லாமலே போய்விடுகிறது இதிகாசங்களாகட்டும் புராணங்கள் ஆகட்டும் பக்தியோ, சமூகமோ எழுத்துக்களின் தாக்கத்தால் மட்டுமே மொழி வளம் பெறுகிறது என்பதை உணர வேண்டும். வாசிக்கும் போது தான் உள்ளத்துள் கருத்து நிலை பெறுகிறது என்பதையும் உணர வேண்டும்.

புத்தகம் ஒரு ஊடகமே என்றாலும் புத்தகத்தில் காணும் முழுமை மற்றவற்றில் இருக்க வாய்ப்பில்லை. 'நூலகங்கள் நமக்கான வரப்பிரசாதம். வாசிப்பை தினக்கடமை யாக்கியவர்கள் தெளிவாக எதையும் பேசுவார்கள். சொல் வறட்சி இவர்களுக்கிருப்பதில்லை'. கற்றலின் கேட்டல் நன்று என்று சொல்வார்கள். ஆசிரியர் வாசித்து மாணவர்கள் கேட்டு பின் மாணவர்கள் வாசித்து ஆசிரியர் கேட்கும்போது மொழி மேன்மையாகிறது.

கண்கள் பார்த்து வாய் உச்சரித்து பொருளுணர்ந்து படிக்கும் போதோ, கேட்கும் போதோ, வார்த்தைகளின் வளமை சிறப்பாகிறது. புரிதலின்றி வாசித்தால் அது நிலையின்றி போய் விடுகிறது. வாசிப்பு தனிமனித ஆற்றலின் உந்து சக்தியாகும். தினமும் வாசிப்பதால் கவனிக்கும் திறன் மேன்மையாகிறது.

அன்றாட வாழ்வியல் பிரச்சனைகளுக்கு வாசிப்பு மனதை தெளிவாக்குகிறது. எத்தனையோ எழுத்தாளர்கள் தங்களது சிந்தனைகளை உணர்வுகளை நூலாக்கிக் கொடுத்து உள்ளார்கள். அவற்றை யெல்லாம் படிக்க வேண்டாமா? படித்தால் தானே அன்றைய நிலைப்பாடு என்ன வென்று அறிய முடியும். ஊடகத்திலோ திரைப்படத்திலோ நாம் அறிய முடியாத பல செய்திகள், வர்ணனைகள், நூலில் மட்டுமே உண்டு. கற்பனையை கண்முன் நிறுத்தி வாசிக்கும் போது தான் உண்மை புரியவரும்.

சாண்டில்யன் கல்கி சுஜாதா இவர்கள் எழுத்தில் செய்த புரட்சியே இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் திரைப் படமாக உருவெடுத்துள்ளதை உணர வேண்டும். புரிதலுடன் கூடிய வாசிப்பு மேலானது. நம்மை தமது எழுத்துக்களால் கட்டிப்போட்ட எழுத்தாளர்கள் நிறை யவே உண்டு. ஒவ்வொருவருக்கும் ஆயிரக் கணக்கில் வாசகர்கள் இருக்கிறார்கள். இவைகளை யெல்லாம் இன்றைய தலை முறை அறிய வேண்டும். அதற்கு வாசிப்பு வேண்டும்.

முன்பெல்லாம் ஒவ்வொரு ஊரிலும் படிப்பகங்கள் இருந்துள்ளன. காலையில் வாசிக்க பல தினஇதழ்கள் அங்கு தினமும் வரவாயின. வாசிப்போடு அது தொடர்பான விளக்கமோ விமர்சனமோ உடனுக்குடன் பேசப்பட்டு வந்தன. இன்று உலகம் உள்ளங்கையில் என்று சொல்வது உண்மையில்லை. உனக்குத் தேவைப்படும் போதே தேவையானதை தேடுவது ஆரோக்கியமாகாது. உடனுக்குடன் உலக நடப்பை அறிய வாசிப்பு அவசியம். அலை பேசியில் நுனிப்புல் மேய்ந்த கதையாகவே எல்லாம் இருக்கும். உண்மைக்கும் உத்திர வாதம் கிடையாது. பதிவேற்றியவரின் குணத்தைப் பொறுத்துதான் அவை அமையும்.

அரைகுறையாய் அறிவதற்கு கூட

வலைக்கான கட்டணம் செலுத்த வேண்டும். நூலகத்தில் எத்தனையோ தரவுகள் உண்டு. எதற்கும் பணமில்லை. வாசிப்புக்காகவே நூலகங்கள் என்பதை அறிய வேண்டும். அதை பயன்படுத்திக் கொள்ளை வேண்டும். வாசிப்பு என்பது பொழுது போக்கு இல்லை. இன்றைய அவசரத்தில்வாசிப்பைமறந்தவர்களாகவே நாம் இருக்கின்றோம். நூல்களும் டிசிட்டல் முறையில் வந்தாலும் யாரும் வாசிப்ப தும் இல்லை.வாசிப்பு குறைந்தால் சிந்தனைத் திறன் மேம்படாது. கற்பனை மிகுந்த கதைகளோ, படைப்புகளோ, வீரம் தழுவிய வரலாற்றுப் படைப்புக்களோ, படிக்கும்போது மனதில் கிளர்ச்சியை உண்டாக்கும். ஒவ்வொரு நாளும் வாசிப்புக்கு என்ற ஒரு நேரம் இருந்தால் மிகவும் நல்லது.

தனி வாசிப்போ கூட்டு வாசிப்போ, வாசிக்க வேண்டும். கருத்துக்களை உள் வாங்கி எழுதப்பட்ட காரண காரியத்தை கலந்துரையாடினால் புதிய புதிய நோக்கங்கள் மனதில் ஏறும். நேரமில்லை என்பது இன்றைய நடை முறையில் அதிகம் கேட்கும் குரலாகவே உள்ளது. இது வருத்தமளிக்கும் ஒன்றாகும். உனக்கு பிடித்தமான படைப்பை நீ வாசிக்க வாசிக்க, உனது மனம் விரிவடையும்.

பள்ளிகளில் விளையாட்டுக்கு ஒரு நேரம் இருப்பது போல வாசிப்புக்கும் ஒரு நேரம் ஒதுக்குவது பிள்ளைகளின் அறிவுத் திறனை மேம்படுத்தும். மனனம் என்பது வாசிப்பாகாது. மதிப்பெண் எடுக்கும் வழி அவ்வளவுதான். வாசிப்பதால் அனைத் துக்கும் வழி பிறக்கும். அறிவார்ந்தோரின் அறிவாற்றல் மிகுந்த படைப்புகளை வாசிக்க வேண்டும். நிறைய வாசிப்பவன் நிறைய அனுபவங்களைப் பெறுகின்றான். வாசிப்பு உன்னை உயர்ந்த இடத்தில் வைக்கும்.

வாசித்ததை பிறருக்கு எடுத்து உரைக்கும் போது நீ பலர் போற்றும் தலைவனாக மாறுகிறாய். வாசித்தவர்கள் தான் உரையாற்ற முடியும். புரிந்து வாசித்தவனின் உணர்வுமிகு பேச்சால் உலகத்தையே புரட்டிப்போட்ட வல்ல மையை நாம் அறிந்துள்ளோம். தெளிவான வாசிப்பில் தேவைகளுக்கு விடையுண்டு. மீண்டும் வாசிப்போம்.

வாசித்தால் மட்டுமே வளமை காண முடியும்.




மின்னொளி
சிறுவர்கள் காலாண்டிதழ்
ஆண்டு 1 - இதழ் 1
சிறுவர் கதைகள்
அறிவுத் துணுக்குகள்
இன்னும் பிற பொக்கிஷங்கள்